வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

**முக்கிய அறிவித்தல்**

**மில்க் வைற் நீல சோப்**

தற்பொழுது புதிய ரசாயன பொருட்கள் சேர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

**20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்**

கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.

இன்றே வாங்கி பரீட்சித்து பாருங்கள்.

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆவணி திங்கள் 27-ம் நாள் (12—9—1965) ஞாயிற்றுக்கிழமை ஐ.அவ் 15 | இதழ் 16

## வரவு - செலவு விவாதம் முடிந்ததும்

# தமிழ் மொழி மசோதா வரும்

## அரசாங்க வட்டாரம் ஊர்ஜிதம் செய்தது

### தமிழ்த் தினசரியின் செய்திக்கு மறுப்பு

**வரவு செலவுத்திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் உடனடியாக தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட விருப்பதாக அரசாங்க வட்டாரங்களிலிருந்து நம்பகமான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. எந்தவிதமான காரணங்களைக் கொண்டும் இம்மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்படப்போவதில்லை என்ற உறுதியான தகவல் நமது நிருபருக்குக் கிடைத்திருக்கிறது.**

ஐ. நா. சபை சென்றுள்ள இலங்கைக் குழுவினருக்குத் தலைவராகச் சென்றுள்ள திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இலங்கை திரும்பிய பின்னரே தமிழ் மொழி உபயோகச் சட்டம் பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற செய்தி ஒன்றினை ஒரு தமிழ்த் தினசரி பிரசுரித்திருந்தது. இச்செய்தியினை விட்டு அரசாங்க வட்டாரங்களை அணுகி நமது நிருபர் விசாரணை செய்தார். இச்செய்தியில் எதுவித உண்மையும் கிடையாது என்று அரசாங்க வட்டாரங்கள் திட்டவட்டமாகக்கூறின. மேலும் எந்த விதமான காரணங்களுக்காகவும் இம்மசோதாவை ஒத்திவைக்க அரசாங்கம் ஆயத்தமாயில்லை என்ற தகவலும் நமது நிருபரிடம் தெரிவிக்கப்பட்டது.

வரவு செலவுத்திட்ட சம்பந்தமான வாக்கெடுப்புகள் யாவும் முடிவடைந்த பின்னர் தமிழ் மொழி உபயோகச் சட்ட மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவலை அரசாங்க வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

ஐ. நா. சபைக்கு

### பொன்னம்பலம் செல்வதை எதிர்க்கவில்லை

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐக்கிய நாடுகள் சபைக்கு, இலங்கைக் குழுவினருக்குத் தலைமை தாங்கிச் செல்வதை தமிழரசுக் கட்சி ஆட்சேபித்ததாக ஒரு பொய்ப்பிரசாரத்தை சிலர் வேண்டுமென்றே பரப்பி வருவதாகத் தெரிய வருகிறது. இச்செய்தி எந்தவிதமான ஆதாரமுமற்றது என்று தமிழரசுக்கட்சி தலைமைப் பீடம் 'சுதந்திர'னுக்கு தெரிவித்துள்ளது.

திரு. பொன்னம்பலம் ஐ. நா. சபைக்குச் செல்வதையிட்டு தமிழரசுக் கட்சியின் அபிப்பிராயத்தை அரசாங்கம் கோரியபோது, கட்சி தனது பரிபூரண சம்மதத்தையும் ஒப்புதலையும் அளித்ததாகத்தெரிகிறது.

## கொம்யூனிஸ்டுகளின் ஊடுருவல் அம்பலம்

**கொம்யூனிஸ்ட் ஊடுருவற்காரர்கள் இலங்கை எங்கனும் செயற் பட்டுவருவதாக நம்பப்படுகிறது. தாங்கள் கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிவிட்டதாக இவர்கள் கூறிக்கொண்டு தேசிய சங்கங்களை ஊடுருவவே திட்டமிட்டுச் செயல் புரிவதாக அதிகார பூர்வமான செய்திகள் கிடைத்துள்ளன.**

பல வருடங்களாக கொம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர செயலாளர்களாக விருந்த சில நபர்கள் இப்பொழுது கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தாங்கள் வெளியேறி விட்டதாக பிரசாரம் செய்யத் தலைப்பட்டுள்ளனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பல கொம்யூனிஸ்டுகள் தங்களை கொம்யூனிஸ்டுகள் அல்லர் என்று காட்டிக் கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டுவருவதாகத் தெரிகிறது.

இவர்கள் உண்மையிலேயே கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிவிடவில்லை என்றும், கொம்யூனிஸ்ட் அல்லாதவர்களால் நடாத்தப்பட்டு வரும் தேசிய இயக்கங்களில் ஊடுருவல் செய்வதற்காகவே இவ்வாறு வேடமிடுகின்றனர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் பிரபலமான கொம்யூனிஸ்ட் வாதியாகவிருந்த ஒருவர்—கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவில் பிரதம உறுப்பினராகக் கருதப்பட்டவர்—தாம்கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும், கொம்யூனிஸ்ட்டுகளின் போக்குத் தமக்குப் பிடிக்கவில்லை என்றும் நமது நிருபரிடம் தெரிவித்தாராம். அத்துடன் தன்னை ஒத்த தொழிலாளர்களை இணைத்து அரசியற் பற்றற்ற தொழிற் சங்கம் ஒன்றினை அகில இலங்கை ரீதியில் அவர் தொடங்க விருப்பதாகவும் கூறினாராம்.

கொம்யூனிஸ்ட்டுகள் ஊடுருவல் மூலம் ஏனைய தேசிய இயக்கங்களுள் நுழைந்துவிட எத்தனிக்கிறார்கள் என்பது இவருடைய கூற்றிலிருந்து மெய்யாகி விட்டது.

## மாநாட்டை கூட்டவும்

### தமிழரசுத் தலைமைப் பீடத்துக்கு கொழும்புக்கிளை வேண்டுகோள்

**இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பத்தாவதுதேசிய மாநாட்டை இந்த ஆண்டு முடிவிற்குள் கூட்டுமாறு இ. த. அ. கட்சியின் தலைமைப்பீடத்தை கடந்த வாரம் கூடிய கட்சியின் கொழும்புக் கிளை கேட்டிருக்கிறது.**

கொழும்பில் நடைபெற்ற கட்சிக்கிளையின் மூன்றுவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட மற்றுமொரு தீர்மானத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தைச் சட்ட பூர்வமாக அங்கிகரிப்பதற்கு கட்சித் தலைமைப் பீடம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இலங்கைப் பல்க

(9-ம் பக்கம் பார்க்க)

**அட்டன்-மஸ்கெலியா நாவலப்பிட்டி**

**அருத எண்ணெய்**

**பாவனையாளர்களே !**

**ரூ. 600-00**

**தரும் அதிர்ஷ்டப் பரிசு அஞ்சலட்டைகளை**

கீழ்க்காணும் ஏஜண்டுகளிடம பெற்றுக்கொள்ளுங்கள் !

அட்டன்:

**இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,**

39, மெயின் வீதி, அட்டன்.

மஸ்கெலியா:

**சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,**

—மருந்துக்கடை—

126, மெயின் வீதி, மஸ்கெலியா.

நாவலப்பிட்டி:

**ஜி. ஜேம்ஸ் சில்வா அன் சன்ஸ்,**

18, 20, கம்பளை ரோட், நாவலப்பிட்டி.

**தேவை!**

பல்லாயிரக்கணக்கான பாவனையாளர்களால் பல்லாண்டு காலமாக பாவிக்கப்பட்டும், பாராட்டப்பெற்றும் வரும் அருத எண்ணெய்க்கு மலையகமெங்கும் ஏஜன்ஸிகள் தேவை. விண்ணப்பிக்கவும்.

இப்படிக்கு,
தயாரிப்பாளர்

**பி. எம். திசாநாயக்க**

**அருத எண்ணெய் தொழிலகம்,**

கண்டி ரோட், கம்பளை. போன் : 454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




பனிப்போர்வை போர்த்துக் கொண்டு இனிமையாக நின்ற துரையின் பங்களாவிலிருந்து உருகி வழிந்த தூய மின்னொளியில் மின்னிப் பளிச்சிட்ட தாமரகுமாரியைக் கண்டதும் தமிழ்ப் பேரகராதியின் மீது கோபம் கோபமாக வந்தது என் கணவருக்கு. 'அழகு' என்ற பதத்துக்கு, 'ஒழுங்கு' 'சருக்கரை' 'நூலின் பத்தநகு', 'பதினறு பேற்றினென்று', 'யௌவனம்', 'வனப்பு', 'ஒரு செய்யுள் வகை', 'சிறப்பு' என்றெல்லாம் அர்த்தம் கூறும் தமிழ்ப் பேரகராதியில் 'தாமரகுமாரி' எனும் பெயரும் இடம் பெறவில்லையே என்பதால் அகராதி மீது அத்தனை கோபம் பிறந்தது என் கணவருக்கு. உண்மையில் தாமரகுமாரியின் அழகு அவ்விதம் கருதக் கூடியதாக அழகுக்கு இலக்கணமாகத்தான் இருந்தது!

சிறப்புமிக்க ஒரு கவிஞனால் நல்ல இனிய சூழ்நிலையில் எழுதப்பட்ட தரமான பாடல் ஒன்றுக்கு, உயிரையும், உணர்வையும் சுண்டி இழுக்கவல்ல இசை அமைக்கப்பட்டு, தேனினும் இனிய குரல் படைத்த இசைமேதை ஒருவரால் அப்பாடல் பாடப்படும் போது நமது உள்ளங்களில் ஏற்படுகின்ற மலர்ச்சியைக் தந்தது அன்று அந்தப் பங்களாவில் தோன்றிய தாமரகுமாரியின் தோற்றம்! தாமரகுமாரியின் அந்தத் திடீர் விசயம் நல்ல போதையில் இருந்த துரையைக் கூடச் சற்றுத் துணுக்குறச் செய்துவிட்ட தென்பது துரையின் அப்போதைய தோற்றத்திலிருந்து நன்கு புலப்பட்டது. புறப்பட அயத்தமாகிவிட்ட என் கணவரையும், குமரனையும் தாமரை போன்ற தன் புனித நயனங்களால் ஆணையிட்டு நிறுத்திவிட்டு, தோட்டத்துரையை அண்மி ஏதேதோ சிங்கள மொழியில் பேசத் தொடங்கிவிட்டாள் தாமரகுமாரி. மந்தகெதியில் பேசப்படும் சிங்களத்தை மட்டும் புரிந்து கொள்ளும் 'ஞானம்' பெற்றிருந்த என் கணவருக்கு, அன்று துரையிடம் தாமரகுமாரியின் வாயிலிருந்து மாரிபோல் உதிர்ந்த துரிதகதிச் சிங்களம் புரிய மாட்டேன் என்று விட்டது. தாமரகுமாரியின் திடுதிப் விசயத்திலும், அவள் வாயிலிருந்து உதிர்ந்த சொன்மாரியிலும் ஒரு பெரிய உண்மை—ஒரு பெரிய மர்மம்—துலங்கி என் கணவரை மூக்கின்மேல் விரலை வைக்கத் தூண்டியது.

மர்மம் என்றால் சாதாரண மர்மமா? உண்மையென்றால் சாதாரண உண்மையா? இந்த மர்மத்துக்கும், உண்மைக்கும் மத்தியில் அந்த உலகம் தெரியாத அபலையை நிறுத்தி, அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரன் என்று சொல்லப்பட்ட அமரசூரியா என்ற அதிசய இளைஞன் புரிந்த சாகசம் மிகவும் பெரியது மட்டுமல்ல, ஆபத்து நிறைந்ததும் கூட! துரையின் பங்களாவில் அன்று திடீரெனத் தோன்றி துரையிடம் 'ஒர்மை'யுடன் ஏதோவெல்லாம் பேசித் தீர்த்துவிட்டு; அந்த இரகசியத்தைத் துரை இனி வெளியிடத்தானாக வேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்திவிட்டு அவள்—தாமரகுமாரி சென்ற பின்னர், துரை இன்னும் ஒரு 'ரவுண்ட்' என் கணவருக்கும், குமரனுக்கும் மதுவை ஊற்றி வழியனுப்பிவிட்டு விடயத்தைப் பகிரங்கப்படுத்தினார்.

'கொக்கீன்' என்ற பெயரைத் துரை பெற்றிருந்தும்; அந்தத் தோட்டத்து மக்களால் 'ஒக்கீன்' என்று அழைக்கப்பட்ட அவர், தோட்டத்தின் பொறுப்பை ஏற்று அங்கு வருவதற்கு முன்னர் அவருடைய தந்தையாரான பெரிய கொக்கீனும் அவரைத் தொடர்ந்து அவருடைய இரண்டொரு உறவினர்களும் அந்தத் தோட்டத்தை நிர்வகித்துக் கொண்டிருந்தார்கள். பணம் என்ற கரும்பு வில்லை வளைத்து; பதவி என்ற நாணைப்பூட்டி, அந்தஸ்து என்ற மலர்ச் சரல்களைத் தொடுத்து அங்கு உலவிய பல 'இரதி'களை மயக்கலானார் பெரிய கொக்கீன் என்ற அந்த மன்மதர்! அப்படி மயங்கிய 'இரதி'களுள், தாமரகுமாரியின் அன்னை என்று அழைக்கப்பட்டவளுடைய தங்கையின் பேழகில் இந்த மன்மதராயர் கொஞ்சம் 'ஓவராக'வே மனதைப் பறிகொடுத்துவிட்டார்! கிட்டத்தட்ட அந்தப் பெண்ணுடைய சீதளத்தன்மைமிக்க பேரழகு அந்த வெள்ளைக்கார மன்மதரைச் சுட்டுக் கருக்கியதென்றே கூறலாம்! மேலைநாட்டில் பிறந்தாலும், இந்தக் கீழை நாட்டுப் பெண்ணிடத்தில் அவர் கொண்டமையல் மகா சக்திவாய்ந்ததாக இருந்தது. தோட்ட நிர்வாகப் பொறுப்பேற்று அவர் அங்கு வாழ்ந்த நாட்தொட்டு, தம்முடைய உறவினருடைய கையில் தோட்ட நிர்வாகத்தைக் கையளித்து விட்டுத் தம்முடைய தாயகத்துக்குக் கப்பலேறிய நாள்வரை அந்த இனிய பெண்ணோடு ஒருயிர் ஒருடலாய் வாழ்ந்தார், அவர். அதன் பயனாக இந்த ஈழமணித் திருநாட்டினுக்கு ஒரு புதிய 'பரம்பரை'யைப் பெறும் பேறு கிட்டியது! அந்தப்பரம்பரையின் தலைமகனாகப் பிறந்து வளர்ந்து பெரியவனாகினான் அமரசூரியா என்ற அந்தச் செம்பட்டை இளைஞன்! அந்தப் புதிய 'பரம்பரை'யைப் பிரசவித்து விட்டுச் சென்ற அந்தப் பெரிய கொக்கீன்துரை தன் அருமையான அமரசூரியாவுக்குத் தமது சொத்தில் ஒரு பெரும் பகுதியைத் தமது தாயகத்தில் ஒதுக்கி அதன் பராமரிப்பாளனாகத் தம்முடைய அசல் பரம்பரையைச் சேர்ந்த—தம்முடைய மைந்தனை—சின்ன கொக்கீனை நியமித்து விட்டுக் கண்ணை மூடுவதற்கிடையில்,

## 34. புதிய பரம்பரை!

இந்தப் பொருளாதார உரிமையைப்பற்றி இலங்கையில் தம்முடைய உணர்வைக் கவர்ந்த அமரசூரியாவின் அன்னைக்கும் அறிவித்தும் விட்டார்.

தந்தையான பெரிய கொக்கீனிடம் இருந்த கண்ணியமும், பெருந்தன்மையும், இலங்கைக்கு நிர்வாகப் பொறுப்பேற்பதற்காகவந்த அவருடைய மைந்தரான சின்ன கொக்கீனுக்கு இல்லாது போன காரணத்தால், பிரச்னை முளைக்கலாயிற்று! இலங்கை வந்து தோட்டப் பொறுப்பை ஏற்ற தன்னுடைய சகோதரரான சின்ன கொக்கீனை எப்படியோ மோப்பம் பிடித்துத்தெரிந்து கொண்டு ஒரு நாள் நேரே அவருடைய—தன் தந்தையினுடைய—கடிதத்துடன் சென்றான் அமரசூரியா! துரையினுடைய மனோநிலை தனக்குச் சாதகமாக இல்லை என்பதை அறிந்த அவன், சற்றும் மனம் தளரவில்லை. கலப்பு உறவால் கடிய இதயமும், நுட்பமான மூளைப் பலமும் பெற்றிருந்த அவன், மிகுந்த நிதானமுடன் பிரச்னையை அணுகலானான்.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் அவன் எப்படிப் பட்டவனாக இருந்தாலும்—ஒவ்வொரு 'விலை' உண்டு! மனிதனுக்கு மனிதன் விலையில் ஏறறத்தாழ்வு உண்டே ஒழிய, 'விலை' இருப்பது என்பதுமட்டும் சாசுவத உண்மை! அந்த 'விலை' எது எனக் கண்டு அதனைச் செலுத்தி விட்டால், அந்த மனிதனை நாம் வாங்கவிடுவது மிக எளிது! இந்த நியதியின் பிரகாரம் தன்னுடைய சகோதரனான சின்ன கொக்கீனுடைய 'விலை' எது என்பதைக் கண்டுபிடிப்பதில் மிகத்தீவிர கவனம் செலுத்தலுற்றான் அமரசூரியா. மிக விரைவில் அதற்கான ஒரு வாய்ப்புக்கிட்டியது அவனுக்கு.

ஒரு நாள் கங்கையில் குளித்து விட்டுத் தன் வீட்டுக்குத்திரும்பிக் கொண்டிருந்த தாமரகுமாரியை இடைமறித்துத்தம்முடைய ஜீப்பில் அவளை ஏற்றிக் கொண்டுவந்து அவள் வீட்டருகில் இறக்கிவிட்டுச் சின்ன கொக்கீன செயலைதத் தற்செயலாகக் கண்ணுற்ற அமரசூரியா அவளை நெருங்கி விடயத்தை வினவினான். மலரைச் சுற்றும் வண்டுபோல், துரை தன்னைச் சுற்றும் விபரத்தை எடுத்துரைத்த தாமர குமாரியை—அன்றிலிருந்து அமரசூரியா வளையம் வரத்தொடங்கி விட்டான். ஒன்று விட்ட சகோதரன் என்று உறவு காட்டி முதலில் அன்பாகவும், பின்னர் அதிகாரம் செலுத்தியும் அவளை வற்புறுத்தத் தொடங்கிவிட்டான் அமரசூரியா! ஒருநாள் ஓரிரவுமட்டும் துரையின் 'பசி'க்குத் 'தீன்' போடும்படி அவன் அவளை வற்புறுத்திப் பணியவைப்பதற்கு; தாமரகுமாரியைப் பொறுத்த அளவில் இருந்த அந்தப் 'பலவீனம்' அவனுக்குப் பெரும் துணை புரிந்தது! தாமரகுமாரி செல்லுமிடமெல்லாம் அவளைப் பின்தொடர்ந்து வற்புறுத்தினான் அமரசூரியா. கோயில் என்ன, புத்த விகாரம் என்ன; குளிக்கும் இடமென்ன என்று எந்த இடமும் பாக்கிவைக்காமல் அவளைப் பின்தொடர்ந்து மிரட்டினான் அவன். அவன் மிரட்டல் பொறுக்காமல் ஒரு நாள் அவள் சொல்லிவிட்டாள், 'நான் துரைக்கு இணங்குகின்றேன்' என்று!

அவளின் இணக்கம் கிடைத்ததும் மிகுந்த மகிழ்வடைந்த அமரசூரியா, துரையை வங்குவதற்குச் சரியானதொரு 'விலை' கிடைத்திருக்கிற தென்ற மன நிம்மதியோடு அன்று இருட்டி எட்டு மணியாகிய பின்னர் தாமரகுமாரியை அழைத்துக்கொண்டு துரையின் பங்களாவில் அவளை விட்டு விட்டுத் தான் மட்டும் பங்களாவுக்கு வெளியில் மறைவாக ஓரிடத்தில் மறைந்து கொண்டான்.

துரையின் பங்களாவுள் நுழைந்த தாமரகுமாரி அங்கு என் கணவரும் குமரனும் இருப்பதுகண்டு; இருந்த தைரியத்தில் இன்னும் கொஞ்சம் தைரியம் கொண்டு வாய்க்கு வந்தபடி அவரைத் திட்டி விட்டு அங்கிருந்து மின்னல் போல் மறைந்து விட்டாள்!

(வளரும்)

'அவள் விழி கயல்போல அழகாய்
இருந்ததோ;
அல்லதோர் ஆந்தைபோல் இருந்ததோ
அறியேன்
அவள் இடைச் சுற்றள வாறங்குலமோ,
அன்றி ஆறடியோ அறியேன் அம்மா......!
உடல், உயிர்
அதிர்ந்திடும் வண்ணம் அவள்வெறுங்
கம்பியில்
எதிர்த்து, அதை மீட்டி இனிமைகள்
பகர்ந்து
கலந்தனள் என்னோடும்; களிந்தேன்
புலர்ந்திட லாக நாம் பொருந்தும்
வாழ்வே!'

—"மகாகவி"

## பயணம்

"பாண்டியூரன்"

எங்கு போக? இருங்கள் இடமிவேல்
இன்னுஞ் சற்று நகர்க' தலையின் மேல்
தொங்கு கம்பியைப் பற்றி நெருங்குக,
தோழனுக்கு மிடங்கொடு; சற்று நில்,
எங்கே தாருங்கள் காசு? இதோ 'ரிக்கட்'
ஏறவேண்டாம் 'ரிக்கட்டு' இல் லாதவர்!
தங்கு போலிரை இன்றிக் 'கொண்டக்டர்'
சட்ட மப்படி 'இ.போ.ச' போட்டதாம்.

காடு மேடு கடப்பதற் கன்றுளார்
கால் நடைக் துணை கொண்டனர்; இன்றுளார்
மூடிக் கண்ணைத் திறப்பதற் குமுன்னமே
மூச்சு வேகத்தி லெங்கணும் வாகனம்
ஓடு கின்றதாற் பாக்கியம் பெற்றனர்...?
ஊர்தி விண்ணி லுலவிட மானிடர்
ஓடி வானை யளந்திடுங் காலமாம்!
ஓர னுமதிச் சீட்டே யவசியம்.

ஆகா யத்தி லயலிடஞ் செல்லவும்;
ஆழி யூர்ந்து அகிலம் வளைக்கவும்,
வேக மாகத் தரையைக் கடக்கவும்
மீனைப் போலநீர் மூழ்கிச் சுழிக்கவும்
பாதா ளத்திற் பலமணி செல்லவும்
பாதையும் பல ஆர்த்துமுள்ளதாம்!
வேக மோடிதி காசம் மொழிந்ததை
மேலை நாட்டவ ரின்று விளங்கினர்!

பாவம் மானிட ரின்று புரிந்தது
பஞ்ச காலப் பசிப்பிணி வாயிலே
ஆவலோடிடும் அங்கை யுணவுதான்
ஆத்திரங் கொளிற் பாத்திர மென்செயும்?
சுவு கின்றனர் இன்ற; புதுமைகள்
கொள்ளை கண்டு களித்தவர் அன்றுநாம்!
காவ லற்ற நிலையில் விளைவினைக்
கையளித்துக் கடவுளில் நிற்கிறோம்.

மண்பதைக் கொலை செய்யும் அறிவினால்
வாகனம் பல கண்டுமென்? மக்களைப்
புண்படுத்தும் விஞ் ஞானப் படைப்புகள்;
போக வாழ்விற் புதுமுறைச் சீட்டுகள்
என்ன செய்யும்? அழிவில் முடிந்திடும்
சனமென்று மறைந்திடுமோ...? உயர்
அன்னை காலம் அணுகிடில் மானிடன்
ஆத்மசைப் பய ணத்தை முடிக்கலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காசி. செல்லையா,
சின்ன எலிபொடை

கே: பீக்கிங் வானொலியில் பேசுபவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

ப: ஈழ நாட்டைச் சேர்ந்த ஒருவரும் அங்கு இருக்கிறார். இந்தியாவுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய அவர் பயன்படுத்தப்படுகிறாராம்.

ஃ

ஏ. எம். ஏ.,
மன்னார்.

கே: வாழ்க்கையில் தவறிய பெண்ணுக்கு வாழ்வளிக்க விரும்புகின்றேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நான் அதற்கு எதிரானவனல்ல. ஆனால் நீங்களும் வாழ்க்கையில் தவறிவிடக் கூடாதென்பதே என் கவலை.

கே: நாளுக்குநாள் பெருகி வரும் குடிசனத் தொகையைக் குறைக்க அரசாங்கம் உங்களிடம் யோசனை கேட்டால்...?

ப: 50 லட்சம் வீரர்களைக் கொண்ட ஓர் இராணுவத்தைத் உடனடியாகத் திரட்ட வேண்டும். திரட்டி முடிந்ததும் ஏதோ ஒரு நாட்டின் மீது யுத்தம் பிரகடனம் செய்து, அந்த இராணுவத்தைப் போர்களத்துக்கு அனுப்பவேண்டும். ஒரே மாதத்தில் சனத்தொகை பாதியாகக் குறைந்துவிடும். சனத்தொகையைக்குறைக்க யுத்தத்தைப் போல வேறு எதுவும் பயன்படாது.

கே: நான் வாழ்க்கையில் சந்தோசமாயும் பிறருக்கு உதவி செய்பவனுயுமிருக்க விரும்புகிறேன். இதற்கு ஒரு வழி கூறுவீர்களா?

ப: உங்களுக்கு நீங்களே உதவி செய்யுங்கள். அதனால் சந்தோசமும் கிடைக்கும் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையும் ஏற்படும்.

ஃ

மை. செபஸ்டியன்,
இறக்வானை.

கே: சீனர் இப்போது இலங்கையில் முன் போல நடமாடுகின்றார்களா?

ப: ஆம். நடமாடுகிறார்கள். ஆனால் நடமாட்டத் திலேயிடுக்குமில்லை. அரசியலுமில்லை. அடுத்த தேர்தல் வந்தால்தான் அவர்களின் நடமாட்டத்துக்கு மதிப்பு ஏற்படும்.

எஸ். எஸ். நாதன்,
ஏறாவூர்.

கே. தமிழ் அரசாங்க ஊழியர் மத்தியில் காங்கிரஸ் முகமூடியில் இன்னொரு தொழிற்சங்கம் உதயமாகியதின் நோக்கமென்ன?

ப: சிங்களம் மட்டும் சட்டத்தைப் பூரணமாக அமுல் நடத்துவதே அச்சங்கத்தின் நோக்கமென்பது இப்பொழுது அம்பலமாகியுள்ளது.

ஃ

இதயசூரியன்,
இறக்வானை.

கே: தற்சமயம் 'கேட்டுப் பாருங்கள்' பகுதியில் அரசியற் கேள்விகள் குறைந்து அதிகமாக காதற் கேள்விகளே அதிகம் இடம் பெறுகின்றன ஏன்?

ப: காரத்துடன் கொஞ்சம் இனிப்பும் வேண்டுமல்லவா? அதுவே தவிர குயுக்தி யாரும் காதல் கிதலில் சிக்கி விட்டாரென எண்ணி விடாதீர்.

ஃ

ஏ. எஸ். கனபதிப்பிள்ளை,
மூதூர்.

கே: டாக்டர் நாகநாதன் வைத்திய சிகிச்சைக்காக வெளி நாடு சென்று, அறிந்து வந்த நல்ல அம்சங்களைப் போல, ஐ. நா. வுக்கு போய் வரும் பொன்னம்பலமும் ஏதாவது அறிந்து வந்து அறிக்கை சமர்ப்பித்தால் நல்லதல்லவா?

ப: ஏதாவது அறிந்து வருவார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அது அவருக்குப் பயன்படுமா, நாட்டுக்குப் பயன்படுமா என்பதுதான் கேள்வி.

ஃ

க. பத்மநாதன்,
குருநகர்.

கே: இவ்வாண்டு சாகித்திய மண்டலத்தில் சிறுகதை நாவலுக்குப் பரிசு கிடைக்காத காரணமென்ன?

ப: அதெப்படிக் கிடைக்கும்? சாகித்திய மண்டத்திற்தான் தமிழ்த் தெரிந்தவர்கள் இல்லையாமே!

ஃ

பிரேம், பரந்தன்-3

கே: நான் வடை, தோசை வியாபாரம் அத்தனகல்லையில் ஆரம்பித்தால் எப்படியிருக்கும்.

ப: அடுத்த தேர்தலில் அத்தனகல்லைத் தொகுதியில் போட்டி போடும் அளவுக்கு உங்களுக்கு அங்கே செல்வாக்கு வளர்ந்துவிடும். தோசைக்கு அவ்வளவு கிராக்கி அத்தனகல்லை சிங்களவர் மத்தியில்!

ஃ

எஸ். ஆர். பொன்முடியன்,
திருகோணமலை

கே: தேசிய அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கை என்ன?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: தனியார் துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதன் மூலம் அவர்களின் மூலதனத்தைத் தொழிற்துறையில் முடக்கி நாட்டின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

ஃ

சுகுணு, மானிப்பாய்

கே: நான் நிறம் குறைவாக இருப்பதால் என்னை எல்லோரும் கரி என்று கேலி செய்கிறார்கள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: உங்கள் உடலின் நிறம் அவர்களின் தலை மீது இருப்பதைச் சுட்டிக் காட்டுங்கள்.

வாயை மூடிக்கொள்வார்கள்.

ஃ

தி. உ. கோடீஸ்வரன்,
தெல்லிப்பளை

கே: காங்கிரஸ் கட்சியினர் மாவட்டசபையை எதிர்ப்பது ஏன்?

ப: ஆதரிக்க முடியாததால்! ஆதரித்தால தமிழரசுக் கட்சியின் கொள்கையையும் திட்டத்தையும் ஆதரித்ததாக முடியுமே! அதனால் எதிர்க்கிறனர்.

கே: முன்னைள் கிளிநொச்சிப் பிரதிநிதி என்ன செய்து கொண்டிருக்கிறார்.

ப: ஏதோ அரசியலில் சற்றுத் தலையைக் காட்டினார்—போய்விட்டார். அத்தோடு சரி—அனைவரும் அவரை மறந்துவிட்டனர்.

கே: மூன்றே மூன்று மாதத்தில் உரிமை பெற்று தருவோம் எனக் கூறிய தனிப் பெரும் தலைவர் என்ன செய்கின்றார்?

ப: அந்த உரிமையைத் தேடி கடல் கடந்து சென்று விட்டார்.

ஃ

வீர. கருப்பண்ணன்,
பண்டாரவெளை.

கே: அதிர்ஷ்டம் வருமென்று சதா கனவு காண்கிறேன். ஆனால் அதற்குப்பதில் தரித்திரம்தான் வந்திருக்கிறது. அதிர்ஷ்டம் வர என்ன செய்ய வேண்டும்?

ப: கவலைப்படாதீர்! அதிர்ட்டமும் வந்தேதீரும். அது மாட்டு வண்டியில் வந்து கொண்டிருக்கிறது. அதுதான் தாமதத்திற்குக் காரணம். தரித்திரமோ தந்தியில் வந்துவிட்டது.

ஃ

என். சாகுல்அமீது,
கண்டி.

கே: எனது காதலி என்னைக் கண்டதும் இனிய காதற் சொற்களை சொரியத் தொடங்கி விடுகிறுள். அவளது கண்கள் இரண்டும் மயக்கத்தில் சொக்கி விடுகின்றன. என்னைக் கண்டதும் ஏன் அப்படி மயங்கி விடுகிறுள்?

ப: நீங்கள் சொல்லுவது தவறு. மயங்கவில்லை—மயக்கிறுள். நீங்கள்தான் மயங்கிநீர்கள்.

ஃ

எஸ். ராசன்,
கொழும்பு-10.

கே: பாலில் தண்ணீர் கலந்து குடிப்பது கூடாதென்று டாக்டர் கூறுகிறார். ஆனால் எங்கள் வீட்டுப் பாற்காரன் தினசரி பாலில் தண்ணீர் கலந்துதான் கொடுக்கிறான் என்ன செய்யலாம்?

ப: டாக்டர் கூறுவதும் சரியே. ஆனால் பாற்காரன் கொடுக்கும் பாலைக் குடிப்பதால் நன்மையே ஏற்படும். காரணம், அவன் தண்ணீரில் பாலைக் கலக்கிறுனே தவிர என்றுமே பாலில் தண்ணீரைக் கலப்பதில்லை.

ஃ

எஸ். எஸ். குமாரி,
சிலாபம்.

கே: காதற் பாதை பட்டு மெத்தையைப் போன்று மென்மையானதா? அல்லது காட்டுப் பாதையைப் போன்று கரடுமுரடானதா?

ப: இரண்டுமல்ல— ஆவைகளின் முதுகின் தன்மையைப் போன்றது. மார்க்வெசாஸ் தீவுகளிலுள்ள கலியாண வழக்கப்படி மணப்பெண் கலியாணத்துக்குவந்த விருந்தினர்களான ஆடவர்களின்முதுகுகளின் மேலேயே நடந்து சென்று மணமகனை அடைவாளாம் அதுதான் அவளின் காதற்பாதை.

ஃ

டி. ஆர். எல். குமாரசாமி.
திருமலை.

கே: குயுக்தியாரே, இவ்வுலகத்தில் நீங்கள் எதை வெறுக்கிறீர்கள்?

ப: வெறுப்பை.

ஃ

'குமாரச் செல்வன்',
ஏழாலை மேற்கு

கே: மொழிப்பிரச்சனை நல்ல முறையில் தீர்க்கப்பட்டால், தமிழரசுக் கட்சி கூட்டாட்சிக் கோரிக்கையைக் கைவிடும் என்றதே ஓர் ஆங்கில ஏடு!

ப: பத்திரிகைகள் பறக்க விடும் காற்றாடியை நம்பாதீர்.

ஃ

எம். எம். இராகவன்,
கொழும்பு-11

கே: வாழ்க்கை என்பது என்ன?

ப: இதனைச் சொல்லியா தெரிந்துகொள்ள வேண்டும்? இருவர் ஒருவராகிவிட்டால், அந்த ஒருவர் யார் என்பதைக் காண்பதே வாழ்க்கை. இருவரை ஒருவராக்கத் திருமணத்தால் மட்டுமே முடியும்.

ஃ

சி. தனபாலன் மாத்தளை

கே: 'கொண்டவள் ஏறுக்கு மாறுனல் கூசாமல் சந்நியாசம் கொள்' என்ற பழமொழி இந்தக் காலத்துக்குப் பொருந்துமா?

ப: பொருந்தாது— 'கூசாமல் விவாகரத்து செய்' என்று அதனைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

### கண்ணீர் தானம்

கொழும்பு நகருக்கு தண்ணீர் வினியோகிக்கும் லபுகம, கலத்துவேவா ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்து விட்டது.

—செய்தி

நீர்மட்டத்தைஉயர்த்துவதற்கு கண்ணீர் தானம் செய்வோர் தேவை என்று நாடெங்கும் விளம்பரப் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

### பெருகக் காரணம்?

கொள்ளை லாபமடிக்கும் வர்த்தகர்களுக்கு தண்டனை.

—செய்தி

கொள்ளை லாபமடிக்கும் வியாபாரிகளுக்கு இச்செய்தி விளம்பரமாக விருப்பதனுல தானே என்னவோ மென் மேலும் கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர் தொகை பெருகுகிறது.

### சுவீப் வண்டி

இலங்கையிலிருக்கும் அயல் நாட்டுத் தூதரகங்களிலிருந்து வாங்கிய 30 மோட்டார் வண்டிகள்



விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

—செய்தி

இந்த யோசனையை விடாக்கண்டர் வன்மையாகக் கண்டிக்கிறார். இவற்றையும் 'சுவீப்' டிக்கட்டுகளில் அச்சிட்டு அழகு பார்த்தல் நல்லது என்று அவர் சிபார்சு செய்துள்ளார்.

### பூ... என்னபிரமாதம்!

வெனிசுலா நாட்டில் உள்ள இரு காதலர்கள் 50 ஆண்டுகளின் பின்னர் மணம் முடித்தனர்.

'உனது காதலைப் பெறுவதற்காக நான் ஒரு யுகம் வேண்டுமானலும் காத்துக் கிடக்கிறேன்' என்று சத்தியம் செய்யும் நமது கல்லூரிக் காதலர்களின் வாக்குறுதிகளைவிட இது அவ்வளவு பிரமாதுமானதல்ல.

### இடமாற்றம்

அரசாங்க ஊழியர்களைப் போல் இ. போ. ச. ஊழியர்களையும் இடமாற்றம் செய்கின்றனர்.

—டாக்டர் என். எம்'

பிரயாண வண்டிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள்தானே இந்த ஊழியர்கள். ஆகவே, இடமாற்றம் செய்தாலும் ஊழியர்களின் பிரயாணம் செளகரியமாயிருக்கும் தானே!

### பாவம் மாணவர்கள்!

வவுனியாவிலுள்ள ஒரு வெங்காயத் தோட்டத்தில் 300 மாணவர்கள் அறுவடை செய்தனர்.

—செய்தி

மாணவர்களின் கண்களில் வழிந்தோடிய நீருக்கு வாய்க்கால் வெட்டும் பணியில் மேலும் 300 [illegible]

விரைவில் ஆரம்பமாகிறது
நாட்டு வைத்தியம்
எதிர்பாருங்கள்

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்
ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50
நிர்வாகி
சுதந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரிகளின் இரட்டை வேடத்திற்கு அமிர்தலிங்கம் சாட்டை

## கைட்பார்க் கூட்டத்தில் தமிழ் பிரதிநிதிகள் பேச்சு

'திரு. டட்லி சேனநாயக்கா சிங்கள இனத்தையும், சிங்களக் கலாசாரத்தையும் திரு. செல்வநாயகத்திற்கு விற்றுவிட்டார் என்று தெற்கில் கூறும் சமசமாசக் கட்சியினரும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும், வடக்கே வந்து திரு. செல்வநாயகம் தமிழ் இனத்தை திரு. டட்லி சேனநாயக்காவுக்கு விற்றுவிட்டார் என்று கூறுகிறார்கள். இதுதான் எதிர்க்கட்சியினர் இன்று நாட்டில் நடாத்தும் பிரச்சாரம்' என்று தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் கடந்த வாரம் கொழும்பு கைட்பாக் கோணர் மைதானத்தில் நடைபெற்ற தேசிய அரசாங்கத்தின் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:



'இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் பல தடவைகள் தவழ்ந்து வந்து ஆதரவு நல்கும் வண்ணம் கேட்ட எதிர்க் கட்சியினர் இன்று தமிழ் பேசும் மக்களைப் பார்த்து வடை, தோசை என்று கிண்டல் பண்ணுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் எங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதாகக் கூறிய எதிர்க் கட்சியினர் இன்று எதிர்க் கட்சியினராக மாறி நாட்டில் வகுப்பு வாதத்தைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கியுள்ளார்கள்.

'தென் இலங்கையில் சிங்கள வாதம் பேசும் இடதுசாரிகள் வட இலங்கையில் வந்து தனித் தமிழ் வாதம் பேசுகிறார்கள். இதுதான் இடதுசாரிகள் கடைபிடிக்கும் இன்றைய அரசியல்.

'இந்த நாட்டில் உருவாக இருந்த சர்வாதிகார ஆட்சியைத் தகர்த்தெறிய ஒன்று கூடிய சக்திகள் இன்றும் ஒன்று பட்டே இருக்கின்றன. இந்த அடிப்படையிலேயே இன்றைய தேசிய அரசாங்கமும் உருவாக்கப்பட்டது. ஆகவேதான் திருவாளர்கள் பிலிப் குணவர்த்தனவையும், சி. பீ. டி. சில்வாவையும் நாம் ஒரே மேடையில் பார்க்க முடிகிறது.

'கடந்த அரசாங்க காலத்தில் நாட்டில் நிலவிய வேற்றுமைகள் அனைத்தையும் ஒழித்துக் கட்ட தேசிய அரசாங்கம் அயராது உழைக்கும். மதம், மொழி, இனம் என்ற பேதங்களை இல்லாது செய்து சகல மக்கள் மத்தியிலும் சமத்துவத்தை நிலைநாட்டுவதே தேசிய அரசாங்கத்தின் வேலைத் திட்டமாகும்.

'சுதந்திரக் கட்சி அரசாங்கமும், கூட்டரசாங்கமும் தொழிலாள விவசாயிகளின் அரசாங்கம் என்று கூறிய போதிலும் அத்தகைய மக்களின் இடர்பாடுகளை நீக்க எத்தகைய உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இன்றைய அரசாங்கம் விவசாயிகளுக்கு முக்கியமாகத் தேவைப்படும் பொருட்களின் விலையைக் குறைத்திருக்கிறது. சாதாரண பொதுமக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் பொருட்களின் விலையைக் குறைத்துள்ளது. இவற்றின் மூலம் தேசிய அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைத்தே தீரும்.

'பொருளாதாரப் பேராசிரியரான டாக்டர் என். எம். பெரேரா தயாரித்த வரவு செலவுத் திட்டத்திலும் பார்க்க பன்மடங்கு சிறந்த பொது மக்கள் வரவு செலவுத் திட்டத்தை இன்றைய நிதி அமைச்சர் திரு. வன்னிநாயக்கா தயாரித்தளித்துள்ளார்.

'சிறிமாவோ அரசாங்கம் பதவிக்கு வந்ததும் ஓலை வீடுகளை ஓட்டு வீடுகளாக்குவோம் என்று அரியணை உரையில் அறிவித்தது. நாலு ஆண்டு கால சிறிமாவோவின் ஆட்சியில் ஓலை வீடுகள் கூரையற்ற வீடுகளாக மாறிய காட்சியையே கண்டோம். தேசிய அரசாங்கம் சகல மக்களின் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க அயாராது பாடுபடும்.'

(9-ம் பக்கம் பார்க்க)

## கருங்காலிகளாக மறுத்து 250 தொழிலாளர் வேலை நிறுத்தம்

அன்றசன் புதுக்காடு கீழ்ப்பிரிவில் கடந்த 28-8-65முதல் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த 250 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

கடந்த 25ம் திகதி மேற்படி புதுக்காடு மேற்பிரிவில் காங்கிரஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் போது, அவ் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக புதுக்காடு கீழ்ப் பிரிவிலிருந்து தொழிலாளர்களை வேலைக்குப் போவதற்குத் தூண்டியது தோட்ட நிர்வாகம். வேலை நிறுத்தம் செய்யும் தோட்டத்திற்கு வேலைக்குப் போக மறுத்த புதுக்காடு கீழ்ப்பிரிவுத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க மறுத்ததால், அதை ஆட்சேபித்து 25ம் திகதி எல்லா தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்.

வேலை நிறுத்தம் செய்யும் போது வாலிபத் தொழிலாளர்கள் 6 பேர் கல் வீசினார்கள், என்ற குற்றச்சாட்டை சுமத்தி அவர்களை தோட்ட நிர்வாகம் 25ம் திகதி முதல் வேலையிலிருந்து நிறுத்தியுள்ளது.

மேலும் கழகத்தின் துணைச் செயலாளரும், தலவாக்கொல்லை அலுவலகத்தின் பிரதிநிதியுமான திரு. மு. எல்லாளன் தோட்டத்தில் வசித்து வருகின்றார். அவரை தோட்ட நிர்வாகம் தோட்டத்தைவிட்டு வெளியேறுமாறு கேட்டுள்ளது.

இவைகளை ஆட்சேபித்து கடந்த 28-8-65 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

மேற்படி விடயங்களை சுமுகமாக நிர்வாகம் முடித்துக் கொடுக்கும்வரை தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவர வேண்டுமென்று சாவகச்சேரிப் பா.உ. திரு. வி. என். நவரத்தினமும், கிளிநொச்சிப் பா.உ. திரு. கா. பொ. இரத்தினமும் தோட்டத் தொழிலாளர்களை நேரில் சந்தித்து கூறியுள்ளனர்.

## இ. தொ. க. வாலிபர் முன்னணிக் கூட்டம்

கடந்த 29-8-65ல் தலவாக்கொல்லை கதிரேசன் கோவில் மண்டபத்தில் திரு. மு. எல்லாளன் அவர்களின் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலவாக்கொல்லை மாவட்ட வாலிப முன்னணியின் கூட்டம் மிகவும் சிறப்பாக நடந்தது. அதில் திருவாளர்கள்: வி. என். நவரத்தினம் (சாவகச்சேரி பா.உ.) இ. நாகேந்திரம், நிர்வாகச் செயலாளர்: பி. சாமன், மாவட்டத் தலைவர்: பி. எம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## 'நல்ல நடையில் எழுத முன்வாரீர்'

### தமிழ் எழுத்தாளர்களுக்கு அமைச்சர் திருச்செல்வம் அழைப்பு

'தமிழ் மொழியில் எழுந்துள்ள வேறுபாடுகளை நீக்க தமிழ் எழுத்தாளர்கள் முன் வரவேண்டும். பேச்சுத் தமிழ் என்றும், பண்டிதத் தமிழ் என்றும் உள்ள வேறுபாடுகளை நீக்கி சகலரும் புரியக் கூடிய செந்தமிழ் நடையில் எழுதுவதற்கான முன் மாதிரியை ஈழத்து எழுத்தாளர்கள் வகுக்க வேண்டும். இதற்கு ஒரு முன் மாதிரியாக நாவேந்தனின் 'தெய்வ மகன்' நூல் அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன்' என்று விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற 'தெய்வ மகன்' நூல் அறிமுக விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. குறிப்பிட்டார்.

எரிபொருள் கூட்டரவுத் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் திரு. திருச்செல்வம் கூறியதாவது:

'ஈழத்திலிருந்து தமிழ் நாடு சென்று தமிழ் வளர்த்த பெரியார்கள் பலர் உண்டு. ஈழத்துப் பெரியார்கள் தமிழ் இலக்கிய உலகின் தலைமகன்களாக பல காலம் திகழ்ந்திருக்கிறார்கள். இவற்றை இன்றைய எழுத்தாளர்கள் நன்கு உணர்ந்து தமிழ் இலக்கியத்தில் புதுமை காண நம்பிக்கையுடன் முயல வேண்டும்.'

வித்தியாரத்தினம் திரு. சோ. நடராசா நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துகையில் இச் சிறுகதைத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு கதைகளிலும் ஒவ்வொரு தத்துவங்கள் மறைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில்: 'நாவேந்தன் தனிவழி நின்று இலக்கிய உலகில் வளர்ந்தவர் என்றும், அவரின் இலக்கியப் பாணி தனித் தன்மை வாய்ந்தது' என்றும் கூறினார்.

மேலும் திரு. பொன்னுத்துரை பேசுகையில் உன்னு

(5-ம் பக்கம் பார்க்க)






பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தந்தி: தாமரை
டெலிபோன்: 5597-6512


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு முனிசிபல் தேர்தலில்
# 10 கட்சி கூட்டணி போட்டியிடும்

## சிங்கள ஏடு தரும் தகவல்

“யூ. என். பி-தமிழரசு ஏழு கட்சிக் கூட்டணி பத்து கட்சி கூட்டணியாக மாறி டிசம்பர் மாதத்தில் நடைபெறும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் முற்போக்கு முக்கூட்டணிக் கெதிராகப் போட்டியிடுவதற்கு தயாராகிறது.

இப்பொழுது அணி சேர்ந்துள்ள ஏழு கட்சிக் கூட்டில் சேர விருப்பவர்கள் ரொபர்ட் குணவர்தன, எட்மன்ட் சமரக்கொடி, என். சண்முகதாசன் என்பவர்களின் தலைமையிலுள்ள அரசியல் கோஷ்டிகளே”. என்று “எத்த” (6-9-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

“திரு. ரொபர்ட் குணவர்தனவின் இடதுசாரி முன்னணி ஏழு கட்சி கூட்டணியுடன் நேரடியாகவே கூட்டுச் சேர்ந்து போட்டியில் இறங்கும். எஞ்சிய இரு கோஷ்டியினரும் ஏழு கட்சிக் கூட்டணியின் ஒத்துழைப்புடன் முற்போக்கு வாக்குகளைப் பிளவுபடுத்துவதற்காக வேட்பாளர்களை நிறுத்தும்.

இதற்கிடையே சுதந்திரக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியவை கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றன.

ஏழுகட்சிக் கூட்டணியைச் சேர்ந்த தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளுக்கு கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை போன்ற வட்டாரங்களில் போட்டியிட அனுமதித்து, எஞ்சிய கட்சிகளுக்கு வேறு சில வட்டாரங்களைக் கொடுத்துவிட்டு, ஏனைய தொகுதிகள் அனைத்திலும் யு. என். பி. போட்டியிடுவதற்கு உடன்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.'

## வீரகேசரி விற்பனை விபரம்

தமிழ்ப் பத்திரிகை பிரதமருக்குச் சொந்தமாகிறது என்ற தலைப்பின் கீழ் 'ஜனதின' (6-9-65) கீழ்க்காணும் செய்தியை முதற்பக்கத்தில் பிரசுரித்துள்ளது:—

'பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, ராஜ்ய மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன லேக்ஹவுஸ் முதலாளிப் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக அதிபர் திரு. எஸ்மன்ட்விக்கிரமசிங்கா ஆகியோர் 'ஜாத்திக பெரமுன பிரசுராலய லிமிடெட்' என்ற பெயரால் ஒன்று சேர்ந்து தமிழ் 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனத்தை விலைக்கு வாங்க முன் வந்தனர். இதற்காக 'ஜாத்திக பெரமுன வெளியிடுவோர்' நிறுவனம் முடக்கும் மூலதனம் ரூ 5000.

வீரகேசரி நிறுவனத்தின் 10 ரூபாய் பெறுமதியான பங்கை ரூ6-75 வீதம் விலைக்கு வாங்க அவர்களால் முடிந்தது.

தனிப்பட்ட நிறுவனமான வீரகேசரியின் மதிப்பு 5,00,000 ரூபாவாகும்.

## துறைமுகத்துள் தமிழ்

'கொழும்புத் துறைமுகக் கொமிஷனின் முக்கியமான பதவிகளுக்குத் தமிழ் அதிகாரிகளையும், சிங்களம் தெரியாத அதிகாரிகளையும் நியமனம் செய்யத் தொடங்கியுள்ளனர். யு. என்.பி—தமிழரசு அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு பல இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் அனுப்பும் கடிதங்களுக்குப் பதில் கிடைப்பதற்கும் தாமதமாகிறது.

இவ்வாறு தமிழ் அதிகாரிகளையும் சிங்களம் தெரியாத அதிகாரிகளையும் நியமனம் செய்துள்ள முக்கிய பதவிகளில், கணக்காய்வுப் பகுதியின், பிரதான லிகிதர், நிர்வாகப் பகுதியின், பிரதான லிகிதர், மாஸ்டர் அட்டன்டன்ட் பகுதியில் நிர்வாகக் காரியதரிசி முதலிய பதவிகள் குறிப்பிடத்தக்கவை.'

—ஜனதின (6-9-65)

## நடக்கவிருப்பவை

### பாரதி விழா

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் பாரதி விழா இத் திங்கள் 12-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சபை மண்டபத்தில் நடைபெறும்.

சபைத் தலைவர் திரு. மு. வயிரவப்பிள்ளை விழாவுக்குத் தலைமை தாங்குவார். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் 'புரட்சிக்கவி பாரதி' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார். 'பாரதி இலக்கிய வாதியா, அரசியல் வாதியா' என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள் இ. சங்கர், மு. திருநாவுக்கரசு, ஏ. பி. செல்லையா, த. உமாபதிசிவம், செல்வி ரேணுகா குமாரசாமி ஆகியோர் வாதிடுவார்கள்.

திருமதி சரசுவதி குமாரசிங்கம் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும். இந் நிகழ்ச்சிக்கு திருவாளர்கள் சங்கரலிங்கம், த. இரத்தினம், க. க. தமிழ்நாதன் ஆகியோர் பக்கவாத்தியம் வாசிப்பார்கள்.

ஃ

அக்குறணை பல்கலைக் கழக கல்லூரியின் தமிழ் மன்ற ஆதரவில் 11-ம் திகதி பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் பாரதி விழா நடைபெறும். நீதியரசர் பொ. சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திரு. செ. வேலாயுதபிள்ளை 'பாரதியின் பாஞ்சாலி சபதம்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

ஃ

### அமரர் நினைவு அன்னதானம்

ஆல்முனை இரண்டாம் குறிச்சியில் அமைந்திருக்கும் இ. த. அ. க. கிளைப் பணிமனையில் எதிர் வரும் 19-ந் திகதி அமரர் வன்னியசிங்கத்தின் நினைவு தினத்தையொட்டி அன்னதானம் வழங்கப்படும். இதற்குரிய ஏற்பாட்டை கிளையின் முக்கிய உத்தியோகஸ்தர்கள் கவனித்து வருகின்றனர்.

ஃ

### ஆவரங்காலில்

அமரர் வன்னியசிங்கம் நினைவு நாளை கோப்பாய்த் தொகுதியில் உள்ள ஆவரங்காலில் 17-ம் திகதி கொண்டாடுவதற்கு அப்பகுதி மக்கள் ஒழுங்கு செய்து வருகிறார்கள்.

## இ. த. அ. க. கொழும்புக் கிளை

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் நடப்பு வருடப் பதவியாளர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் பீ. ஏ., செயலாளர்: இ. சிகமலைநாதன், பொருளாளர்: க. சுப்பிரமணியம், செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: த. டிவேட்டா. செ. சந்திரகாசன், கா. கணபதிநாதன், செ. சிவானந்தன், க. குலசேகரன்.

## பிரதமருக்கு ஒரு வேண்டுகோள்

'அடுத்த ஆண்டு முதல் அரசாங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அரசகரும மொழி பூரணமாக அமுல் நடைபெறுவதை உத்தரவாதம் செய்யக் கூடியதாக சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் மந்திரி சபை செய்த முடிவை அப்படியே ஓர் எழுத்தைக் கூட மாற்றாமல் அமுல் நடத்துமாறு 'உத்தியோக மொழிப் பாதுகாப்புத் தொழிற் சங்க சம்மேளனம்' பிரதமரிடம் கோரியுள்ளது. இச்சம்மேளனத்தில் சுமார் 4 இலட்சம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழிற் சங்கங்களும் சம்மேளனங்களும் இணைந்துள்ளன. உத்தியோக மொழியை குற்றுயிராக்கக் கூடியதாக யு. என். பி-தமிழரசு அரசாங்கத்தின் மந்திரி சபை செய்துள்ள முடிவை உடனடியாகக் கைவிடும்படியும் இச் சம்மேளனம் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளது”

—ஜனதின (7-9-65)

## இப்படியும் கூறினரா?

“பொல்காவெல மெட்டிகும்புர என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற் பேசிய உணவு, விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா கூறியதாவது:—

தெங்கு, ரப்பர், தேயிலை உற்பத்தி செய்திருக்கும் பணக்காரர்களின் தோட்டங்களைத் துண்டாடி பங்கிட்டுக் கொடுப்பதால் எதிர்காலத்தில் ஒரு தமிழ் அரசு ஏற்பட இடம் கிடைக்கும். தமிழர்கள் வடமத்திய மாகாணத்திலுள்ள காட்டு நிலங்களில் குடியேறி வட பகுதியிலிருந்து தெற்கு நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர். எனவே நாம் இன்னும் இங்கேயே இருந்து கொண்டிருப்பது விபரீதமாகும். எவ்வளவுதான் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் நமது முன்னோர்கள் வசித்த வட மத்திய பிரதேசத்துக்கு நாம் சென்று விடவேண்டும். அப்படி நாம் செய்யாவிட்டால் விரைவில் நமது நாட்டில் தமிழ் ராஜ்ய மொன்று ஏற்பட இடமுண்டு.'

—ஜனசத்திய (5-4-65)

## சிங்கள இதழ்களில்...

### இருளும் ஒளியும்

'எத்த' பத்திரிகை (6-9-65) எழுதியுள்ள அரசியற் குறிப்பில் கூறியிருப்பதாவது:—

'1956-ம் ஆண்டில் தொடங்கிய இருண்ட சகாப்தம் முடிந்து விட்டதென்று திரு. தொண்டமான் தனது வகுப்புவாத ஸ்தாபனத்தின் மாநாட்டில் கூறியுள்ளார்.

1956-ல் ஆரம்பமான சகாப்தத்தை இருண்ட சகாப்தமென குறிப்பிடுபவர் தொண்டமான் மட்டுமல்ல.

அது ஓர் இருண்ட சகாப்தமென்று பஸ் முதலாளிகளும் கூறுகின்றனர். காரணம் அவர்களின் பஸ்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டதே. கத்தோலிக்கப் பாதிரிகளும் அதனை இருண்டயுகமென்றே கூறுகின்றனர். அவர்களின் பாடசாலை வியாபாரம் முடிவடைந்து விட்டதுதான்காரணம். அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளுக்கும் அஃது இருண்ட சகாப்தமே. அவர்களின் வர்த்தகத்துக்கும் அடிவிழுந்ததே காரணமாகும்.

தொண்டமான்களின் உலகம் இருண்டு விட்டதெனினும் இந்நாட்டு ஏழை மக்களின் உலகத்துக்கு ஒளிபிறந்தது.'

ரூ10 ரூபாய் மதிப்புள்ள பங்கை ரூ 6-75 ஆகக்கணக்குப் பார்த்தாலும் சுமார் 3½ இலட்ச ரூபாய் மதிப்புடையதாகும். இத்தகைய நிறுவனத்தை ரூ 5000க்கு வாங்க இந்தப் புதிய 'பிசினஸ்' காரர்களால் எப்படி முடிந்தது என்று வர்த்தக வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்படுகிறது.

வீரகேசரி நிறுவனத்தின் பிரதான பங்குதாரரான, இந்தியரான பி. பி. ஆர் எஸ். செட்டியார் தனக்குரிய பங்குகளை விற்பனை செய்யும் போது தனக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை இந்தியாவில் வைத்துக் கொடுக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

வெளிநாட்டினருக்குச் சொந்தமான கம்பெனிப் பங்குகளை விற்பனை செய்யும் போதுஇதுவரை கையாண்டு வந்த கொள்கை அந்தப் பணத்தை இலங்கை நாணயத்திற் செலுத்துவதுதான். அன்னிய செலாவணி குறைவானதால் இந்நாட்டின் அபிவிருத்தியைக் கருதி சென்ற அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனையே இது.

இதற்கேற்ப செட்டியாரின் கோரிக்கை நிறைவேறுமா? அதற்கான வெளிநாட்டுச் செலாவணி எப்படி அனுமதிக்கப்பட்டது என்று நேற்று வர்த்தக வட்டாரங்களில் கேட்கப்பட்டது.

ஜாதிக்க பெரமுன பிரசுராலய லிமிடெட் நிறுவனத்தார் தங்களின் கொடுக்கல் வாங்கலை முடிக்கும் வரை வீரகேசரியின் நிர்வாகம் திரு. ஜே. ஆர். ஜயவர்தனவின் சகோதரான எச். டப்ளியு. ஜயவர்தன கியூ. சி., எப். ஜே. [illegible] நிறுவனத்தின் பிரதான பங்கு தாரரான திரு. ஞானரத்தினம் குக், திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா ஆகியோர் வசமிருக்கும்.'

## நல்லை....

4-ம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சி அமைச்சரின் கவனத்திற்கு சாகித்திய மண்டலத்தின் தவறான கொள்கைகளை எடுத்து விளக்கினார்.

திரு. ஏ. பி. வி. கோமஸ் பேசுகையில் நாவேந்தனின் நடை கவிதை நடையென்று பல உதாரணங்களுடன் எடுத்து விளக்கினார்.

திரு. ஏ. பி. செல்லையா பேசுகையில் தமிழ் மொழி நடையில் புதுமையை உண்டாக்கியவர்கள் தி. மு. கழகத்தினர் என்றும், அந்த இயக்கத்தின் கருத்துக்களையும், அமைப்பையும் நாவேந்தனின் நூலிலும் காண முடிகிறது என்றும் கூறினார்.

ஜனாப் எம். ஏ. ரகுமான் பேசுகையில் அண்மைக் காலத்தில் வெளியான நூல்களில் தெய்வமகன் தரமான நூலென்றும், நாவேந்தனின் துணிகரமான முயற்சிகள் பலவற்றைப் பாராட்டுவதாகவும் கூறினார்.

திருமதி திருச்செல்வம் தெய்வமகன் முதற் பிரதியைப் பெற்று விற்பனையை தொடக்கி வைத்தார்.

நூலாசிரியர் நாவேந்தன் பேசுகையில் தனது எழுத்துலக வாழ்வை விபரித்துவிட்டு, எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றோரை ஆட்சியாளர் ஊக்குவிக்க வேண்டும் என்றும், அண்மையில் சம்ராச்சிய கலைவிழாவிற்கு இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கவிஞர்களில் தமிழர்களுக்கு இடம் கிடைக்காது போனது பெரிய தவறாகும் என்றும் கூறினார்.

திருவாளர்கள் த. துரைசிங்கம், அ. திருநாவுக்கரசு ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவத்தையொட்டித்தான் பாரதி பாடினர்!

## விண்வெளி ஆய்வாளர் என்றுல் நம்புவீர்களா?

பாரதியார் கவிதைகள் தமிழ் இலக்கியத்தில் அழியா இடம் பெற்றுவிட்டன. பாமரரும் புரியும் வண்ணம் எளிய நடையில் எழுதிப் புரட்சி செய்தார். பண்டிதர்கள் பலர் இலக்கண வரம்புகட்கு அமையாத பாடல்கள் என்றுகுறை கூறியதுமுண்டு. அவர் செய்த புரட்சியை காலத்தோடொட்டி எடைபோடாததால் வந்த வினை அது.

### போலி விளக்கம்

ஆனால் இன்றே பாரதியாரின பெயரால் இதைவிடப் பெருந்தவறுகள் ஏற்படுகின்றன. பாரதியாரின் புரட்சியைப் புரிந்து கொள்ளாத புரட்சியாளர்கள், எளிமையான நடையென்றுல் கொச்சைத்தமிழ் எனத் தவறுக விளங்கி, எதையும் எப்படிச் சொன்னாலும் இலக்கியமாகிவிடும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறுர்கள். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவனைபோல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை," எனப் பாரதிபாடியதை மறந்து (இல்லை, மறைத்து) பழந்தமிழ் இலக்கியங்களைப் படிப்பது பிறபோக்கானது எனக் கூறுமளவிற்கு முற்போக்காளர்களாகிவிட்டார்கள்.

### கவிஞன் யார்?

வெறும் உணர்ச்சியுள்ளவன் கவிஞனு? மனிதரின் கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறி, அதன் மூலம் இலாபம் பெற முயற்சிப்பவன் கவிஞன் அல்ல. ஆழ்ந்த சிந்தனை வேண்டும். உயர்ந்த உணர்ச்சியிக்க உள்ளத்தில் இசையே கவிதை என்பதை நாம் மறந்தலாகாது.

> 'பல்வகைத் தாதுவின்
> உயிர்க்குடல போல் பல
> சொல்லால் பொருட்கு
> இடனுக உணர்வின்
> வல்லோர் அணிபெறச்
> செய்வன செய்யுள்''

என்கிறர் பவணந்தி முனிவர். உணர்வில்வல்லவராகப் பாரதி விளங்கிஞரா?

### அனுபவத்தில் பிறந்தது அவர் கவிதை

பாரதியாருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவருடைய கவிதைகளோடு ஒப்பிடுப்பார்க்கும்போதுதான், அவருடைய ஒவ்வொரு சொல்லும், ஆழ்ந்த சிந்தனைக்கும் அனுபவத்திற்கும் பின் தான் வெளியானது என்பதை உணர்வோம். உயர்ந்த உணர்ச்சிமிக்க உள்ளத்திலிருந்து பிறந்த தென்பதை உணர்வோம்.

"யாமறிந்தமொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணேம்" என்றூர் பாரதியார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது பாரதியார் மொழிவெறி கொண்டு, அந்த மயக்கத்திலே பாடியது போலத் தோன்றும்; 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற நீதியில் தமிழைப் புகழ்ந்துள்ளார் போலத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல.

### பலமொழி தெரிந்தவர்

எட்டயபுரம் அரண்மனையிலே, சிறுவயதிலேயே பெருமதிப்புப் பெற்றவர். தமிழ்ப் புலவர்களுடனும், நூல்களுடனும் பழகும் வாய்ப்புப் பெற்றவர் தமிழிலே ஆழ்ந்த புலமை பெற்றூர்.

தந்தையை இழந்த பின்னர் அத்தையுடன் காசியிலே தங்கினர். காசி இந்து கலாசாலையில் வடமொழியும், இந்தியும் பயின்றூர். அலகாபாத் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு எழுத விரும்பினர். அத்தேர்வு இந்தியிலே எழுதவேண்டும்; ஆங்கிலம் கட்டாய பாடம் எனினும் எழுதி முதற் பிரிவிலே தேறினர். இந்தியை முறையான உச்சரிப்போடு பேசி வடநாட்டவரோ எனப் பிறர் ஐயமுறும்படி செய்தாராம்.

"மெட்ராஸ் ஸ்டாண்டாட்" (Madras Standard) என்னும் ஆங்கில நாளிதழ் சென்னையிலே வெளிவந்து கொண்டிருந்தது. அதிலே பேராசிரியர் சுந்தரராமய்யருக்கும் இவருக்குமிடையே கீதையைப் பற்றிய விவாதம் நான்குமாதகாலம்வரை ஏற்பட்டது. வடமொழியறிவும் ஆங்கிலத்தை அழகாகவும் வன்மையாகவும் எழுதும் ஆற்றலும் பாரதியாருக்கு இருப்பதைக் கண்டு அவரின் நண்பர்களே ஆச்சரியப்பட்டார்களாம்!

புதுச்சேரியில் பாரதியார் குடியிருந்த வீட்டிற்கு இரண்டு மூன்று வீடுகளுக்கப்பால் பொன்னு முருகேசம் பிள்ளை என்பவர் இருந்தார். அவர் பிரெஞ்சு மொழியில் அபூர்வமான பயிற்சி பெற்றவர். அவர் வீட்டிலே அடிக்கடி தங்கிப் பிரெஞ்சு மொழி பற்றி உரையாடுவார். எனவே பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே..." என்று பாடும்போது மொழிவெறியிலே பாடவில்லை. பலமொழிகளை அறிந்து தமிழின் சிறப்பை உணர்ந்தே பாடினர்.

### பாரதி விண்வெளி நிபுணரா?

பாரதியார் காலத்தில், விரிவான விண்வெளி ஆய்வுகள் நடைபெறவில்லை; செய்மதிகள் அனுப்பப்படவில்லை. ஆனால்.

> "சந்திர மண்டலத்தியல்
> கண்டு தெளிவோம்"

எனப் பாரதியார் பாடினர். பகற்கனவு கண்டாரா? வேடிக்கைக் கற்பனையா? புதிய பாரதம் என்னென்ன செய்ய வேண்டும் என்று வரையறை செய்து பாடும்போது வேடிக்கைக் கற்பனை செய்பவரா பாரதியார்?

> "ஆலைகள் வைப்போம்
> கல்வி
> சாலைகள் வைப்போம்"

என்று பாடினர் பாரதியார். நாடு முன்னேற ஆலைகளும் கல்விச்சாலைகளும் தேவையென்பது பலரும் அறிந்த உண்மை. ஆனல் சந்திர மண்டலத்தின் இயல்பைப் பற்றிப் பாரதியாருக்கு ஏன் எண்ணம் எழுந்தது? எதுகை மோனைக்குச் சொல்லில்லாமற் 'சந்திரனை' அழைத்தாரா? இல்லவேயில்லை.

### விண்வெளி ஆய்வாளர்தான்

பாரதியார் சந்திரனைப் பார்த்து மகிழ்ந்தார். வெண்ணிலாப்பாடல்கள்பாடினர், அதனேடு நின்றுவிடவில்லை; தொலைநோக்கி மூலம் சந்திரனைப் பார்த்து அதன் இயல்புகளை முழுதாக அறியவேண்டுமென மனதார எண்ணியவர். எனவே அவர் ஒரு விண்வெளி ஆய்வாளர் தானே!

**பேராசிரியர் மு. சிவானந்தம் எம். ஏ.**

### வ. ரா. சாட்சியம்

இச் செய்தி பலருக்குப் புதுமையாகத் தோன்றலாம். இதோ வ. ரா. அவர்களைச் சாட்சிக் கழைக்கின்றேன். அவர் கூறுவதைக் கேளுங்கள்.

'பாரதியாருக்குச் ஸயன்ஸில் அபார பிரியம். டெலஸ்கோப் என்ற தூர திருஷ்டி பூதக்கண்ணுடி மூலமாக வானத்தைப் பார்த்து, அவர் பரவசமடைந்ததை எழுத்தில் எழுத முடியாது. சந்திரன் பூமிக்குப் பக்கத்தில் இருப்பது மாதிரி தெரிந்ததாம். புள்ளி புள்ளியாகத்தோன்றிய நக்ஷத்திரங்களும் கிரகங்களும் மிகப்பெரிதாக கண்ணில் படவே அவைகளைக் கண்டு பாரதியார் குதூகலமடைந்தார். தாம் பார்த்தது மட்டுமல்லாமல் அவரது மனைவி குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுபோய் டெலஸ்கோப் மூலமாக ஆகாயத்தைப் பார்க்கச் செய்தார்.'

உணர்வில் வல்லவரான பாரதியார் தாது உயர்ந்த அனுபவங்களையே சொல்லால் அணிபெறச் செய்தார் என்பதை மறுக்கிறீர்களா?

## கந்த முருகேசன் வரலாறு

மறைந்த தமிழ் மூதறிஞர் கந்த முருகேசன் அவர்களின் வாழ்வைப்பற்றியும், அப்பெருந்தகை தமிழுக்குச் செய்த தொண்டைப்பற்றியும் பலரும் செவ்வனே அறிந்திலர். அறிந்த சிலரும் தகுந்த முறையில் அவர் பெருமைகளை வெளியிட்டிலர்.

இந்நிலையில், அவர் வாழ்வைப் பற்றியும், தமிழ்த் தொண்டைப் பற்றியும் செவ்வனே எழுதி ஒரு நூலை [illegible] வெளியிட [illegible] அவர் [illegible]

(14-ம் பக்கம் பார்க்க)

## அமரரான கவி பாரதி

**கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை**

சுப்பிரமணிய பாரதியார் அமரராகி நாற்பத்தைந்து ஆண்டுகளாகின்றன என்கிறுர்கள்.

காலஞ்சென்றுவிட்டார் என்பதை இப்படி மங்கலமாகக் குறிக்கிறுர்களோ தெரியாது. அமரர் என்று தேவர்களுக்கு ஒரு பெயர். தேவர் என்பவர் யார்?

பழையகாலஞானிகளும் சமயப் பெரியார்களும்புலவர்களும் தேவர்களைப் பற்றி நிறையப் பேசுகிறுர்கள்.

இந்திரன் முதலியவர்கள் வாழுகின்ற அமராவதியைத் தலைநகராகக் கொண்ட தேவலோகம் குறிப்பிடப்படுகிறது.

விரும்பியவருக்கு விரும்பியதை வழங்கும்காமதேனுவும் கற்பகதருவும் இங்குண்டு. தேவலோகம் ஒரு போகபூமி, புண்ணியம் செய்தவர்கள் செல்லுமிடமது. பூதவுடலைப் பூமிக்கே பாரமாக்கிவிட்டு, நல்வினை செய்தவர்கள் பலனை நுகரச் செல்லுமிடமது.

பாரதி அங்குசென்றிருப்பாரா?

பாரதிசெய்தது என்ன? புண்ணியமா, பாவமா?

அல்லது, பாரதி நால்வகைப் புருசார்த்தங்களில் கடைசியான வீடு சென்றிருப்பாரா?

சாதாரண தேவலோகத்துக்குப் போகாமல், தேவாதி தேவனின் முத்தியென்ற வீடு போயிருப்பாரா?

பாரதியார் போகமுடியாத உயர்ந்த ஒரு நிலைக்கு வேறுயார்தான் போயிருக்க முடியும்.

'செத்தபின் சிவலோகம் வைகுண்டம்' செல்லலாம் என்ற கருத்து மூடக்கொள்கையாகத்தான் பாரதிக்குத்தோன்றியிருக்கிறது.

பாரதியின் கருத்து எப்படியாயினுமாக.

உத்தமர்கள் இறந்தால் அவர்களை அமரராக்கிஇன்புறுவது எங்கள் பாரத நாட்டுப் பழைய மரபு.

பாரதி செய்த நல்வினை தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமிழ் மொழிக்கும் புத்துயிர் கொடுத்ததுதான். பாரதி இந்தச்செயற்கருஞ் செயலைச் செய்வதற்கு மந்திரம்போல் வன்மையுள்ள ஒருவார்த்தையைப் பிரயோகித்தான்.

அந்த மந்திரம் 'சுதந்திரம்' அல்லது 'விடுதலை'. பாரதி பாடல்களில் இழையோடுகிற அடிநாதம்இந்த 'விடுதலை' தான்.

விடுதலை யுணர்ச்சி விஞ்சியதும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமிழ் மொழிக்கும் வாழ்வு கிடைத்துவிட்டது.

## கண்டதும் கேட்டதும்

**மாயாவி**

### அமிர்தலிங்கம் கூறியது என்ன?

"நான் தமிழனுகப் பிறந்திருந்தால் திரு. செல்வநாயகத்தின் கொள்கைகளையே பின்பற்றியிருப்பேன்" என்று 1961-ம் ஆண்டில் திரு. தகநாயக்கா அவர்கள் கூறியிருக்கிறுர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்த சிங்கள அரசியல் வாதிகளில் திரு. தகநாயக்காவும் ஒருவர்'. என்று வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் புதிய 'செக்ரடெரியட்' கட்டிடத்தைத் திறந்து வைத்த அமைச்சர் திரு. தகநாயக்காவைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினர்.

அப்பொழுது கூடியிருந்த பொது மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்து திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சை வரவேற்றூர்கள். திரு. அமிர்தலிங்கம் தமிழில் கூறியபடியினுல் அமைச்சர் திரு. தகநாயக்காவினுல் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அருகிலிருந்த ஒரு வயது முதிர்ந்த பாராளுமன்ற உறுப்பினரிடம் திரு. அமிர்தலிங்கம் என்ன கூறினர் என்று திரு. தகநாயக்காவினுவினூராம். திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சையும் மக்களின் ஆரவாரத்தையும் கண்டு முகம் கறுத்திருந்த அந்த பா. உறுப்பினருக்கு திரு தகநாயக்காவின் கேள்வி 'வெந்த புண்ணில் வேல் புகுத்தியது' போன்று இருந்ததாம்.

'எனக்குத் தெரியாது ஏதோ உன்னைப் பற்றித்தான் பெரிதாகப் பேசப்படுகிறது' என்று சற்று கடுமையான குரலில் அந்தத் தலைவரான பா. உ. திரு. தகநாயக்காவுக்கு பதில் கூறினராம். "ஏன்ரா இந்த மனிதனிடம் கேட்டோம்" என்று அமைச்சர் தலையைச் சொறிந்து கொண்டார்.

## கொழும்பு விவேகானந்த சபை

—***—

### சமயப் பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபையினர் ஆண்டு தோறும் நடாத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப்பரீட்சை இவ்வாண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி நடைபெறும் என்றும், இதற்கான விண்ணப்பங்கள் 18-9-65 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் சபை பரீட்சைச் செயலாளர் திரு. வி. சி. செல்லத்துரை அறிவித்துள்ளார்.

சகல பாடசாலை முதல்வர்களுக்கும் பின்வரும் சுற்று நிருபத்தையும் செயலாளர் அனுப்பிவைத்துள்ளார்.

'பாடசாலை இரண்டாந் தவணைப் பரீட்சையும் விடுமுறைகாலமும் குறுக்கிட்டதால் அநேகம் மாணவர்களது விண்ணப்பங்களை மேற்படி பரீட்சை விண்ணப்ப முடிவு திகதியாகிய 31-7-65 ற்கு முன்னர் அனுப்பி வைக்க முடியாமற் போம்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலி சபதத்தில் பாரதியின் சொல்லாட்சி

ச. தனஞ்சயராசசிங்கம்,
பி. ஏ. (ஒனர்சு) எம். லிட்டு

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன் சுப்பிரமணிய பாரதி மக்களாற் சிறந்த புலவராகக் கருதப்படவில்லை. இவரின் புலமைத் திறத்தினை மக்களுக்கு எடுத்து இயம்பிய பெருமை உயர்திரு விபுலானந்தர் போன்ற ஈழத்து அறிஞரைச் சாரும். திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தம் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில் பாரதியைப் பற்றி வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'சுப்பிரமணிய பாரதியென்பார் அரசாங்க இயக்கங்களில் மிகுதியும் ஈடுபட்டவரெனினும், யாவர்க்கும் விளங்க எளிய இனிய தமிழ்ச் சொற்கோவைகளால் நாட்டுப்பற்றும் நம்மொழிப் பற்றும் மிகும் வண்ணம் செவ்விய பாடல்கள் பல இயற்றியுள்ளார். இவர் உவமைகள் இயற்கை நலம் பெரிதும் வாய்ந்தன.' இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அறிஞரிடம் பாரதி பெற்ற மதிப்பிற்கு இத்தகைய சுருங்கிய ஓரவஞ்சக் குறிப்புகள் சான்றாகும். ஆனால், இன்று இந்நிலை மாறிப் பாரதி இருபதாம் நூற்றாண்டின் சிறந்த புலவரென யாவராலும் பாராட்டப்படுகின்றார். பாஞ்சாலி சபதத்தில் பாரதியின் சொல்லாட்சிச் சிறப்பினை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

## சொல்லாட்சி

'சிறந்த எழுத்தாளன் எவனும் சொற்களின் உற்பத்தி நோக்கிச் சொற்களைத் தெரிந்தெடுத்து ஆளமாட்டான்' என்று கேபெட்டு இரீடு (Herbert Read) என்பவர் தன் ஆங்கில உரைநடை என்னும் நூலிற் கூறியுள்ளார். இக்கூற்றிற்குப் பொருந்தப் பாரதியார் சொற்களைக் கையாண்டுள்ளார். வடமொழிப் பெயர்களைத் தமிழாக்கஞ் செய்யாமல் பலவிடங்களில் அவற்றினைப் பயன்படுத்தியுள்ளார், வடமொழி ஒலிகளைப் புலப்படுத்தும் கிரந்தச் சொற்களைச் சில சில இடங்களில் பயன்படுத்தியுள்ளார். ஸாரம், ராஜ, விஜயன், ஸஹாதேவன், ஸாக்ஷி, ஸரஸ்வதி, ஹரி, ஜெய, அக்ஷரம், சக்தி முதலிய சொற்கள் வடமொழியாக்கம் பற்றிய இலக்கண விதிகளுக்குப் புறம்பானவையெனினும் அவை பாஞ்சாலி சபதத்தின் சுவை குன்றாத வண்ணம் வழங்கப்பட்டுள்ளன.

## பேச்சுத் தமிழ்

பாரதியின் பாடல்களிற் பேச்சுத் தமிழ் வழக்குகள் நிறைந்துள்ளன. 'கதா' என்ற வடமொழிச் சொல் அடியினின்றும் 'கதைத்தல்' என்ற தொழிற்பெயர் உண்டாக்கப்படும். அது ஈழத்தில் 'பேசுதல்' என்னும் பொருளில் வழக்கும். சிங்களத்தில் 'கதாகறனவா' என்ற வழக்கினை நோக்குக. இவ்வழக்கு தென்னிந்தியாவில் புதுச்சேரியில் மட்டுமே வழங்குகிறதென்பதை அறியும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. பாரதியார் புதுச்சேரியில் பத்தாண்டுகள் வாழ்ந்தவராகையால் பாஞ்சாலி சபதத்தில் இவ்வழக்கினை வழங்கியுள்ளார். துரியோதனன் திரிதராட்டினன் கூறியதை யொட்டி வருமாறு கூறுகிறான். 'உறவென்றும் நட்பென்றுங் கதைக்கிறான்.' இவ்வாறு புதுச்சேரிக்கும் ஈழத்துக்கும் பேச்சுத் தமிழில் உள்ள ஒற்றுமைகளிற் சிலவற்றினைப் பாஞ்சாலி சபதத்தின் வாயிலாக அறிய முடியும்.

### யாழ்ப்பாண வழக்குடன்...

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் 'பேயன்' என்ற வழக்கு அறிவிலி, மடையன் என்ற பொருள்படும். திருவாசகத்தில், 'பேயனாகிலும் பெருநெறி கண்டாய்' என்ற வழக்கில் 'பேயன்' என்ற சொல் 'பித்தன்' என்ற பொருளை உணர்த்துகிறது. 'பேயன்' என்ற சொல் 'பேதை' என்ற சொல்லுடன் தொடர்புடையது. 'பேதை' என்ற சொல் பேத என்ற வடமொழிச் சொல்லிருந்து பெறப்பட்டதென்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி கூறும். 'பேயன், பேய்ச்சி' முதலிய வழக்குகள் தென்னிந்தியாவில் கன்னியாகுமரிப் பகுதியில் வாழும் தமிழர் பேச்சில் வழங்குகின்றன. ஆனால், அவ்வழக்குகளில் அவை பேய் பிடித்த ஒருவனையோ ஒருத்தியையோ குறிக்கின்றன. பாரதியார் 'பேயன்' என்ற சொல்லை யாழ்ப்பாண வழக்குடன் ஒத்த பொருளிலே பாஞ்சாலி சபதத்தில் வழங்கியுள்ளார். துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலினை உரிவதை 'அந்தப் பேயனுந் துகிலினை உரிகையிலே' என வருவித்துள்ளார்.

## ஒலிமாற்றம்

நாம் 'அதிகம்' என்ற பொருளில் 'கன' என்ற சொல்லை வழங்குகிறோம். இது கனம் என்ற வடமொழிச் சொல்லினின்றும் பெறப்பட்டது. 'கனபேர் வந்தனர்' முதலிய வழக்குகளை நோக்குக. 'கன தனங்கள' என்ற பாஞ்சாலி சபதச் சொற்றொடர் 'அதிக செல்வம்' என்று பொருள்படும். இவ்வழக்குப் புதுச்சேரியிலும் ஈழத்திலும் உண்டு.

பேச்சுத் தமிழில் இடையண்ண ஒலிகளாகிய இகர யகரங்களுக்குப் பின்வரும் ஒலிகள் இடையண்ண ஒலிகளாக மாறுவதை (palatalisation) என்பர். இம்முறையில் "போயிற்று' என்ற வடிவம் "போச்சு' என்றும் 'ஆயிற்று' என்ற வடிவம் 'ஆச்சு' என்றும் 'பித்து' என்ற வடிவம் 'பிச்சு' என்றும் மாறும். பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் "போச்சுது, உண்டாச்சு, பிச்சு' போன்ற சிதைந்த வழக்குகளைக் காணலாம். 'நியமம்' என்ற சொல் நேமம் எனத் திரிந்து வழங்கும். 'நோ, என்ற சொல் 'நோவு' என வழங்குதல் போல 'நா' என்ற சொல்லும் 'நாவு' என வழங்கும். பாரதியார் 'நேமம், நாவு' என்ற சொற்களைக்கையாண்டிருக்கின்றார்.

## ஓசை

'பரிசு கெடுதல்' என்ற வழக்கு யாழ்ப்பாணத்தில் 'தன்மையழிதல்' என்று பொருள்படும். கெடுதலெனினும் அழிதலெனினும் ஒக்கும். பாரதியார் 'பரிசழிதல்' என்ற வழக்கினை 'பாதகர் முனிந்நாட் பரிசழிதல் காண்பீரோ' என்ற அடியில் 'தன்மைகெடுதல்' என்ற பொருளில் வழங்கியுள்ளார்.

சிலசொற்கள்ஓசையினலே பொருளை உணர்த்தும் அற்றல் வாய்ந்தவை. அவற்றினை (Onomatopoeic) [illegible] அல்பிறெட்டு தெ[illegible] (Alfred Tennyson) இயற்றிய ஆறு (Brook) சிறுதிறப்படையின் தாக்கல் (Charge of the Light Brigade) முதலிய பாடல்களில் பல சொற்கள் ஓசையினலே பொருளை உணர்த்துகின்றன. பாரதியும் கலகலவென, வழவழத் தருமன், கரகரவென, பொக்கென முதலிய வழக்குகளைக் கையாண்டு சுவை நல்கியுள்ளார்.

## மரபுத் தொடர்கள்

யாமறிந்த மொழிகளிலே என்று பாடியவர் பாரதி. பிறநாட்டு நல்லறிஞர் கருத்துக்களைத் தமிழிற் றங்கு தடையின்றிப் புகுத்தியவர். 'திறை உப்பினுக்கு நாசந் தேடுகின்ற துரா' 'பிறர் கையிற் பொம்மை' முதலியவை ('Eat one's salt, a puppet') என்ற ஆங்கில மரபுத் தொடர்களை நினைவூட்டுகின்றன. 'பேயினை வேதமுணர்த்தல் போல்' என்ற உவமை கூட (The devil can cite scripture to its advantage) என்ற கருத்தை யொட்டிக் கையாண்டதோ என ஐயங் கொள்ள நேரிடுகிறது.

சின்னஞ் சிறிய, பென்னம் பெரிய முதலிய வழக்குகள் முறையே, மிகச் சிறிய மிகப் பெரிய என்ற பொருள்களை உணர்த்துகின்றன. சின்னம் என்பது சிறுமையென்பதினின்றும் 'பென்னம்' என்பது 'பெருமை' என்பதினின்றும் பெறப்பட்டவை. இம்முறையில் கன்னங்கரியது என்று வழங்கியுள்ளார். மிகக் கரியது என்றும் பொருள்படக் 'கன்னம்' (கருமை) என்ற அடை கொடுக்கப்பட்டுள்ளது.

## வருணனை

தவத்தினை உடையவள் என்ற பொருளில் 'தவத்தி' என்ற சொல்லையும், தொண்டு மகள் என்ற பொருளில் 'தொண்டச்சி' என்ற சொற்களையும் புதுமுறையிற் பெண்பாற் பெயர்களாகக் கையாண்டுள்ளார். 'பிள்ளைக்கதைகள், நொள்ளைக் கதைகள்' என்ற வழக்குகள் உலக வழக்கையொட்டியவை. அவை சிறுவரை நம்பவைக்கச் சொல்லும் கதைகள் என்றும் குருட்டு நம்பிக்கைக் கதைகள் என்றும் பொருள்படும். ஆங்கிலத்தில் (Granny's tale) என்ற வழக்குடன் ஓரளவு ஒத்திருக்கிறது எனலாம்.

சிறந்த புலவன் ஓர் அடையையோ வருணனையையோ திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதில்லை. படிப்போர் உளங்கள் சலிப்படையாமலிருக்க வெவ்வேறு அடைகளையும் வருணனைகளையும் கொண்டு பாத்திரங்களின் இயல்புகளை விளக்குவான். இவ்வாறு ஒரே தன்மை வாய்ந்தனவாகத் தன் வருணனைப் பகுதிகள் இருக்காதவாறு புதுப் புதுச் சொற்களைக் கையாளுதலை (relieving the monotony) என்பர். பாரதி சகுனியைத் 'தோல் விலைக்கு பசுவினைக் கொல்லும் துட்டன், மாயம் வல்ல மாமன், பிடிமுந்த சகுனி, [illegible] நெஞ்சச் சகுனி' என வருணித்திருப்பது அவரின் பல திறப்பட்ட சொல்லாட்சிக்குச் சான்றுகளாகின்றன.

## புதுவகை உவமைகள்

அடிமைப்பட்டிருக்கும் பாரத சமுதாயத்தில் பகுத்தறிவு கொண்ட மக்கள் ஆட்சிக்கு இடமில்லை. அதனைப் பாரதி வீட்டுமாசாரியன் வாயிலாக 'முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை' என விளக்குகிறார். அவ் விளக்கத்திற்குப் பொருந்த விலங்குகளைப் பொருளாகக் கொண்ட பல உவமைகளை அவர் கையாண்டது குறிப்பிடத்தக்கது.

'போரினில் யானை
விழக்கண்ட-பல
பூதங்கள் நாய் நரி
காகங்கள்-புலை
ஓரி கழு கென்றிவை
யெல்லாம்-தம
துள்ளங் களிகொண்டு
விம்மல் போல்'
'அம்புபட்ட மான்போல்'
'மாடு நிகர்த்த
துச்சாதனன்'
'நாய் மகனந்
துரியோதனன்'
'சிறுநாயொன்று தேன்
கலசத்தினை-எண்ணித்
துன்று முவகையில்
வெற்றுநா-வினைத்
தோய்த்துச் சுவைத்து
மகிழ்தல் போல்'

எந்தை, துந்தை என்ற செந்தமிழ் வழக்குகள் போல் ஓரிடத்தில் 'உந்தை' (உன் தந்தை) என வழங்கியுள்ளார். வேறோரிடத்தில் இழிவுடையவன என்ற பொருளில் 'இழிஞன்' என்ற சொல்லை வழங்கியுள்ளார். பொழுதுபோக்கு என்ற அவரின் வழக்கு 'past time' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளைத் தமிழில் செவ்வனே உணர்த்துகிறது.

## ஒப்பீடு

'பையல்' என்ற சொல் பசுமை என்ற சொல்லினின்றும் பெறப்பட்டதெனச் சென்னைப் பல்கலைக் கழக அகராதிகூறுகிறது. 'பைதல்' என்ற சொல்லின் திரிபே 'பையல்' ஆகும். இன்று தென்னிந்தியர் 'பயல் அல்லது பசல்' என்கின்றனர். 'பையன்' என்ற சொல்லுடன் இதனை ஒப்பிடுக. மலையாளத்தில் இன்றும் 'பைதல்' பையனைக் குறிக்கும். பாரதி 'பையல்' என்ற சொல்லை வழங்கியுள்ளார்.

'பிசுனன்' என்ற சொல் வடமொழியினின்றும் பெறப்பட்டது. அதுஉலோபியைக் குறிக்கும். இதே பொருளில் பாரதி வழங்கியுள்ளார். யாழ்ப்பாணத் தமிழில் 'பிசிநாறி' என்ற வழக்கினை நோக்குக. 'வலிய' என்ற சொல் 'தானக' பலவந்தமாக என்ற பொருள்களிலவழங்கும். 'வலிய வந்த சீதேவியைத் தள்ளாதே, வலியச் சண்டைக்குவாறான்' என்ற வழக்குகள இவற்றினை உணர்த்தும். சகுனி 'யானவன்—நனை இங்கு வலியக் கொணர்ந்திட்டேன்' என்று கூறும்பொழுது பலவந்தமாக என்ற பொருளில் 'வலியா' என்ற சொல்லை வழங்குகின்றான். இவ்வழக்கும ஈழத்து வழக்குடன் ஒத்திருக்கிறது.

## கவிஞன் புலமை

இவ்வாறு பாரதியின் சொல்லாட்சி பேச்சு வழக்கினையும் செந்தமிழ வழக்கினையும் விரவியதன்மையையுடையது. அது ஒரு வற்றாத ஊற்றாகும். சொற்கள் உணர்ச்சிக் கலப்பற்ற கருத்துக்களையும் உணர்ச்சிக் கலப்புள்ள கருத்துக்களையும் (emotive meaning) உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவை. பாரதி ஆண்ட சொற்கள் உணர்ச்சிக் கலப்புடையவை. உயிர்த்துடிப்புக் கொண்டவை. சுருங்கிய வடிவத்தில் விரிந்த பொருளை உணர்த்துவன. அவரின் சொல்லாட்சி அவரின் இயல்பான புலமைக்குச் சான்றாகும். சிறந்த சொல்லைச் சிறந்த இடத்தில் (best word in the best order) அமைப்பதில் பாரதிபோல் தேமதுரத் தமிழோசையுடைய ஞாலம் யாங்கணும் எவனும் இற்றைவரையும் பிறந்ததில்லை எனலாம்.

வாழ்க செஞ்சொற் பாரதி! வாழ்க நற்றமிழ்ப் பணி!

கல்வியே கருந்தனம்

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 செப்டம்பர் மாதம் 12-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183


## ஐ. நா. முயற்சி வெற்றி பெறுமா?

ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு பெரிய சோதனை ஏற்பட்டுள்ளது. திரு. பான்னம்பலம் இலங்கைப் பிரதிநிதியாக அங்கு சென்றதாலல்ல; இந்திய பாகிஸ்தான் யுத்தத்தால்.

பாரத தேசம் இருநாடுகளாகப் பிரிந்து, அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்து ஒன்றையொன்று அழித்துக்கொண்டிருக்கின்றன. இத்தலையங்கம் அச்சுக்குப் போகும் வரை யுத்தம் நிறுத்தப்படும் அறிகுறிகள் தென்படவில்லை. யுத்தத்தை நிறுத்திலைன்றி உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியாத நிலை உருவாகிவருகிறது. போர் நிறுத்தத்திற்கு ஐ. நா. சபை பெருமுயற்சிகள் செய்கின்றது. எனவே ஐ. நா. வின்பால் முழு உலகத்தின் கவனமும் திரும்பியுள்ளது.

இந்த முயற்சியில் ஐ. நா. வெற்றிபெறவில்லையேல், அதன் செல்வாக்கு செல்லாக்காசாகி விடும். உலக சமாதானத்தைக் காப்பதற்கு அது தகுதியற்ற ஸ்தாபனமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

18 ஆண்டுகளாக காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ. நா. சபை திறனற்றிருந்ததாற் தான் இன்று இருபெரும் ஆசிய நாடுகள் போர்த்தீயில் சிக்கிக் கொண்டன. இதனால் இலாபம் பெறுபவர்கள் இந்தியாவும் பாகிஸ்தானும் அல்ல—ஆனால் ஆசிய நாடுகள் மீது தங்களின் ஆதிக்கத்தைப் பரப்ப சதிசெய்யும் வல்லரசுகளே.

அமெரிக்கா இரு நாடுகளுக்கும் ஆயுதங்களை வழங்கியது. அதே ஆயுதங்களுக்கு இன்று இருநாட்டு மக்களும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இதைப்பார்த்த அமெரிக்காவோ; மௌனியாகிவிட்டது.

ஐ. நா. வுக்கு மட்டுமல்ல—"காமன்வெல்"த்துக்கும் இந்த யுத்தம் ஒரு சோதனையாகும். சாம்ராஜ்யக் குடும்பத்தின் இரு உறுப்பினர்கள் போரில் ஈடுபட்டுள்ளனர். போரை நிறுத்த இந்தக் குடும்பம் என்ன செய்தது? சில சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர்கள் பாகிஸ்தான் இந்தியத் தலைவர்களுக்கு போரை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தனர். (இலங்கை அதைக்கூடச் செய்யவில்லை) அத்துடன் இக்குடும்பத்தின் கடமை முடிந்துவிட்டதா? வருடத்துக்கு ஒரு முறை லண்டனில் கூடிப் பேசுவது மட்டுமே இந்த சாம்ராஜ்யக் குடும்பத்தின் சேவை என்றால், அந்தக் குடும்பத்தால் அதன் உறுப்பினர்களுக்கு என்ன பயன்?

ஐ. நா. முயற்சி வெற்றி பெறவில்லையேல், சாம்ராஜ்யப் பிரதமர்கள் உடனடியாக டில்லியிலோ, கராச்சியிலோ (லண்டனில் அல்ல) ஒரு அவசரக் கூட்டத்தை நடத்தி, சாம்ராஜ்யப் பிரதமர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து போரைக் கைவிடுமாறு சாத்திரியையும், அயூப்கானையும் நேரடியாக நிர்ப்பந்திப்பார்களா? இதைக்கூட செய்ய முடியாவிட்டால், இந்த சாம்ராஜ்யக் குடும்பம் இருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன?

பாகிஸ்தானும் இந்தியாவும் நமது அண்டை நாடுகள். நம் தலைவாயிலில்தான் இப்பொழுது போர் நடக்கிறது. டில்லி, கல்கத்தா, கராச்சி, லாகூர் போன்ற நகரங்களின் மீது குண்டு வீசப்படும்போது நமது சொந்த நகரங்களின் மீது குண்டு விழுவதைப் போன்ற அதிர்ச்சியும் வேதனையும் நாம் அடைகின்றோம். அத்தகைய நட்பும், உறவும், தொடர்பும் நமக்கு அந்த நாடுகளுடன் உண்டு. எனவே நாம் இந்த அழிவுப் போரைச் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

போரை நிறுத்துவதற்கு இலங்கைத் தேசிய அரசாங்கம் எல்லாவித முயற்சிகளையும் செய்ய வேண்டும். நம் நாடு எந்த வல்லரசுக் கோஷ்டிக்கும் சேர்ந்ததல்ல. ஆகவே போர் நிறுத்தத்திற்காக இலங்கை எத்தகையோ விதமான நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆசிய, ஆபிரிக்கத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு துரித நடவடிக்கையில் இறங்கலாம். உள்நாட்டில் எவ்வளவோ சிக்கல்களும், பிரச்சினைகளும் இருப்பினும், நமது இருசகோதரர்கள் சண்டை செய்யும் போது அதனைத் தடுக்க நாம் ஆவன செய்ய வேண்டாமா? ஐ. நா. வின் முயற்சி பயனளிக்கத் தவறி விடுமாயின், போரைத் தடுப்பதற்காக ஆசிய, ஆபிரிக்கத் தலைவர்களின் அவசர மாநாடொன்றைக் கூட்ட இலங்கை முன்வர வேண்டுமென்பதே எமது கருத்து.

இந்தப் போரில் இந்தியாவின் நிலையை ஆதரிப்போரும் பாகிஸ்தானின் நிலையை ஆதரிப்போரும் இலங்கையில் பலர் உண்டு. அவர்கள் இங்கு ஆர்ப்பாட்டங்களோ கூட்டங்களோ நடத்த அனுமதிக்கக் கூடாது. இவ்விரு நாடுகளிலொன்றை ஆதரிப்போர் அண்மையில் கொழும்பில் ஒரு கூட்டத்தை நடத்தப் போவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஒரு நாட்டின் ஆதரவாளர்களை ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதித்தால் மற்ற நாட்டின் ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டம் நடத்த முற்படுவர். இதனால் உள்நாட்டில் கொந்தளிப்பான நிலை தோன்றும். அந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

அத்துடன் இந்திய—பாகிஸ்தான் யுத்தத்தைப் பயன்படுத்தி அவ்விரு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையை வர்த்தகர்கள் திடீரென உயர்த்திவிடக்கூடும். கண்ணும் கருத்துமாக இருந்து அதனையும் தடுக்க வேண்டியது தேசிய அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

# அமைச்சருக்கு வரவேற்பு அடிமைச் சின்னமாகலாகாது

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அமைச்சர்கள் செல்ல ஆரம்பித்துள்ளனர். தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை முறைகளை அறிய அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் கஷ்ட நஷ்டங்களை நேரில் பார்த்தறியும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டுகிறது. கடந்த ஒன்பது வருடங்களாக இத்தகைய சந்தர்ப்பம் அமைச்சர்களுக்குக் கிடைக்கவில்லை. அமைச்சர்கள் தமிழ் பேசும் இனத்தை வெறுத்தொதுக்கினர்—அதே போன்றே தமிழ் பேசும் மக்களும் அமைச்சர்களை எதிர்கொண்டழைத்து உபசரிக்க முடியாதிருந்தனர்.

தேசிய அரசாங்கத்தில் தமிழ்பேசும் மக்களுக்கும் பங்கு இருக்கிறது. ஆகவே தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களை தமிழ் பேசும் மக்கள் வரவேற்பதில் எந்த விதமான ஆட்சேபனையையும் எவரும் தெரிவிக்க இடமில்லை.

தமிழ் பேசும் மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கேற்ற சேவைகளைப் புரிவதற்கு அமைச்சர்கள் அவசியம் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் செல்லத்தான் வேண்டும். அவர்களை மக்கள் மகிழ்வுடன் வரவேற்று உபசரிக்கத்தான் வேண்டும்.

அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புகளில், ஆண்டானை அடிமை வரவேற்பது போன்ற நிலை உருவாக அணுவளவேனும் இடம் தரக் கூடாது என்பதனை நாம் இங்கு வலியுறுத்தவிரும்புகிறோம்.

### எசமானரல்ல சேவகரே

அமைச்சர்கள் எமது எசமானர்களல்லர் என்பதனை சனநாயகத்தில் பற்றுள்ள எவரும் மறுக்க முடியாது. சுருங்கக் கூறின், அமைச்சர்கள் மக்களின் சேவகர்களே. மக்கள் அளிக்கும் வாக்குச் சீட்டுகளின் வல்லமையினால் தான் அவர்கள் அமைச்சர்களாகப் பதவிபெற வாய்ப்பு ஏற்பட்டது என்பதனை எவரும் மறக்கக் கூடாது.

அண்மையில் யாழ்ப்பாணம் அரசாங்க அலுவலகத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கச் சென்றிருந்த உள்நாட்டு அமைச்சருக்கு நடைபெற்ற ஒரு வரவேற்பில் சில தமிழ்க் கன்னியர் சிங்களப் பாட்டுப் பாடி வரவேற்புக் கொடுத்தார்களாம். இத்தகைய செயல் மிகக்கேவலமானது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தமிழ்பேசும் மக்கள் விடுக்கும் கோரிக்கைகள்யாவும் நியாயமானவை என்பதனை இந்நாடே உணரத் தலைப்பட்டு, சுமுகமான முறையில் சூழ்நிலைகள் மாற்றமடையும் போது, அடிமைப்புத்தி தலைகாட்டுவதை, நல்லறிவாளர்கள் அனுமதிக்கப்போவதில்லை.

தமிழ்ப் பண்பாட்டுக்கு எந்தவகையிலும் இழிவு ஏற்படாத தன்மையில், எமது விருந்தினர்களை ... மாக உண்டாக்கும் முறையில் அமைச்ச[illegible]

களுக்கு வரவேற்பு உபசாரங்களை நல்கவேண்டும். அத்தோடுமட்டும் நின்றுவிடாது தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களை அவர்களுக்கு காண்பித்து, துயரம் நீங்கவழி தேட வேண்டும்.

# கைலஞ்சம் வளரக் காரணத்தை ஆராய்க

### லஞ்சப் பிசாசு

லஞ்ச விசாரணைச் சபை விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது. ஏராளமான லஞ்சப்புகார்கள் இச்சபைக்குக் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு ரூபாய் முதற்கொண்டு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் வரை ஏப்பம்விட்டதாகக் கூறப்படும் புகார்களும் செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக விழுங்குவது லஞ்ச ஊழல்தான். நல்லவர்களையும் பொல்லாமைப் படுகுழிக்குள் தள்ளிவிட்டு வேடிக்கை காட்டுவதும் இந்த லஞ்சப்பேயின்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

கூத்துத்தான். நிர்வாக இயந்திரத்தில் நேர்மைக்கு இடமில்லாமல் செய்யும் குற்றவாளியும் இந்த லஞ்சம்தான்.

சுருக்கமாகக் கூறப்போனால், ஆண்டி முதல் அரசன் வரை அனைவரையும் இந்த லஞ்சம் கவரத்தவறவில்லை.

லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து, குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்ற கருத்தினை நாமும் ஆமோதிக்கிறோம். ஆனால் இந்தக் குற்றங்கள் மென்மேலும் தொடர்ந்து, இந்த நாடு குட்டிச்சுவராகாமலிருக்க ஏற்ற வழிவகைகளை, குற்றவாளிகளைத் தண்டிப்பதனால் மட்டும் பெற்றுவிட முடியாது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### தொகையின் அளவு

பெரும் பதவியிலிருப்பவர் பெறும லஞ்சம் அவருடைய பதவிக்குத் தக்கபடி பெருந்தொகையினை உடையதாகவிருக்கும். சிறு ஊழியத்திலுள்ளவருக்குக் கிடைக்கும் லஞ்சத் தொகை சிறிதாகவிருக்கும். தொகையின் அளவைக்கொண்டு தண்டனையை நிர்ணயித்தலாகாது. புரியப்பட்ட குற்றம் ஒன்றேதான். ஆகவே தண்டனையும் ஒரே சீராகவே இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் சகல வசதிகளையும் பெற்று சிறப்புற வாழ்பவர்கள் பலர் கைலஞ்சம் வாங்கிய குற்றத்துக்குள்ளாக்கப்படுவது வியப்பையே அளிக்கிறது. தமது வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவதற்கேற்ற வேதனத்தை மாதாமாதம் பெறும் ஒருவர் லஞ்சம்வாங்குவாரானால் அவர் புரிந்த குற்றம் மிகப் பாரியதாகும்.

### குற்றவாளி யார்?

லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டவருடைய வருமானத்தையும் அவருடைய குடும்ப நிலையினையும் சற்று அவதானித்துப் பார்க்க வேண்டும்.

வாழ்க்கையில் வசதியற்ற ஒருவன் கைலஞ்சம் வாங்குவது குற்றமேயெனினும், அவனை லஞ்சம் வாங்கும் அளவுக்குத் தூரத்தியடித்த சூழலை ஆராய வேண்டும். தனது குடும்பத்தை சீராகக் காப்பாற்ற வகையில்லாத வேதனத்தைப் பெறும் ஒருவனை லஞ்சம் வாங்கத் தூண்டியது வறுமையேயாகும். அப்படியானால் அவனுடைய குடும்பத்தை வகையாகக் கவனிக்கமுடியாத அளவு வேதனத்தை வழங்குவோரே அவனைக் குற்றவாளியாக்கியுள்ளனர் என்று கூறலாம்.

ஒரு அரசாங்க சிப்பந்தி அவனுடைய குடும்பத்தைச் செம்மையாகக் காப்பாற்ற முடியாமற் தவிப்பானேயானால், அவனுக்கு அளிக்கப்படும் வேதனத்தைச் சீராக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாகிறது. அல்லாது போனால் நிச்சயமாக லஞ்சப் பிசாசின் வாயுள் அவன் விழுந்துவிட ஏதுவாகும்.

### பொலீசு

பொலீஸ் இலாகாவினுள் லஞ்சப்பிசாசு மிகப்பயங்கரமாகத் தாண்டவமாடுகிறது என்பது அடிக்கடி செய்யப்படும் புகார். குற்றம் புரிபவர்கள் குற்றத்திலிருந்து தப்புவதற்காக லஞ்சப்பிசாசின் தயவை நாடுவதுண்டு. இதனால் நீதியின் கண்களுக்கே திரையிடப்பட ஏதுவான சம்பவங்கள் நிகழ இடமுண்டு.

நாட்டில் அமைதியை நிலைநாட்ட அல்லும் பகலும் அரும் பாடுபடும் பொலீசாருக்கு அளிக்கப்படும் வேதனங்களையிட்டு அண்மையில் வெளியான செய்திகள் நாட்டையே துணுக்குற வைத்தது. தங்கள் உயிரையே திரணமாக வைத்துப் போராடும் பொலீசாருக்கு வழங்கப்படும் வருமானமோ மிகவும் சொற்பமானது. இந்த வருமானத்தை வைத்துக்கொண்டு, வளர்ந்து கொண்டேபோகும் வாழ்க்கைச் செலவுடன் அவதியுற அசாத்தியத் திறமைசாலிகளாலும் முடியாது. ஆகவே கைலஞ்சப் பிசாசு உட்புக இலகுவான பாதை அங்கே கிடைத்து விடுகிறதல்லவா?

பொலீசாருடைய வருமானம் அவர்களுடைய வாழ்க்கை வசதிக்கு ஏற்றதாக அமையுமானல நிச்சயமாக அவர்கள் கைலஞ்சப் பிசாசின் கோரப்பிடிக்கு ஆளாக முடியாதல்லவா?

லஞ்ச ஊழல்களை ஒழிப்பதற்காக முயலுமுன்னர் லஞ்சப்பேய் நடமாடுவதற்கான காரணம் என்ன என்பதனையும் கண்டறிதல் வேண்டும். லஞ்சம் வாங்குபவர் எந்த நிலையில் வாங்குகிறார் என்பதனை ஆராய்ந்து அத்தகைய சூழ்நிலை அவருக்கு ஏற்படாமல் இருக்கவும், லஞ்சப் பேயின் நடமாட்டப் நீடிக்காமலிருக்கவும் அரசாங்கம் கையாள வேண்டிய வழி முறைகள் எவை என்பனவற்றையும் எடுத்தோதவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களுக்கு அளிக்கும் வரவேற்புக்கும் எல்லை வேண்டும்

## கொடியும் ஆலவட்டமும் அவசியமற்றவையாகும்

### தமிழரசு வட்டாரங்கள் கருத்து

தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து உருவாக்கிய ஒரு அரசாங்கத்தின் அமைச்சர்கள் என்ற ரீதியில இன்று தமிழ் பேசும் மக்கள் அமைச்சர்களுக்கு வரவேற்புக் கொடுப்பது தவருகாது. ஆனல் வரவேற்பைக் கொடுக்கும் பொழுது அதற்கு ஒரு எல்லையும் வேண்டும். பண்டைக் காலத்தில் மன்னர்களுக்கு வரவேற்பளிப்பது போன்ற முறையில் அமைச்சர்களை வரவேற்பது நல்லதல்ல என்று தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் அபிப்பிராயம் நிலவுவதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

நமது நிருபர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த ஒன்பது ஆண்டு காலமாக இந் நாட்டின் அமைச்சர்கள் வட-கிழக்கு மாகாணங்களுக்கு வர முடியாத ஒரு நிலையிலிருந்தது. அப்படி வந்தவர்களைக் கறுப்புக் கொடிகளே வரவேற்றிருக்கின்றன.

இன்று தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து உருவாக்கிய ஒரு ஆட்சியமைப்பு தோன்றியிருப்பதால் தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு தமிழ் பேசும் மக்கள் மலர்ந்த முகத்துடன் வரவேற்புக் கொடுப்பது எவ்விதத்திலும் தவருக மாட்டாது. ஆனல் அமைச்சர்கள் வட-கிழக்கு விசயம் செய்யும் பொழுது தமிழ் பேசும் மக்கள் கொடுக்கும் வரவேற்புக்கு ஒரு எல்லை இருக்க வேண்டும்.

தமிழ்ப் பெண்களைக் கொண்டு சிங்களப் பாடல்கள் பாடுவிப்பதும், நில பாவாடை, ஆலவட்டம் பிடிப்பதும் அதிகப்படியானதாகும். இவற்றையெல்லாம் விடுத்து சாதாரணமான முறையில் அமைச்சர்களுக்கு கொடுக்கும் வரவேற்புகள் அமைய வேண்டும் என்று தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் பலமான கருத்து நிலவுகிறது.

### மாநாட்டை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லைக்கழகக்கிளை நிறுவப் படும் பொழுது முதலில் திருமலையில் நிறுவுவதற்கு கட்சிசிபாரிசு செய்ய வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

மூதவைக்கு த. அ. கட்சியின் சார்பில் ஒரு சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியை அல்லது மலநாட்டுப் பிரதிநிதியை நிறுத்தும்படியும் கட்சித்தலைமைப் பீடத்தை கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

# சைவ சமயிகள் கேட்கவில்லையாம்

## விடுமுறை பற்றி உள்நாட்டு அமைச்சர்

வெள்ளிக்கிழமைகளில் சைவ ஊழியர்கள் திருக்கோயில் வழிபாடு செய்வதற்கு இரண்டு மணிநேர விடுமுறை கொடுக்க வேண்டுமென்று திரு இரத்தினம் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கேட்டுக் கொண்ட பொழுது உள்நாட்டு அமைச்சர் சைவ மன்றங்களிடமிருந்து இதுபற்றி எத்தகைய வேண்டுகோளும் கிடைக்கவில்லையென்றும், அப்படி ஏதாவது வேண்டுகோள் கிடைக்கும் பொழுது அதுபற்றி ஆராயலாம் என்று கூறினர் என்று அறியப்படுகிறது.

விடுமுறை நாட்களைப் பற்றி ஆய்ந்த அரசாங்க பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் சைவசமய மக்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் காலை 9மணி தொடக்கம் 11மணிவரை திருக்கோயில் வழிபாட்டுக்கு விடுமுறை கொடுக்க வேண்டுமென வற்புறுத்தினராம்.

இதற்கு உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயக்கா சைவமக்களிடமிருந்தோ சைவ மன்றங்களிடமிருந்தோ எத்தகைய வேண்டுகோளும் கிடைக்காத படியால் இதுபற்றி இப்பொழுது வற்புறுத்த வேண்டாமெனவும், சைவ மக்கள் கேட்கும் போது பின்னர் கவனிக்கப்படும் எனவும் கூறினர் எனத்தெரிகிறது.

திரு. இரத்தினம் அவர்களின் பிரேரணைக்கு தமிழரசு உறுப்பினர்களைத் தவிர வேறு தமிழ பேசும் உறுப்பினர்கள் எவரும் ஆதரவு கொடுக்கவில்லை யென்றும் தெரிகிறது. இந்த மன்றங்களின் தலைவர்களாக இருக்கும் உறுப்பினர்களும் இப்பிரச்சினையில் மௌனவிரதம் இருந்து விட்டார்களாம்.

வெள்ளிக்கிழமைகளில் இரண்டு மணி நேரம் திருக்கோயில் வழிப்பாட்டுக்கு விடுமுறையாக வழங்க வேண்டுமென்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும், கொழும்பு விவேகானந்த சபையும் அமைச்சருக்கு கதிதம் எழுதிருப்பதாகத் தெரிகிறது.

### இடதுசாரிகளின் ...

(4ம்-பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:

'கூட்டரசாங்கம் பத்திரிகை மசோதாவைச் சட்டமாக்கியிருந்தால் இன்று இந்த நாட்டில் பேச்சுச் சுதந்திரமே இருந்திருக்காது. அந்த சர்வாதிகாரச் சட்டத்தை முறியடித்த அனைவருக்கும் நாட்டு மக்கள் நன்றி செலுத்தியுள்ளார்கள் என்பதை நடந்து முடிந்த பொதுத் தேர்தல் சந்தர்ப்பத்திற்குகிடமின்றி நிரூபித்துக் காட்டியுள்ளது.

'இந்த நாட்டிலுள்ள மூன்றில் இரண்டு விகித மக்கள் தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கிருர்கள். எனவே எந்தச் சக்தியாலும் தேசிய அரசாங்கத்தை அழிக்க முடியாது.'

திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிலிப்குணவர்தன, ஆர். பிரேமதாசா, சி. பி. டி. சில்வா, டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா, கே. எம். பி. இரசரத்தின, திரு. எஸ். தொண்டமான் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

---

### இ. தொ. க...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முருகையா, பி. கே வேலு ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள். அத்துடன் பின் வருவோர் முன்னணியின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்:-

தலைவர்: திரு: மு. பெருமாள், இராயந்துரை. துணைத் தலைவர்: திரு. எம். பழனியப்பன், டன்சினன் ந/பி., செயலாளர்: திரு. வி. நல்லமுத்து, டன்சினன் மே/பி., துணைச் செயலாளர்: திரு. கோவிந்தன், அரைகந்தை. பொருளாளர். திரு. வி. மருதமுத்து, நல்லதண்ணி., துணைப் பொருளாளர்: திரு. எம். மருதமுத்து, புதுவட்டக்கொடை.

நிர்வாகக் குழு அங்கத்தவர்கள்: திரு. ஆர். சுப்பிரமணியம், கண்டித்துரைத் தோட்டம், திரு. கந்தையா, சின்ன தோட்டம். திரு. வி. பி. பாலகிருஷ்ணன், மோர்சன தோட்டம். திரு. வி. எம். பொன்னையா, செந்தில்பத்தனை மே/பி. திரு. எஸ். ராசு, ஸ்கல்ப்பா.

# துறைமுக அதிகாரசபை பற்றி அமைச்சரிடம் முறையீடு

## தமிழில் தொடர்பு கொள்ள வசதி செய்யுமாறு வேண்டுகோள்

தமிழ் ஊழியர்களுடன் நடத்தும் எல்லாக் கடிதத் தொடர்புகளையும், தமிழில் நடாத்துமாறும் தமிழ் ஊழியர்களுக்கான சம்பளப் பட்டியல்களைத் தமிழில் தயாரிக்குமாறும், இலவச புகையிரத அனுமதிச் சீட்டுக்களைத் தமிழில் எழுதிக் கொடுக்கும் படியும் போக்குவரத்து தேசிய சேவைகள் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள ஒரு மகசரில் இலங்கைத் துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் கேட்டுள்ளது.

அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவிடம் கழகம் சமர்ப்பித்துள்ள நீண்டதொரு மகசரில் மேலும்குறிப்பிட்டுள்ளதாவது:

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலம் ஆங்கிலம் தெரியாத சிங்கள ஊழியர்கள் தமது தாய் மொழி நிர்வாகத்தில் இடர் நீங்கி வசதியும் வாய்ப்பும் பெற்றனர். ஆனல் தமிழ் ஊழியர்களோ ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்த நாட்களில் அடைந்த இழிவு போலவே சிங்களம் ஆட்சி மொழியானதாலும் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையை கொழும்புத் துறைமுக அதிகார சபையில் பட்டவர்த்தனமாகக் காணமுடிகிறது. சிங்கள ஊழியர்களின் சிங்களக் கடிதங்களுக்குக் கொடுக்கும் மதிப்பை தமிழ் ஊழியர்களின் தமிழ்க்கடிதங்களுக்கு கொடுக்க துறைமுக அதிகார சபை மறுக்கிறது. எழுதும் மொழியில் பதில் பெறலாம் என்று பாராளுமன்றத்தில் கூறப்பட்ட போதிலும் இந்த உரிமையை வழங்க துறைமுக அதிகார சபை மறுக்கிறது. இந்த நிலையை மாற்றியமைத்து தமிழ் ஊழியர்களின் தமிழ்க் கடிதங்களுக்கு தமிழில் பதில் கொடுக்குமாறு துறைமுக அதிகார சபைக்கு உத்தரவிடுமாறு அமைச்சரைக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

இப்பிரச்சினை சம்பந்தமாக து. நா. இ. கழகம் தமிழரசுப் பிரதிநிதிகளையும் பேட்டி கண்டிருக்கிறது. தமிழரசுப் பிரதிநிதி திரு. சி. சதிரவேற்பிள்ளை கழக உறுப்பினர்களிடம்: 'தமிழ் ஊழியர்கள் ஒன்று பட்டுப் போராடினல் நிர்வாகம் பணிந்தே தீரும். துறைமுக அதிகார சபையில் நிலவும் ஒரு தலைப்பட்சமான நிர்வாகத்தை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் எடுத்துக்கூறி உங்கள் இடர் களைய முயற்சிப்பேன்' என்று கூறியுள்ளார்.

### தமிழ் ஒதுங்கியது ஏன்?

யாழ்ப்பாண செக்டரெடியேட்டின் முகப்பில் தமிழ் ஒதுக்கப்பட்டிருப்பதை பல இயக்கங்களும் கண்டித்து வருகின்றன.

அண்மையில் அமைச்சர் டாக்டர் தகநாயக்காவினல் திறந்துவைக்கப்பட்டயாழ்ப்பாணம் புதிய செக்டரெடியேட் (கச்சேரி) கட்டிடத்தின் பெயர் பொறிக்கப் பட்டிருக்கும் முறையைவிட்டு பல மன்றங்களும், தொழிற் சங்கங்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. அத்தீர்மானத்தை யொட்டி சங்கச் செயலாளர் திரு. வே. தங்கவேலு உள்நாட்டு அமைச்சருக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் ஆண்டுக் கூட்டத்திலும் தமிழுக்கு மூன்ருவது இடமும், சிங்களத்திற்கு முதலிடமும் கொடுத்து யாழ்ப்பாணம் புதிய செக்டரெடியேட் கட்டிடத்தின்பெயர் பொறிக்கப் பட்டிருப்பதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

---

அடுத்த வாரம்

திருவாட்டி

**கோமதி வன்னியசிங்கம்**

**பேட்டி**

**“எங்கள் கோப்பாய் கோமான்”**

யாழ். நகர முதல்வர் எழுதியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி நாள்

**எமது சிறுகதை**

**திருமதி ஆ. பொ. செல்லையா**

அன்பர்களின் அல்லலைக் காணும் பொழுது நண்பர்களின் நயன வழிகள் கண்ணீர் பல்கும். ஆனால் அயலவர் தமக்காகப் பரிதாபப்பட்டு நீலிக் கண்ணீர் வடிப்பவர்களும் உண்டு. இந்த இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவள்தான் தேவாம்பிகை.

பூங்காவனத்தில் வள்ளியை முருகன் அணைத்ததையும், குளத்தங்கரையில் கோபியரின் சேலையை மறைத்த மாயவனின் லீலைகளையும் வர்ணிப்பதில் தேவாம்பிகை மிகவும் திறமைசாலி. எனினும், மகள் மங்களம் மாறவர்மன்மேல் வைத்திருக்கும் மாசற்ற அன்பை—தெய்வக் காதலைக் காறித் துப்பினாள்.

மாறவர்மனோ கல்லூரிக் கல்வியைக் கடந்து, பல்கலைக் கழகத்தில் நுழைந்து, பட்டம் பெற்று, பதவியில் அமர்ந்து வெறும் புத்தகப் பூச்சியாக நில்லாது, மீண்டும் தமிழகம் தொன்மை எழிலோடு வன்மைபெற்றுத் தமிழரசுத் தூதுவர்கள் பாமரங்கும் பவனி வர, விடுதலை முழக்கம் முழங்க, நாடெங்கிலும் சுதந்திர கீதங் கேட்க, தாய்நாட்டின் அடிமை விலங்கொடித்து, தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறக்க, ஆனந்தப் பள்ளுப் பாடும் பகுத்தறிவுப் பாசறையின் சுதந்திரச் சுடராக விளங்கினான்.

ஆதலால், மாறவர்மனை ஒதுக்கிடத் தேவாம்பிகைக்கு விருப்பமில்லை. மங்களத்திற்கும் அவனுக்கும் மணமுடிச்சினைப் போட்டுவிடலாமா வென எண்ணினாள்; ஆனால் மாறவர்மனின் படிப்பு, பதவி, வசதியான நிலை இவைகளுக்கு ஈடாக நாட்டு வழக்கப்படி மங்களத்திற்கு நன்கொடை கொடுக்க வேண்டுமே! அதற்கென்ன செய்வது என்ற சிந்தையில் ஆழ்ந்தாள்.

மாறவர்மனின் பண்பு, எண்ணம், கொள்கை, கோட்பாடுகளைச் சாதகமாக்கி, தந்திரமாக நன்கொடையை, நாட்டினர் கண்களுக்கு ஏதோ தாமும் கொடுத்ததாக நினைக்க, தகப்பனால் சேரவேண்டியதைக் கொடுத்து, திருமணத்தை முடித்துவிடலாமென்ற யோசனையைக் கூறினான் மருதரத்தினம்.

இருப்பினும், மாறவர்மனின் பெற்றோர்கள் சம்மதப்பட மாட்டார்கள்; மாறவர்மனும் சம்பிரதாயச் சடங்குகளைத் திருமணத்திற்கு வைத்துக் கொள்ள மாட்டான். என்ன செய்வது? நாட்டு மக்களின் கண்களுக்குத் தாமும் நாலுபேரைப் போலக் கௌரவமாக நடந்ததாகக் காட்டிக்க வேண்டுமென்ற வரட்டு வேதாந்தம் தேவாம்பிகையின் மனத்தைக் குடைந்தது.

மாறவர்மனின் நல்ல மனப்பான்மையைச் சாதகமாக்கி, தாள்பணியாமல் செலவில்லாமல், நாட்டு மக்களின் கண்களை ஏமாற்றி, மீதப்படுத்தக் கூடியதை மீதப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது மருதரத்தினத்தின் எண்ணம்.

மங்கையின் மலர்க்கரம் பற்றுவதென்றால் மங்களத்தின் மணக்கரத்தையே பற்றுவதென்று பகிரங்கமாகவே பறையறைந்த மாறவர்மன்—மங்களத்தைச் சந்திக்க முடியாத தடுப்புகளும், கட்டுப்பாடுகளும் ஏற்பட்டதால், பிடித்தமில்லாத பிறந்தகத்தாரால் மங்களம் துன்புறுத்தப் பட்டதால், காலங் கடத்தாது மங்களத்தைக் கூட்டிவிட வேண்டுமென்று எண்ணினான்.

'மங்களம் மாறவர்மனோடு ஓடிவிட்டாள்'—என்ற இழிசெமொழியை வசைமொழியாக நாட்டினர் பேசக்கொள்வாரே என்றநடுக்கத்தால், மணத்தின மக்கள் மங்களமாகப் பேசிக்கொள்ள, எப்படியும் முடித்துவிட வேண்டுமென்று முனைந்தாள் தேவாம்பிகை.

ஆதலால், மருதரத்தினம் திருமணப் பேச்சை ஆரம்பித்தார். மருதரத்தினத்தின் சுயநலத்தையும், தேவாம்பிகையின் ஓரவஞ்சனையையும் நன்கறிந்த மாறவர்மன் முள்ளை முள்ளால் எடுப்பது போல வஞ்சத்தை வஞ்சத்தாலே தாக்கிறது, சதியை மதியாலே வெல்லக் கருதினான்; ஆதலால், மருதரத்தினம் பேசிக்கொண்டதற்குச் சம்மதித்தான்.

திருமண நாள்! மாறவர்மனைத் தவிர அவனது பெற்றவர்களுக்கோ, இனத்தவனுக்கோ சுற்றத்தவர்களுக்கோ தெரியாது. ஆனால், தேவாம்பிகையின் நெருங்கிய பந்துக்களும், சுற்றமும் தேவாம்பிகை வீட்டில் மாறவர்மனின் வரவுக்காகக் காத்திருந்தார்கள்.

இரவு நேரம். திருமண விழாவில் கலக்கும் சபையோர்களுக்கு 'கலியாணச் சாப்பாடு' பரிமாறுவதற்கான சமையல் தடல்புடலாக நடக்கின்றது. குழந்தைகள் பலவகையான எண்ணங்களோடு திருமணக் காட்சியைக் காணும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டும், மங்களத்தின் மணத்தோடு தலைப்பாரங்கள் யாவும் தொலைந்தது என்று தேவாம்பிகையும், தமக்கெதுவும் கிடைக்காது—கிடைத்தாலும் மிகவும் சொற்பம்தான் என எண்ணிய தேவாம்பிகையின் புத்திர சிகாமணிகள் 'சிம்கானு அதிட்டம் அடித்து' விட்டதாக அங்கலாய்த்தும், இப்படி ஒவ்வொருவரும் தத்தம் போக்கில் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளை மாறவர்மன் சில நண்பர்களுடன் தேவாம்பிகை வீட்டில் நுழைந்தான்.

உபசார மொழிகள் கேட்டன. மாறவர்மனின் நண்பர்களைக் கண்டதும் மருதரத்தினத்தின் தம்பிகளின் நெஞ்சம் துணுக்குற்றது. திருமணப் பேச்சின்போது மாறவர்மனில் கண்ட புன்னகையைக் காணாது—மாறவர்மனின் செய்கைகளின் மாறுதல்களையும் கண்ட மருதரத்தினம் அதிர்ச்சியடைந்தான்; நடக்கப் போவதை ஒருவாறு ஊகித்துக் கொண்டான். ஆனால், எதுவுமே செய்யமுடியாதென்பதை மாறவர்மனின் நண்பர்களின் அலட்சியப் பார்வையிலிருந்து புரிந்து கொண்டான்.

எனினும், சம்பிரதாயமாகப் பேச்சைக் கொடுத்தான். படிந்து பேசுவது போலச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த மாறவர்மனின் குரலில் கடுமை தொனித்தது.

'மருதரத்தினம்! நீயும் உனது தாயும் சேர்ந்தாடிய கபட நாடகத்தை நானறிவேன். மங்களம் இல்லாததைக் கேட்கவில்லை; உள்ளதிலும் உனக்கும் உனது தம்பியர்க்கும் விட்டுத்தான் கேட்டாள்; தனது தமைக்கையர்களுக்குக் கொடுத்ததைப்போல தனக்கும் கொடுக்கச் சொன்னாள். கொடுப்போமென்றாய்; கொடுத்தாயா? அவளது தந்தையால் சட்டப்படி சேரவேண்டியவை. மங்களந்தானே இளையவள்! அவள் உனது தங்கைதானே! அவள் நன்கு வாழட்டும் என்று எண்ணினாயா? நான் அவளைக் கைவிட்டேன் என்பதை மனதில் வைத்து, ஏதோ கொடுத்துருப்பதுபோல மக்களும் நினைக்கட்டுமென்று அவளது தந்தையால் சேரவேண்டியதைக் கொடுத்து, மீதத்தை நீ சுருட்டலாமென்று நினைத்தாயா? நீயும் ஒரு சகோதரமா?

'தாலி கட்டுவதைத் தவிர வேறெந்தச் சடங்குகளும் இருக்காது; தாலிக் கொடியையும் நீயேசெய்து தருவதாகக் கூறினாயே! ஆனால், இங்கு நீ தீட்டிய திட்டமென்ன? ஆருமற்றுத் தனியே வருமென்னைப் பணிய வைத்து, தாலிக் கொடிக்கான செலவுத் தொகைக்குப் புறநோட்டில் என்னிடம் ஒப்பம் வாங்கி சடங்கு சம்பிரதாயங்களோடு தாலியும் கட்டச் செய்யலாமென்பது. மருதரத்தினம்! நீ அனுபசாலியாக இருக்கலாம்; தந்திரத்தில் நரியாகஇருக்கலாம்; ஆனால் எனது படிப்பையும் பகுத்தறிவையும் நீ சிந்திக்காதது உனது தம்பிமார்களின் பராக்கிரமத்தில் கொண்ட நம்பிக்கையாக இருக்கலாம் அதற்கும் அஞ்சமாட்டான் இந்த துரிமாநெஞ்சன் என்பதை இந்தச் சூழ்நிலை காட்டியிருக்கும்.

"உனது பந்துக்களுடன் திருமணத்தை நடத்த நினைத்த நீ-எனது பந்துக்கள் வரமாட்டார்கள் என்பதை அறிந்தும் அவர்களையும் அணைக்க வேண்டும் என்று உனது பந்துக்களைப் பற்றி நீ நினைத்தது போல ஒரு கடுகளவாவது நினைத்தாயா? சுயநலங் கொண்டவனே! அவர்கள் வராது விட்டாற்றான் என்னை உனது விருப்பப்படி பணியவைக்கலாம்; மங்களத்திற்குக் கொடுக்கும் நன்கொடையையும் உரைத்துப் பார்க்க ஆளிருக்காது; என்னையும் ஒரு பெண் பித்தனென்ற பழிச்சொல்லுக்கு ஆளாக்கி-சிறைச்சாலைக் கைதியாக்கி ஆட்டிப் படைத்துத்தோட்டத்தையும் உறிஞ்சலாமென்று நினைத்தாய் துரோகி!நீயும் ஒரு உடன் பிறப்பா: உலக்குச் சகோதர வாஞ்சை என்பதில்லையா? பெற்றவளுக்கில்லாத அக்கறை உனக்கெங்கே வரப்போகிறது?

"பெற்ற வயிறு பொறுக்குதில்லை என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறாளே உனது தாய்! எதற்காக வடிக்கிறாள்? உனது வீட்டை நாடி வரும் பெண் பித்தர்களால் வரயிருக்கும் ஆபத்தை எடுத்துரைத்தாளா மங்களம். அந்தத்தாசில்லாலர்களை வரவொட்டாது தடுத்தாளா உனது தாய்? பதிலாக என்னைப் பற்றி வசை புராணம் பாடுவதற்குப் பாலூற்றி வர வேற்றாள்; மங்களம் பெற்றதோ அடி உதை. குடும்பத்தின் கௌரவத்தைக் காற்றில் பறக்கவிடாது தடுப்பதற்காகச் சொன்ன மொழிகளுக்காக மங்களம் பெற்றது புளிச்சட்டி! என்னைப்பற்றி இழித்துரைத்த எத்தர்களை எதிர்த்ததற்காக எத்தனை நாள் பட்டினி போட்டார்கள் மங்களத்தை? மற்றைய சோதரிகளுக்குக் கொடுத்ததை விட மங்களம் ஒன்றும் கூடக் கேட்டுவிடவில்லை. மேலும் இளையவள்தானே. நன்கு வாழட்டும் என்று எண்ணினாளா உனது தாய்? ஓரவஞ்சனையாக நடந்தாள்! என்னைப்பற்றி எள்ளி நகையாடினாள்! எனது வீரத்தைப் பழித்துரைத்தாள்! சபதமெடுத்தாள்! அவளும் ஒரு தாயா? பெற்ற பாசமென்பது உண்டா? எதற்கு வடிக்கிறாள் முதலைக் கண்ணீர்?

"எனது குடும்பத்திலே பெண்ணிருக்க, படித்தவர்களும், வசதியோடு வாழ்பவர்களும் காத்திருக்க பங்களத்தை நான் மணமுடிகிறேனென்றால் அவள் என்மேல் வைத்திருக்கும் மாசில்லா அன்புக்கும், நம்பிக்கைக்குமாகத்தான். மங்களத்தை ஏமாற்றிவிட முடியாதா? எந்த, எனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் எள்ளி, நீயும் உனது குடும்பத்தவர்களும் நகையாடினீர்களோ, அதே கொள்கைகளும் கோட்பாடுகளுந்தான் அவளை ஏமாற்றாது—அவளது இதயம் இன்ப வெள்ளத்தில் புரள, அவளை எனது மனைவியாக்கப் போகின்றன.

எனது சுற்றத்தைப் பிரித்து, என்னைச் சிறைக் கைதியாக்கி நீயும் உனது தாயின் வரட்டுக் கௌரவங்களைக் காப்பாற்றப் பார்த்தீர்கள். ஆனால், உங்களை விட்டுவந்தால் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையில் மங்களத்தை உலவவிட எனது பெற்றோர்களும் சுற்றமும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"மங்களத்தை நீங்கள் யாருமே குடும்பத்தில் ஒருத்தியாக நடத்தாததாலும், என்னைக் குடும்பத்தில் ஒருவராக வரயிருப்பவனென்று மதியாததாலும், சகோதர சகோதரர்கள் சுயநல முற்றதனாலும், பெற்றவள் ஓரவஞ்சனை அடைந்ததாலும் மங்களம் இந்த வீட்டில் உலவியது இன்றே கடைசி நாள்.

"மங்களம் என்னுடன் வருவதைத் தடுக்கவோ, உனது தாய்க்குத் தனது சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளவோ துடிக்கிருந்தால் இதோ எனது நண்பர்கள் பதில் சொல்வார்கள்-'' என்று தனது மனதில் கிடந்த யாவற்றையும் கக்கினான் மாறவர்மன்.

மருதரத்தினம் கதிரையில் கற்சிலையானான்; அவன் தம்பியர் அவனைப் பார்த்த வண்ணம் ஏங்கி நின்றனர்; பெண்கள் வாயில் கையை வைத்தனர்; சிறார்கள் விபரமறியாது திகைத்தனர்.

மங்கள மாறவர்மனோடு புன்னகை பூத்தவண்ணம் புறப்பட்டாள். மாறவர்மன் நண்பர்களும் பின் தொடர்ந்தார்கள். வெளியில் நிறுத்தப் பட்டிருந்த மோட்டார் இரதங்கள் இரண்டும் இரைந்தன.

(யாவும் கற்பனை)

**ஒருவனது கொள்கைகளையும், நற் பண்புகளையும் தமக்குச் சாதகமாக்கிவிடத் திட்டம் போட்டவர்கள், தலை குனிகிறார்கள்!**

**—மாறவர்மன் தானோர் ஆண் மகன் என்பதை நிலைநாட்டிக் கொள்கின்றான். நாடகம் போன்று இச் சிறுகதையை உருவாக்கியுள்ளார், திருமதி ஆ. பொ. செல்லையா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையர் சங்கம்

பெற்றோர் கவனத்திற்கு

# வாந்தி ரோகமும் அதற்கான பரிகாரமும்

இன்று நம்நாட்டில் வைத்தியசாலைக்கு வரும் பெரும்பான்மையான தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாந்தி என்ற காரணத்தைக் காட்டியே கொண்டுவருகின்றனர். உண்மையும் அதுதான். நகர்ப்புறங்களில் வாழ்பவர்களென்றாலும்சரி, அன்றேல் நாட்டுப்புறங்களில் வாழ்கின்றவர்கள் என்றாலும்சரி, தங்கள் அருமருந்தன்ன குழந்தைகளுக்கு சுகயீனம் ஏற்பட்டால் பதைபதைத்து, விதுர்விதித்து பதட்டமடைய ஆரம்பித்துவிடுகின்றனர்.

ஒரு தாய், பிள்ளைக்குக் கொடுத்த பால் சில நிமிட நேரங்களில் வாந்தியாக வெளிவருவதாகவும் இன்னொருதாய், வாந்தியுடன் புழுக்கள் வருவதாகவும் கூறுவாள். சிலர் வாந்தி எடுப்பதோடு வயிற்றால் கழிவதாகவும் செப்புவர். இன்னொரு இளவயது நங்கை தன் குழந்தைக்கு வாந்தியின் பின் வலிப்பு வந்ததாகவும், காய்ச்சல் இருந்ததாகவும் பதைபதைத்துக் கூறுவாள்.

இவை எல்லாவற்றையும் கற்றறிந்த அனுபவப்பட்ட வைத்தியன் ஆற அமரக் கேட்டல் அவசியம். அப்பொழுதுதான் சரியான சிகிச்சையை அளிக்கமுடியும். அதுவல்லாமல் இரண்டொரு கேள்விகளைக் கேட்டுவிட்டு சீட்டில் மருந்தை எழுதிக் கொடுத்தனுப்பிவிடுபவர்களையே நாம் இன்று அதிகமாகக் காண்கின்றோம். இது வைத்தியர்களின் தவறுமல்ல காரணம் எமதுநாட்டு வைத்தியசாலைகளுக்குவேண்டிய வசதிகள், எம்நாட்டு மக்களோடு ஒப்பிடும்போது, குறைவாகவிருப்பதே. இருந்தும் வேறுபல நாடுகளோடு ஒப்பிடும்போது நாம் சந்தோஷமடைய வேண்டிய நிலையிலுள்ளோம்.

### ரோகமல்ல

வாந்தியை ஒரு ரோகமென்று சொல்ல முடியாது. காரணம் அது இன்னொரு நோய்க்குஇலட்சணமாகவ்விருக்கின்றது. அநேகமாக சீரணத்தோடு சம்பந்தப்பட்ட வியாதி (Gastro Intestinal Diseases) காரணமாக வருகின்றது. அன்றியும் குக்கல் (Whooping Cough)வாந்திபேதி (Cholera), சயம், காய்ச்சல் முதலிய நோய்களின் காரணமாகவும் மூளைக்கவசதாபிதம் (Menengietis), காரணமாகவும் வாந்தி ஏற்படுவதுண்டு.

வாந்தியானது ஆயுள்வேத பரிபாஷையில் 'வமனம்' என அழைக்கப்படும். 'சர்தி' என வடமொழியில் கூறுவர். முத்தோஷமாகிய வாத பித்த கபங்கள் கோளாறு அடைவதனுலும், சன்னிபாதத்தினுலும், அருவருப்பான விஷயங்களை காண்பது, நினைப்பது முதலியவற்றினுலும் மனத்துயரம், பயம், முதலிய பல காரணங்களினுலும் ஏற்படுகின்றது.

### வாந்தி ஏற்படக் காரணம்

சீரண உறுப்புக்களில் கோளாறு, அசீரணம், அதிக உணவுகளைக் கொடுத்தல், அடிக்கடி உணவு கொடுத்தல், புழுக்களின்தொந்தரவு, மலக்கட்டு, மாந்தம்முதலிய காரணங்களினுலும், சிறுகுடலில் ஏற்படும் தடைகள், உதாரணமாக (Pyloric Stenosis), குடல் முடிச்சுகள், மருந்து வகைகள், இதர வஸ்துக்கள், குடலில் சேருவதனுலும் வாந்தி ஏற்படலாம்.

இன்னும் நரம்புத்தாபிதம் மூளையில் கட்டிகள் (Brain Adses), கடுங்காய்ச்சல், (உதாரணமாக நியூமோனியா), குக்கல், முதலிய வியாதிகளிலும்ஏற்படலாம். இவை மாத்திரமல்ல. எவ்வகைக் காரணமும் இல்லாமல் ஒழுங்காகவும், ஒழுங்கீனமாகவும் வாந்தி ஏற்படும்.

இவற்றை எல்லாம் ஒப்புநோக்கின் அநேகமான குழந்தைகளுக்கு சீரண சம்பந்த விகற்பங்களினுலேயேவாந்தி ஏற்படுகின்றது என்பதை அறியலாம்.

### வருமுன் தடுத்தல்

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றிஉணின்'

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வான்புகழ் கொண்ட வள்ளுவன் அன்றைய தமிழருக்கும், இன்றைய உலகமக்கள் யாவருக்கும் இடித்துரைத்தமை புத்திமதியாக அமைகின்ற தன்றோ! மேற்கண்ட குறளின் பொருளுணர்ந்து நடப்பின் குழந்தைகள் என்ன, பெரியவர்கள்கூட நோய் நொடிதின்றி வையத்தில் வாழ்வாங்கு வாழலாம்.

உணவை உடலுக்கு ஏற்ற அளவோடு உண்டுவரின் நமக்கு நோய் வராது. அன்றியும் சிறந்த சிந்தனையையும் தூண்ட வல்லது. இதனுல் பிறக்கும் பயனே அநந்தம்.

எனவே எம் மழலைகளை நோய் நொடிதின்றி வளர்ப்பதற்கு, வாழவைப்பதற்கு ஒரு வரையறைவுள்ள நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றில் முக்கியமானது உணவில் வரையறை காண்பது.

குழந்தைகளுக்குக்கொடுக்கும் உணவு அதன் வளர்ச்சிக்குத் தேவையான கொழுப்பு, புரதப், மாச்சத்து, உயிரூட்டிகள், சுண்ணச்சத்து, இருப்பது மாத்திரமல்ல தேவையானநேரத்தில், அஃதாவது, காலத்துக்குக்காலம், நேரத்துக்கு நேரம் வரையறுத்துக் கொடுத்தல் வேண்டும். கண்ட கண்ட நேரங்களில். கண்ட கண்ட உணவுகளைக் கொடுப்பதை அறவேதடுக்க வேண்டும் மிகுதலும், குறைதலுமின்றி அளவோடு கொடுத்தல் அவசியம்.

### உணவூட்டும் முறைகள்

1. தினந்தோறும் கொடுக்கக்கூடியஉணவுகள்,
2. பருவங்களுக்கு ஏற்ற ஆகாரம்.
3. உண்ண வேண்டிய காலம்.
4. உணவூட்டும் முறை.
5. உணவின் அளவுகள்.

இவைகளை வரையறுத்து தங்கள் தங்கள்வசதிக்கேற்ற மாதிரி குழந்தைகளுக்கு உணவு கொடுக்தல் அவசியம். இன்று நகர்ப்புறங்களில் ஆரவாரித்துப் பவனிவரும் ஐஸ் பழங்கள், மற்றும் இதர இனிப்புப் பண்டங்களைத் தவிர்த்தல் அவசியம். இவற்றால் கவரப்பட்ட குழந்தைகள் இவைகளை அடிக்கடி உண்பதால் ஏழைப் பெற்றோர்களுக்கு பணப்புளக்கம் குறைவதுடன் அதேசமயம் தம் அருமந்த பிள்ளைகளுக்கு புழுத் தொந்தரவுகளும் (குடற்கிருமி) ஏற்பட்டு வாந்தி—வலிப்புப்போன்ற குறிகளுடன் வைத்தியசாலைகளுக்கும், மருந்துச்சாலைகளுக்கும் கொண்டுசெல்கின்றனர்.

சங்கடங்கள் பல ஏற்று, வைத்தியசாலைகளில் ஒரு மாதிரியாக மருந்து வாங்கிக் கொண்டு வந்தாலும், பத்தியம் என்று, சிலவற்றை நீக்க வேண்டும். இவைபோலவே பிறவும்.

எனவே நோய் வராமல் அதற்கேற்றமாதிரி நடப்பது அவசியம். எனவே நோய் வருவதற்கு ஏதுவான காரணகாரியங்களை எம் நாட்டுப் பெற்றோர் அறிந்து மதியூகமாயிருப்பது அவசியம்.

### பரிகார முறை

ஒவ்வொரு குழந்தையையும் குறிக்கப்பட்ட காலங்களில் தகுந்த சிகிச்சை நிலையங்களுக்கு எடுத்துச் சென்று பரீட்சித்துக் கொள்ளல் வேண்டும். அன்றியும் காலாகாலத்தில் அம்மைப்பால், இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்துகள், இன்னும் பல வகையான தொற்றுநோய்த் தடைகளை அறிந்து அதற்கு ஏற்றமுன் நடவடிக்கைகளைச் செய்தல் அவசியமாகும்.

தினந்தோறும் குழந்தைகளுக்கு குளிப்பாட்டுவதுபிரதானம். சளிப்பந்தம், மாந்தம், உப்பிசம், சீரணக் கோளாறு முதலியவற்றைத் தடுப்பதற்கு வசம்பு சுட்ட சாம்பலைஅளவறிந்துகொடுக்கலாம். அன்றியும் குழந்தைக்கு பசும் பால் கொடுப்பதாயிருந்தால், அப்பால் காய்ச்சும்போது இரண்டு பல்லு உள்ளிப் பூண்டைஇட்டுக் காய்ச்சிக் கொடுப்பது நன்று. சிறுவருக்குக் கொடுக்கும் பாலில் நீர் சலந்து கொடுப்பதுநன்று. காலையில் இளநீர், செவ்விளநீர் கொடுப்பதும் சிறந்த முறை. இடைக்கிடை ஓமத்திராவகமும் கொடுப்பது சிறந்தது.

மலசலங்களை நன்குகழியச் செய்வதுடன் அதனைப் பழக்கத்திலும் கொண்டுவருவது அவசியம். இதனுல் குழந்தை உற்சாகமாகவும், செழிப்பாகவும் இருக்கும். ஐந்துவயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணையை அளவுடன் கொடுததல் அவசியம். பாகல் இலைத்தளிருடன் சர்க்கரை சேர்த்து அரைத்துக் கொடுப்பதுடன் ஆமணக்கெண்ணையும் கொடுத்தால் எவ்வகைக் குடற் கிருமிகளையும் தடுக்க முடியும்.

மாதமொருமுறை வாய்விடங்கம், கறுவாப்பட்டை இரண்டையும் குடிநீராக்கி கொடுப்பதும் நல்ல பயனைக் கொடுக்கும். பலாசம் விதையை சுத்திசெய்து பொடி பண்ணிசர்க்கரையுடன்மாதமொருமுறை கொடுத்துவரின் ஆச்சரியமான குணத்தைத் தரும்.

சீரணக் கோளாறு சம்பந்தமான, உதாரணமாக-அசீரணம் காரணமாக, வாந்தி ஏற்பட்டால் அப்பயான ஆகாரத்தை வெளிப்படுத்தல் வேண்டும். இதற்கு சுடுநீர், சோடா நீர் கொடுக்கலாம்.

கடுகுப்பத்தை இரைப்பைக்கு மேல் போடுவதால் எல்லா விதமான வாந்தியையும் தடுக்க முடியும். இப்படியான காலங்களில் பழச்சீனி, கருப்புச்சாறு, தோடம்பழச்சாறு முதலியன கொடுப்பது நன்று. வாந்தி அதிகமாகவும் அடிக்கடியும் இருந்தால் ஐஸ் நீர் ('CE WATER) கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி கொடுப்பது அவசியம். வேறு வியாதிகள் காரணமாக வாந்தி இருக்கின்றதென்பதை அறிந்தால் நோய்நாடி, நோய் முதன் நாடி அது தணிக்கும் வாய்நாடி, வாய்பச்செயும் மதிநுட்பம் வாய்ந்த வைத்தியனிடம்

(14-ம் பக்கம் பார்க்க)

டாக்டர் என். கந்தையா
மத்திய ஆயுள்வேத ஆரோக்கியசாலை,
கொழும்பு.

## செல்வி அக்காவிடம் 5 கேள்விகள்

**கேள்வி: 1**

எத்தனை எத்தனையோ படிப்புகளைப் படிக்கவும், பழகவும் வழிகள் பல வகுத்திருந்தும் 'குடும்பக் கலையைப்' படிக்க ஒரு பாடசாலைதானும் இல்லையே. எப்போது ஏற்படும்?

குடும்ப மகாநாடுகளாவது வருடத்தில் பலமுறை நடத்திக் குடும்பத்தின் கஷ்டங்களையும் மேற்கொள்ளும் வழிகளையும் விளக்கக் கூடாதா?

திருமதி அக்னேஸ்ரேச்,
மன்னார்.

குடும்பக்கலையை ஒரு பாடமாகப்புகட்டுவது நம் நாட்டில் இல்லாமற் போனது குறைதான். நாடெங்குமுள்ள மாதர் சங்கங்கள் கிளர்ச்சி செய்தால் பலன் கிடைக்கும்.

விரைவில் குடும்பக் கலையில் சிலபகுதிகளை ஆசிரியகலாசாலைகளில் புகுத்தப் போகிறார்களாம். இதற்கு இப்போதே ஓரளவு எதிர்ப்பும் இருப்பதாகத் தெரிகிறது.

26-9-65 முதல் நமது கருத்துமேடையிலும் 'குடும்பக் கலை பாடசாலைகளில் போதிக்க வேண்டியது அவசியமா அல்லவா' என்ற பிரச்சினையை ஆராய சகோதரிகளுக்கு ஒரு வாய்ப்பினை அளிக்க எண்ணியுள்ளோம்.

**கேள்வி: 2**

........................?

ஆர். கிருபா.
கல்லடி உப்போடை.

உங்கள் கேள்வி குழந்தையின் உடல் நலத்தைப் பற்றியது. விரைவில் சுதந்திரனில் ஆரம்பமாகவிருக்கும் 'நாட்டு வைத்தியப் பகுதி'யில் தகுந்த பதிலைத் தாங்கள் பெறலாம்.

**கேள்வி: 3**

எனது தங்கைக்கு வயது பதினூறுதாகிறது. எவ்வளவு சத்துள்ள உணவைக் கொடுத்தாலும் உடல் மெலிவடைந்தே வருகிறது. ருதுவாகு முன்னர் படிப்பிலிருந்த நாட்டம் இப்போ குறைந்துவிட்டது. சோம்பல் அதிகரித்துவிட்டது படுக்கும் போது சதா கண்ணீர் வடிக்கிறாள். காரணம் கேட்டாலும் சொல்லுவதாயில்லை...

'புவனம்',
யாழ்ப்பாணம்.

மனநோய்தான் காரணமாகவிருக்கும். முடியுமானால் உங்கள் தங்கையின் நெருங்கிய சிநேகிதியை இரகசியமாக அழைத்து நயமாக வினவிப் பாருங்கள்.

**கேள்வி: 4**

எனது மகளுக்கு 21 வயதாகிறது. பெரியவர்கள் கலியாணங்களை திட்டத் தளிக்கிறாள். அவளுக்கும் வேறு எவரிலும் நாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் வற்புறுத்தினுல் 'தற்கொலை செய்வேன்' என்கிறாள். எங்கள் கவலை தீர வழி உண்டா?

திருமதி...............
கொழும்பு-5.

திருமணத்தில் நாட்டம் ஏற்படாத கன்னியை வற்புறுத்தி மணம் முடிக்க வைப்பது தீமை பயக்கும். சிலகாலம் அவருடைய விருப்புப்படி விட்டுப் பாருங்கள். மனமாற்றம் ஏற்படலாம்.

**கேள்வி: 5**

எங்களுக்கு மணமாகி ஏழு வருடங்கள் ஆகின்றன. ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரு குழந்தைகள் உள்ளனர். இருந்தும் எனது எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாது தவிக்கின்றேன். கணவர் என்னைக் கண்டித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. என்ன செய்வது?

திருமதி க. க.,
மாத்தளை.

எண்ணக் குதிரையைக் கடிவாளமிட்டுக் கட்டுப்படுத்துங்கள். எந்த வேலை செய்தாலும் அந்த வேலையிலேயே புலனைச் செலுத்துங்கள். கூடுமானவரை தனிமையை விரும்புவதைத் தவிருங்கள். பக்தியூட்டும்புத் தகங்களைப் படியுங்கள்.

5 கேள்விகள்
செல்வி அக்கா,
சுதந்திரன்
[illegible]
கொழும்பு.

### கருத்துமேடை

முகத்தின் அழகும் அகத்தின் அழகும்
ஆகியவை
அடுத்த வாரம்
தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா ஒரு கும்பகர்ணன்



சென்னை நுங்கம் பாக்கத்தில் உள்ள அவனியு சாலையில் அண்ணா ஒரு இல்லத்தை அப்போது தான் வாங்கியிருந்தார். காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்த அண்ணா, சென்னையில் சொந்த வீட்டில் குடியேறினார்.

'தாயகம்' (Home Land) என்ற பெயரில் ஆங்கிலவார ஏட்டின் ஆசிரியராக அண்ணா இருந்தார். அப்பத்திரிகையை செம்மையான முறையில் நடத்துவதற்காகவே, அவ்வீடு வாங்கப்பட்டதாகவும், அண்ணாவின் சென்னை வாசம் தொடங்கியதாகவும் கழகத்தின் முக்கிய உறுப்பினர்கள் கூறிக்கொண்டார்கள்.

## அண்ணா நமது உறவினர்

1947-ம் ஆண்டு தான் நாம் முதன் முதலில் அண்ணாவைக் கண்டோம். கண்களால் அல்ல கருத்தால். அண்ணாவின் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களைத் தாங்கி, தமிழ் இளைஞர்களின் உள்ளங்களில் புரட்சிப் புயலை உருவாக்கிய பலப்பல நூல்கள் அப்போது நாடெங்கும் தாண்டவமாடின. அந்நூல்களில் புகுந்து, புதிய தமிழ் நடையினையும் புரட்சிக் கருத்துக்களையும் பருக ஆரம்பித்தோம்.

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களிடம் பூத்த புதுமை நெறி—சுயமரியாதைச் செந்தீ, அறிஞர் அண்ணாவின் சொல்லோவியங்களினால் சுடர் விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்தது. பல நூறுமைல்களைக் கடந்தும், பாசம்பரவத் தொடங்கியது. இரத்த சம்பந்தம் எதுவுமே அற்றிருந்தும், கண்ணால் ஒரு முறைதானும் காணாதிருந்தும் கூட, சகோதர உணர்வு தலைகாட்டியது. ஆம், ஆயிரக்கணக்கில்—இலட்சக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் அறிஞர் அண்ணாவை தங்கள் சொந்த அண்ணனாகக் கொண்டனர். ஆர்வத்துடன் கிளர்ந்தெழும் இளைஞர்களின் அறிவுப் பசிக்கு அண்ணா அரிய கருத்துக்களால் உயர்ந்த விருந்துவைத்தார்.

அவரளித்த அறிவு விருந்துகளை உண்டு அவருடைய உறவினரானோம். நாமும் அவருடைய தம்பியானோம்.

அண்ணாவின் எண்ணங்களை நாட்டிலே பரப்பவேண்டும் என்ற நாட்டம் கொண்டவர்களைவருக்கும் நாஸ்திகர்கள் என்ற பட்டமே கிடைத்தது. இதனால் பல குடும்பங்களில் சுவாலையிட ஆரம்பித்த கோபக்கினிக்குப் பலியாகியவர்கள் பலர். உற்றவரால், ஊரவரால் ஒதுக்கப்பட்டு குடும்ப நலனிழந்தோர் பலர். இத்தகைய கொள்கைச்சோதனைகளையும் தாங்கி, தலைநிமிர்ந்து நின்றவர்கள் வெகு குறைவு.

காஞ்சியிலிருந்து கிடைக்கும் அண்ணாவின் ஆணைக்கு உடன் பணிவு காட்டி, இலங்கையின் கிழக்குக்கோடியிலே கிடந்து குரல் கொடுத்தவர்களுள் நாமும் ஒருவனானோம்.

## துடைப்ப வரவேற்பு

தமிழகம் வந்ததும் அண்ணாவைக்காணும் ஆவல் அதிகரித்தது. ஆனால், அரசியல் காரணமாக அயலூர்களில் அலைந்து கொண்டிருந்த அவரை முதன் முதலில் காண முடியவில்லை. அண்ணா சென்னை வந்துவிட்டார். என்ற சேதியை கவிஞர் கண்ணதாசன் கூறினார். கவிஞருடைய M.S.X. 999 இலக்கங்கொண்ட 'பிளிமொத்' வண்டி நம்மை அண்ணாவின் உறைவிடத்துக்கு, அன்று பகல் 10 மணிக்குக்கொண்டு சென்றது.

வீட்டைச் சுற்றி சுமார் ஐந்து அடி உயர மதில் எழுப்பப்பட்டிருந்தது. சிவப்பு வர்ணம் பூசப்பட்ட அம்மதிலின் மேற்புறத்தில் கறுப்பு வர்ண வரி தீட்டப்பட்டிருந்தது. மாமரங்கள் இரண்டு குளிர்ந்த நிழலை அளித்தன. சல சலப்பு மிக்க சென்னை நகரின் மத்தியில்' இத்தகைய அமைதியான

எழுதுவது:

**'ஈழத்தரசன்**

சூழலில் ஒரு இல்லம் அண்ணாவுக்குக் கிடைத்தது அவருடைய அதிட்டம் தான்.

வண்டி வளவினுள் நுழைந்து, நாம் இறங்கி வாயிற்படியை அணுகவும், அண்ணியார்—(அண்ணாவின் மனைவி ராணி அம்மையாரை கழகத் தோழர்கள் அண்ணி என்றழைப்பதினால், நாமும் அவ்வாறே அழைப்போம்)—உள்ளே மண்டபத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தவர் துடைப்பைக் கட்டும் கையுமாகவெளியே வந்து எட்டிப் பார்க்கவும் சரியாக இருந்தது.

எமது பக்திக்கு இருப்பிடமான அண்ணாவின் அருமை மனைவிக்கு வணக்கம் கூறி இரு கைகளையும் கூப்பினோம். தன்னுடைய கைகளிலே உள்ள பொருள் எது என்பதையும் மறந்து நமது மரியாதையை அண்ணியர் ஏற்றார். நமது முகத்தில் அசடு வழிவதை உணர்ந்த அண்ணியார் உடனே தன் செய்கையையும் உணர்ந்து தன் முகத்திலும் அசடினை வழியவிட்டார்.

'அண்ணாவைப்பார்க்க வந்துள்ளோம்' என்பதை அண்ணி உணராமலில்லை. இருக்கையைக் காட்டிவிட்டு உள்ளே சென்றார்.

## மரம் அறுக்கும் சப்தம்

அண்ணாவை—எங்கள் உள்ளங்களில் சுடர் விட்டொளிரும் பகுத்தறிவுச்சுவாலையின் சுடரை—காண நாம் ஆயத்தமாகிக் கொண்டோம். பாசமிகுதியாலும் பக்தி உணர்வாலும் உணர்ச்சிவசப்படாமல் எவ்வாறுநாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஒத்திகை உள்ளத்தினுள்ளே நடை பெற்றுக் கொண்டிருந்தது.

உள்ளிருந்து ஆள் வரும் அரவம் கேட்டது. எழுந்து வணங்க ஆயத்தமானபோது வந்த உருவம் அண்ணா இல்லை என்பதைக் கண்டதும் மீண்டும் இருக்கையில் அமர்ந்தோம்.

நமது இருக்கைக்கு அருகிலிருந்த அறையொன்றினுள்ளிருந்த மரம் அறுப்பது போன்ற இரைச்சல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. நம் அருகே வந்த உருவம், 'அவன் இன்னும் தூங்கிண்டே இருக்கான். இன்னும் எந்திருக்கவேயில்லை' என்று கூறியது.

மணி பத்தரையாகிறது. இவ்வளவு நேரம் தூங்கும் அந்தக் 'கும்பகர்ணன் யாரோ?' என்று எண்ணம் வினாத் தொடுத்தது. இதற்கிடையில் சூடான காப்பியுடன் அண்ணியார் வந்தார்கள்.

காப்பியைக் குடித்துக் கொண்டிருக்கும் போது வெளியில் இருந்து வேறோர் இளைஞர் வந்தார். அவரிடம் என்னருகில் நின்ற உருவம் 'இந்தாப்பா வெங்கு அவனைப் பாக்க ஆளுவந்திருக்கு. அவன் எப்ப எந்திருக்கப்போறான்?' என்று வினா கொடுத்தது. இளைஞன் எம்மைப்பார்த்து 'அண்ணாவைப் பார்க்க வந்திங்களா? அவரு எந்திருக்கு மதியம் ஒருமணியாகுங்க'—என்றார். எமக்குத் தூக்கி வாரிப்போட்டது.

'தமிழகத்தைத் தன் சொல்லோவியங்களால் கவர்ந்து, இளைஞர்களின் இதயக் கோயிலில் பொற்சிலையாகப் பதிந்துவிட்ட அண்ணா தானா இந்தக் கும்பகர்ணன்?' அன்று எமக்கு ஏற்பட்ட அதிர்ச்சி தீர சில மாதங்கள் பிடித்தன.

'சிவகங்கைச் சீமை' திரைப்படத் துவக்க விழாவுக்கு முதல்நாள் இரவு அண்ணாவீட்டில் கவிஞர் கண்ணதாசனுடன் போயிருந்த வேளையில்தான் அண்ணாவின் 'கும்பகர்ண இரகசியம்' புலப்பட்டது. அன்றிரவு முழுவதும் கண்ணோடு கண்மூடாமல் அண்ணாவீட்டில் உரை


(13ம் பக்கம் பார்க்க)




# பதினொரு மணிக்கு பள்ளி எழுச்சி

அங்கம் மூன்று

## அட்லாய் ஸ்டீவன்சன் வாழ்க்கைச் சித்திரம் வெறஸ்



1. ஐக்கிய நாடுகள் நிறுவனம் இதுதான். 1945ல் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனத்தின் அங்கத்துவ நாடுகளின் தயவில்தான் உலகத்தின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. இதுவரை பல நன்மைகளைச் செய்த இந் நிறுவனம் இன்றுள்ள நெருக்கடிகளை நீக்குவதில் பெரும் பங்கெடுக்க வேண்டியிருக்கிறது.

2. அட்லாய் ஈ. ஸ்டீவன்சன் ஐ. நா. வில் அமெரிக்காவின் பிரதிநிதியாக இருந்தவர். தென் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமைகளையிட்டு பிரித்தானிய ராஜதந்திரிகளுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த சமயத்தில், 14—7—[illegible] லண்டனில் திடீரென மரணமானார்.

3. ஸ்டீவன்சனின் குடும்பம் தொடர்ந்து பல வருடங்களாக அரசியல் துறையில் ஈடுபட்டு உழைத்து வந்துள்ளது. 1893 முதல் 1897 வரை ஸ்டீவன்சனின் பாட்டனாரான அட்லாய் அமெரிக்க உதவி ஜனாதிபதியாக இருந்தவர். இல்லியானிஸ் [illegible] ன்சனின் தந்தை லாவின் மிகுந்த ஈடுபாடுடையவர்.

4. 1900ம் ஆண்டு அட்லாய் ஸ்டீவன்சன் கலிபோர்னியாவில் பிறந்தார். ஆறு வயதாயிருக்கும்போது குடும்பத்தாருடன் இல்லியானிஸ் சென்று வாழ்ந்தார். இங்குதான் ஆரம்பகால கல்வியைப் பெற்றார். பின்னர் கிழக்கிலே அவருடைய கல்லூரிப் படிப்பு தொடர்ந்தது.

5. முதலாவது உலக மாயுத்தம் ஸ்டீவன்சனின் படிப்பைக் குழப்பியது. கடற்படையில் சேர்ந்து சில ஆண்டுகள் பணி புரிந்தார். யுத்தம் முடிந்ததும் நியூஜேர்ஸியிலுள்ள பிறின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பயின்று 1022ல் பட்டதாரியானார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இள வயசுப் பெண்ணோடு தெருவிலே போனு தப்பா?

வட்டக்குடுமி விட்டு அதிலே பூவைச் சூடிக் கொண்டு வீட்டுள்ளே நுழைகிறுன் சின்னையன். அவனுடைய மார்பெல்லாம் சந்தனப் பூச்சு. அரையிலே கட்டியிருந் வேட்டியில் ஒரு பெரிய முடிச்சும் தென்பட்டது.

உள்ளே வந்ததும் திண்ணையில் சாய்ந்துகொண்டிருந்த தகப்பனுரிடம் அதிகாரக்குரலில் பேசலானுன்: 'ஏம்பா ஆடுகளெல்லாம் மேஞ்சிட்டு வந்தாச்சா? அதுகளுக்கு தண்ணி காட்டினியா? புடிச்சுக் கட்டிவச்சாச்சா?' என்று கேள்விக்குமேல்கேள்விகளைக் கேட்டான். தகப்பனும் ஆமா ஆமா என்று பதில் கூறிக்கொண்டே போனுர்.

உடனே தன்னுடைய மடியிலிருந்த பொட்டலத்தை அவிழ்த்து அதனுள்ளிருந்த கடலை, மாவு உருண்டைமுதலான வற்றை அப்பாவுக்கும் எடுத்துக்கொடுக்கிறுன்.

'வர்ர வழியில் குரங்குக்கும் கொஞ்சம் போட்டன். இந்தா உனக்கும் கொஞ்சம் போடறன். துன்னு...' என்று சொல்கிறுன். கையில் பொருட்களை வாங்கிய தகப்பனுர் 'ஆமா நீ திருவிழாவுக்குத் தனியாவா போயிண்டு வர்ரே' என்று கேட்கிறுர். அதற்கு சின்னையன், 'தனியாவா போவாங்க திருவிழாவுக்கு. பூங்காவனத்தையும் கூட்டிக்கிட்டுத் தான் போனன்' என்கிறுன்.

'வயசு வந்த பொண்ணை தனியாக் கூட்டிக்கொண்டு போனு ஊருக்க பாக்கிறவங்க என்னடா நினைச்சிக்கப் போறுங்க?'

'அட நீ ஒண்ணு போப்பா! வயசுவந்த சின்னஞ்சிறுசுகளைக் கூட்டிண்டு போகாம கிழடுகளோடேயா திருவுளாவுககுப் போவாங்க?' என்று சின்னையன் கூறியதும் தகப்பனுர் சீறிஎழுந்தார் மகனுக்கு அடிக்க. அவன் தாயார் ஓடி வந்து சின்னையனைக் காப்பாற்றினுள்.

கல்பனுகலாமந்திர் தயாரிக்கும் 'காளிதாசன்' படத்துக்காக இக்கட்டம் சாரதா படப்பிடிப்பகத்தில் படமாக்கப்பட்டது. சின்னையன் வேடத்தில் சிவாஜி கணேசன் காட்சி அளித்தார். பூங்காவனமாக புதுமுகம் மாலதியும் தகப்பனுராக வி. கே. ராமசாமியும், தாயாராக சரஸ்வதியும் தோன்றுகின்றனர். ஆர். ஆர். சந்திரனின் டைரக்ஷனிலஇப்படம் தயாராகிறது.

## தொல்லை தொலைந்து போகும் நாள்?

'எங்கவீட்டுப்பிள்ளை'யை வெற்றிப் பவனி வர விட்ட விஜயா கம்பைன் சார் 'எங்க வீட்டுப் பெண்ணை' மும்முரமாகத் தயாரித்து வருகின்கினறர். 'கட்டான சிட்டுப்பொண்ணு கிட்டத்திலே ஒட்டி நின்னு தொட்டு உன்னைக் கட்டிக் கொள்ள

துணிஞ்சு இங்கவந்த

இந்த வேளை-உன் தொல்லையெல்லாம் தீர்ந்து

போகும்நாளை'

என்று ஜமுனுராணி பாடும் பாடல் அண்மையில் வாஹினியில் ஒலிப்பதிவானது. ஆலங்குடி சோமு எழுதிய இப்பாடலுக்கு கே. வி. மகாதேவன் இசை அமைத்துள்ளார். சாணக்கியாதான் இப்படத்தின் இயக்குநர்.

## இராமாயணம் ஆங்கிலப்படமாகும்

இராமாயணம் ஆங்கில சினிமாப் படமாக்கப்படப் போகிறது. 'மை பெயார் லேடி' என்ற ஆங்கில வெற்றிப் படத்தைத் தயாரித்தவரான ஹெயார் மென் லெவின் இப்படத்தைத் தயாரிக்கப் போகிறுர். இந்திய-ஜரிஷ் எழுத்தாளரான மொனேன் என்பவர் எழுதிய ஆங்கில இராமாயணத்தின் கதை உரிமையை லெவின் வாங்கியுள்ளார். முதலில் இராமாயணம் ஆங்கில மேடை நாடகமாக அமெரிக்காவில் நடிக்கப்படுமாம்.




ரொபேட் மோர்ஸ் என்னும் இவ்விளைஞரை ஆன் ஹெல்ம், நான்சி குவான் ஆகிய இரு அழகிகளும் மடக்கிவைத்துக் கொண்டு திணறடிக்கிறுர்கள். இந்த அரிய காட்சியை பம்பலப்பிட்டி மெஜஸ்டிக் திரையில் ஓடிக்கொண்டிருக்கும் எம். ஜி. எம். ஆங்கிலப் படமான 'தேன்மதி விடுதி'யில் காணலாம்.

## எஸ். பி. எம். மின் 'சக்கய'

சந்தானையிலுள்ள எஸ். பி. எம். ஸ்டுடியோவில் தயாராகி வந்த 'சக்கய' [சந்தேகம்] என்னும் சிங்களப் படம் திரையிடத் தயாராகி விட்டது என்று தெரிய வருகிறது. அண்மையில் இலங்கையில் தயாரான சிங்களப் படங்களுள் தரத்தில் உயர்ந்ததாக இப்படம் விளங்குகிறதாம்.

தமிழகத்தில் ஜுபிட்டர் பிக்சர்சில் திரைப்படத் துறையில் பயிற்சி பெற்றவரான திரு. ஈழத்து இரத்தினம் இப்படத்தின் இயக்குநர் ஆவார். ஓவியக் கலைஞரான திரு. குமார் கைவண்ணமும் இப்படத்தில் தனிச் சிறப்பு வாய்ந்ததாக விருக்கும் என்று கூறப்படுகிறது. அடுத்த மாதம் இப்படம் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடப்படுமெனத் தெரிகிறது.



'எற்கனவே எலும்பாட்டம் உள்ள எனக்கு இத்துனூண்டு சோறு போட்டா எலும்பும் உருகிப் போகாதா?' என்று கேட்கிறுர் போலும். 'நானும் மனிதன் தான்' படத்தில் கரும்பாகவும் வேம்பாகவும் தோன்றும் நாகேஷ், நிர்மலா சோடியினர்.

# அண்ணு ஒரு கும்பகர்ணன்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யாடினேம். கவிஞரும்நாமும் தூங்கிவழிந்ததைக் கூட அண்ணு பொருட்படுத்தவேயில்லை.

### தொட்டிற் பழக்கம்

அண்ணுவுக்கு இரவுத் தூக்கம்பிடிக்காது. தினசரி விடிய விடிய நண்பர்களுடன் அரட்டையடிப்பார். விடிந்த பின்னர்தான் தூங்க ஆரம்பிப்பார்.

இளைஞனுக இருந்தபோது இரவில் வெகுநேரம் கண் விழித்து நூல்களைப் படிப்பாராம். அப்போது ஏற்பட்ட பழக்கம் இன்றும் நீடிக்கிறது என்பதை எம் மருகில் நின்ற அந்த வயதான உருவம் வெளியிட்டது. அந்த உருவம் தான் அண்ணுவை இளமையிலிருந்து சீராட்டிப் பாராட்டி வளர்த்தது. கடந்த வருடம் இறந்துவிட்ட—அண்ணுவின் சிறிய தாயார்—'தொத்தா' அவர்தான்.

'தாயகம்' என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியர் குழுவில் பணிபுரிந்த வெங்கட்ராமன் என்ற பட்டதாரி இளைஞரே இடையில் வந்து, அண்ணு எழுந்து 'கடலைக் கடன்'களை மதியத்தில் முடித்துவிட்டு வரும்வரை எம்மோடு உரையாடிக் கொண்டிருந்தார்.

### அண்ணுவின் அழைப்பு

பத்திரிகைக்கான அச்சுக்களை வீட்டின் பின்பகுதியில் அமைக்கப்பட்ட ஒரு சிறு கொட்டகையில் சிலர் கோர்த்துக்கொண்டிருந்தனர். அவற்றையும் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் அண்ணுவின் அழைப்புக் கிடைத்தது. உள் மண்டபத்திலே நடுநாயகமாகவிருந்த அந்தக் குள்ள உருவத்துக்கு எமது ஆர்வமெல்லாவற்றையும் திரட்டி வணக்கம் செலுத்தினேம். அருகே அழைத்து எம்மை அமர்த்திக்கொண்டார்.

இலங்கையின் அரசியல் நிலையினை ஆர்வத்தோடுவினவினுர். நாமும் ஒன்றுவிடாது சகலவற்றையும் கூறினேம். இலங்கைத் தமிழ் பேசும் இனத்தின் உரிமைப் போருக்கு தி. மு. க. கொடுத்துவரும் ஆதரவுகளைப்பற்றி அண்ணு கூறினுர்.

காங்கிரஸ், தி. மு. க. முதலான சகல அரசியற் கட்சிகளினதும் ஏகோபித்த ஆதரவை இலங்கை தமிழ்பேசும் இனத்தின் உரிமைப் போருக்கு அனுசரணையாகத் திரட்டவேண்டும் என்ற ஆர்வம் நம்மிடம் இருந்தமையினுல், காமராஜர் தரிசனத்தை அண்ணுவிடம் ஒரு நிபந்தனையுடன் கூறிவைத்தோம்.

### எண்ணத்தில் அண்ணு போட்ட மண்

அரசியல்வாதி, எழுத்தாளன், பேச்சாளன் என்ற போர்வைகளுக்குள் புகுந்திருக்கும் எவரிடமும் எல்லா உண்மைகளையும் தெரிவிக்கக் கூடாது என்ற பாடத்தை அண்ணுவின் செய்கை நமக்குப் படிப்பித்தது.

அண்ணு மேலுள்ள அளவுகடந்த பாசத்தினுல் நாம் சிலவற்றைக் கூறினேம். அவற்றை எக்காரணம் கொண்டும் வெளியிடுவதில்லை என்று எம்மிடம் வாக்களித்த அண்ணு' அவ்வாக்கைக் காற்றிலே பறக்கவிட்டார். எமது எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டார். 'தாயகம்' ஏடு தாங்கி வந்த செய்தி காங்கிரஸ் காரரிடமோ முதல் அமைச்சர் காமராஜ் அவர்களிடமோ எம்மை மீண்டும் அணுக முடியாது செய்து விட்டது.

(வளரும்)




நடிகையர் திலகத்துக்கு இணையாக வேருெருவர் இல்லை என்பதை, அப்பாவி வெகுளிப் பெண்ணுக "கை கொடுத்த தெய்வ"த்தில் தோன்றி நிரூபிக்கிறுர் சாவித்திரி. சினிமாஸ் அளிக்கும் 1964ம் ஆண்டின் சிறந்த படம் இதுவாகும்.

## 'நீதியின் நிழல்'

இம்மாத மத்தியில் மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நிகழவிருக்கும் இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக சமூக -அரசியல் மாநாட்டில் 'நீதியின் நிழல்' நாடகமும் இடம் பெறுகிறது.

தேசிய கலைப்பேரவையின் மூன்றுவது தயாரிப்பான இதில் மோகன், புதுமுகம் [illegible] டைரக்ஷன் பொறுப்புக்களை கலைச்செல்வன் ஏற்றுள்ளார்.



எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடுகிறுர் ராதா? என்டர் டெயின் மென்ட்ஸ் திரைக்கு விரைவில் வரவிருக்கும் பாலு புரடக்ஷன்ஸ் "விளக்கேற்றியவள்" தான் விடை கூறுவாள். ஜோஸப்தலியத் டைரக்ஷனில் உருவான மற்றுமொரு பொழுது போக்கும் படம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மின்சாரம் வேண்டும்'

'வட பகுதி மக்களின் தேவைக்கான மின்சாரத்தை விநியோகிக்க முடியாத நிலையில் சுன்னாகத்திலுள்ள மின்சார நிலையம் இருக்கின்றது. இதனால் வட பகுதி மக்களும், அப்பகுதிகளின் உள்ளூராட்சி மன்றங்களும் பெரும் நட்டமடைகின்றன. மின்சார விநியோகத்திற்கு என்று உள்ளூராட்சி மன்றங்கள் அரசாங்கத்திடம் பெற்ற கடனையும் அதற்குரிய வட்டியையும் திருப்பிக் கொடுக்க முடியாது தத்தளிக்கின்றன. ஆகவே, தேவையான மின்சாரத்தை வட பகுதிக்குக் கொடுக்கும்வரை உள்ளூராட்சி மன்றங்கள் இதற்கெனப்பெற்ற கடனையோ அல்லது அதற்கான வட்டியையே மின்சார திணைக்களம் அறவிடக் கூடாது' என்று மின்சார திணைக்களத்திற்கான நிதியொதுக்கல் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய உடுவிற்பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

# வடக்கின் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவும்

## பாராளுமன்றத்தில் உடுவில் பிரதிநிதி பேச்சு

வடபகுதிக்கான மின்சார விநியோகம் பற்றி திரு. தர்மலிங்கம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சின் விபரம் வருமாறு:

'இப்பொழுது இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசினர் மின்சாரத் திணைக்களத்திற்கு நிதி 'யொதுக்கல்' சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொண்டு நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. வட பகுதியில் மின்சார உற்பத்தி, விநியோக பற்றுக்குறை பற்றி இரண்டொரு கருத்துக்களை மாத்திரம் தெரிவிக்க விரும்புகின்றேன்.

'சமீபத்தில் கௌரவ காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் (கௌரவ சீ. பீ. டி. சில்வா) அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விசயம் செய்த பொழுது சுன்னாகத்திலேயுள்ள மின்சார உற்பத்தி நிலையத்தைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பும் வசதியும் அவருக்குக் கிடைத்தது. அவர் சுன்னாக மின்சார உற்பத்தி நிலையத்திற்கு வந்தபொழுது வட பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்கள், முக்கியமாக உள்ளூராட்சி மன்றங்கள் மின்சாரப் பற்றுக்குறை காரணமாகப்படும் கஷ்டங்களைப் பற்றி அவருக்கு விளக்கிக் கூறினோம். அதற்கிணங்க, மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை கௌரவ மின்சார அமைச்சரவர்கள் கூடிய சிக்கிரத்தில் எடுப்பாரென நம்புகிறேன்.

### உற்பத்தி போதாது

'சுன்னாகத்திலே தான் டவ பகுதிக்குத் தேவையான மின்சாரம் முழுவதும் உற்பத்தியாக்கப்படுகின்றது என்பது கௌரவ அமைச்சருக்குத் தெரியும். இன்று அங்கே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கென நான்கு இயந்திரங்கள் தான் இருக்கின்றன. இந்த நான்கு இயந்திரங்களும் ஒருமித்து வேலை செய்தால் நாளொன்றுக்கு 4,000 கிலோ வாட் மின்சாரம் தான் உற்பத்தியாக்கப்படும் என்பதை அமைச்சரவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த 4,000 கிலோ வாட் மின்சாரமும் இன்று யாழ்ப்பாணத்தின் தேவையைப் பூர்த்திசெய்யப் போதியதாகாது என்பதையும் அவருக்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

### உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு

'இன்று யாழ்ப்பாணத்திலே ஒன்பது கிராமச் சங்கங்களும், மற்றும் பல உள்ளூராட்சி மன்றங்களும் சுன்னாக மின்சார நிலையத்திலிருந்து மின்சாரத்தை வாங்குகின்றன. இந்த ஒன்பது கிராமச் சங்கங்களுக்கும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இன்று நாளொன்றுக்கு 4,000 கிலோ வாட் மின்சாரத்திலும் பார்க்கக் கூடுதலான மின்சாரம் தேவைப்படுகின்றது. கடந்த இரண்டரை, மூன்று ஆண்டுகளாக, இம் மன்றங்களை 'மிகவும் கவனமாக மின்சாரத்தைப் பாவிக்க வேண்டும், புதிய பாவனையாளர்களுக்கு மின்சாரம் விநியோகிக்கக் கூடாது' என்று மின்சார திணைக்களம் கட்டுப்படுத்தி வந்திருக்கின்றது. இதனால், தேவையானவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்க முடியாமல் உள்ளூராட்சி மன்றங்கள் கடந்த காலங்களில் மிகவும் கஷ்டப்பட்டு வந்திருக்கின்றன.

### தேவையை பூர்திசெய்ய முடியவில்லை

'நான் எனது பேச்சின் ஆரம்பத்தில் சுன்னாக மின்சார நிலையத்திலுள்ள நாலு இயந்திரங்களும் ஒரே நேரத்தில் வேலை செய்தால் தான் 4,000 கிலோ வாட் மின்சாரம் கிடைக்கும் என்று குறிப்பிட்டேன். ஆனால் அந்த நாலு இயந்திரங்களிலும் தினமொன்றுக்கு ஒரு இயந்திரத்தை ஓய்வெடுக்கச் செய்ய வேண்டும். அதனால், அந்த நாலு இயந்திரங்களில் ஒன்று மாறி ஒரு இயந்திரத்தை வேலை செய்யாமல் வைத்திருப்பது வழக்கம். அப்படி ஒன்று ஓய்வெடுக்க மற்ற மூன்றும் வேலை செய்வதால் 3,000 கிலோ வாட் மின்சாரம் தான் கிடைக்கின்றது. இதனால், எங்களுடைய தேவைக்குப் போதாத—மிகவும் குறைவான—மின்சாரம் தான் உற்பத்தியாக்கப்படுகின்றது. இதனால், யாழ்ப்பாணத்திலே எத்தனையோ பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்க முடியாத நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது.

### 'வந்ததும் பழுதடைந்தது'

'கடந்த 2, 3 ஆண்டுகளாக மேலும் இரண்டு மின்சார இயந்திரங்களை தாபிக்க அரசாங்கம் முயற்சித்தது. தாபித்த அடுத்த கிழமையிலேயே இவ்விரண்டும் பழுதடைந்து விட்டன. அவை இன்னமும் திருத்தப்படாமலிருக்கின்றன. பழுதடைந்த பகுதிகளை சேர்மனிக்கோ, வேறெங்கோ அனுப்பியிருக்கின்றார்கள். அவை இரண்டும் திருத்தப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை. எனவே, கூடிய விரைவில் இவ்வியந்திரங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். எல்லா இயந்திரங்களையும் உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும். அந்த ஆறு இயந்திரங்களும் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும் கூட இன்றைய யாழ்ப்பாணத்தின் தேவைக்குப் போதுமானதாகாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



### இலக்சபானவிலிருந்து..

'காணி அமைச்சர் அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்தபொழுது இலக்சபானவிலிருந்து மின்சாரத்தை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவர முயிற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிவித்தார். இவ்விடயத்தையொட்டி எவ்வளவு விரைவாக நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி நான் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இலக்சபான மின்சாரம் விரைவில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

### திண்டாட்டம்

'நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல உள்ளூராட்சி மன்றங்களே நாட்டின் பல பகுதிகளிலும் மின்சார விநியோகத்தைச் செய்கின்றன. இந்த உள்ளூராட்சி மன்றங்கள் அரசாங்கத்திடமிருந்து பெருந் தொகையான பணத்தைக் கடனாகப் பெற்றே தத்தமது பகுதிகளில் மின்சார விநியோகத்தை மேற்கொண்டிருக்கின்றன. இன்று மின்சார இலாகாவோ இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கெல்லாம் போதியளவு மின்சாரத்தை வழங்கத் தவறி விட்டது. இதனால் உள்ளூராட்சி மன்றங்கள் எமது திட்டங்கள் எல்லாவற்றையும் இலாபகரமாக நடத்த முடியாமல் திண்டாடுகின்றன.

### காரணம்

'மின்சாரம் தேவையென்று விண்ணப்பிப்பவர்கள் எல்லோருக்கும் இன்றுமின்சாரத்தை விநியோகிக்க முடியாத நிலையில் உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இதனால் இந்த மன்றங்கள் எல்லாம் பெரு நட்டத்திற்குட்படுகின்றன என்றால் அது மிகையான கூற்றாக இருக்க முடியாது. இதற்கு உள்ளூராட்சியை விடுத்துப் பொதுவாக அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் இவ்விதம் பாதிக்கப்படுவதற்கு மின்சார இலாகாவே காரணம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### மார்க்கம்

'இன்று எத்தனையோ உள்ளூராட்சி மன்றங்கள் தாம் அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடனையும் அதற்குரிய வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாமல் தத்தளிக்கின்றன. எனவே உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான மின்சாரத்தை விநியோகிக்கும் வரை அவை பெற்ற கடனையோ அல்லது அவற்றிற்குரிய வட்டியையோ மின்சார இலாகா அறவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.'

---

## கந்த முருகேசன்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் அபிமானிகளும் அண்மையில் கொழும்பில் கூடி முடிவு செய்துள்ளனர்.

அவர் வாழ்வைப் பகுதி பகுதியாகப் பிரித்து, அவரை நன்கறிந்த அறிஞர்கள், மாணவர்களிடமிருந்து கட்டுரைகளைப் பெறறு, அவற்றைத் தொகுத்து அவ்வக் கட்டுரையாசிரியர்கள் பெயரோடு வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆசிரியரின் இருபதாவது வயசுவரை முதற் பாகமும், இருபது முதல் முப்பதுவரை அடுத்த பாகமும், முப்பது முதல் நாற்பதுவரை மூன்றாம் பாகமும் நாற்பதுமுதல் ஐம்பதுவரை நான்காம்பாடமும், ஐம்பதுமுதல் இறுதிவரை இறுதிப் பாகமுமாய் எழுதுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

'தமிழ்த் தாத்தா', 'கவிஞர் திலகம்' என்றெல்லாம் போற்றி அவரைச் சூற்றி வளர்ந்த அறிஞர் மாணவர் கூட்டத்தினர் அன்போடு இந்த அழைப்பை ஏற்று 20-9-1965க்கு முன் கட்டுரைகளை அனுப்பி வைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி: செயலாளர், கந்த முருகேசன் வர [illegible], தயா வீதி, கொழும்பு-6.

---

## வாந்தி...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லுதல் அவசியமாகும்.

மேற்கூறிய விஷயங்களை ஒவ்வொரு பெற்றோரும் விதிப்படி ஒழுகிவரின் தங்கள் அருமருந்தன்ன குழந்தைகளின் வியாதிகளைத் தடுப்பது மாத்திரமல்ல, அவர்களை வலுவூட்டும் மக்களாகவும் ஆக்கமுடியும். இதுவே அறிவுடையபெற்றோரின் கடமையுங்கூட.

'மக்கள் மெய்தீண்டல்
உடற்கின்பம்
மற்றவை
சொற்கேட்டல்
இன்பம் செவிக்கு'

---

## [illegible]......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள சகல சைவசமய மாணவர்களும் இப்பரீட்சையிற் பங்குபற்றிப் பயனடைவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்துடன் மேற்படி பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவு திகதி 18-9-65 வரை பின்போடப்பட்டுள்ளது.

'பாடசாலைகளிலுள்ள சகல சைவசமய மாணவர்களையும் இப்பரீட்சையிற் பங்குபற்ற ஊக்கப்படுத்தி அவர்களது விண்ணப்பங்களை விண்ணப்ப முடிவுதிகதிவரை காத்திராமல் விரைவில் எமக்கு அனுப்பிவைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களையும், தலைமை ஆசிரியர்களையும் தயவுடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.'

---

## புத்தூருக்கு புதிய சமாதான நீதிபதி

திரு. சுப்பிரமணியம் சதாசிவம் அவர்கள் புத்தூர் பகுதிக்கு சமாதான நீதவானாக, யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவரின் பொதுநல சமய சேவைகளைப் பாராட்டும் முகமாகவே மேற்படி பதவிக்கு கௌரவ நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார். புத்தூர் கிராம சபையின் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

இவரின் பதவி காலத்திலேயே சிறுப்பிட்டி என்னும் இடத்தில் குறைந்த வருமான வர்க்கத்தின் வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. புத்தூர் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம், கூட்டுறவு சமாசம் ஆகியவைகளின் தலைவராக அவை தொடங்கிய காலம் தொட்டு பதவி வகித்து வருகிறார்.

இவர் உப்புக்கள மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொள்ளிவாய்ப் பிசாசு!

—மாஸ்டர் சிவலிங்கம்—

எங்கும் ஒரே பயங்கர இருள் மண்டிக்கிடந்தது. அப்போது நேரம் சுமார் ஒரு மணியிருக்கும். நடு இரவு வேளை. இலேசாக மழை தூறிக்கொண்டிருந்த அந்த அகால வேளையில்......! பனிரெண்டு வயது மதிக்கத்தக்க மூன்று சிறுவர்கள் அந்தப் பயங்கரக் காட்டுப் பாதையில் அஞ்சி நடுங்கியபடி ஓட்டமும் நடையுமாக விரைந்துகொண்டிருந்தனர். சற்றுத் தொலைவில் தென்பட்ட சுடலையைக் கண்டதும்......!

அவர்களுடைய நடை தளர்ந்து. அவர்களை அறியாது அவர்களுடைய உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. 'டேய்! நாம் கோயில் திருவிழாவிற்குப் போவதாகப் பொய் சொல்லிவிட்டு சினிமா இரண்டாவது காட்சிக்குப் போனது எவ்வளவு தவறானது என்பது இப்போதான்டா......' என்று நடுங்கியபடி கூறினான் ஒரு பையன்.

'படம் முடிந்து நாம் வருவதற்கிடையில் திருவிழா முடிந்து சனங்களெல்லாம் கலைந்து விட்டது நமது கெட்ட காலந்தான்டா.' என்று பெருமூச்சு விட்டான் மற்றொரு பையன் அப்போது......!

ஊமத்தங் கோழிகள் இரண்டு ஒன்றோடொன்று உக்கிரமாகச் சண்டையிட்டபடி பயங்கரக் கூச்சல் இட்டுக்கொண்டிருந்தது பையன்களை மேலும் நடுங்கவைத்தது. அதே நேரத்தில் அவர்கள் சுடலை ஓரத்தை அடைந்தனர்.

'டேய்! இந்தச்சாம வேளையிலே தானும் கொள்ளிவாய்ப் பிசாசு சுடலைப் பக்கம் வருவது எங்கபாட்டி பல தடவை கூறி இருக்கடா. அதனுடைய வாயிலிருந்து நெருப்புப் பற்றிக்கொண்டிருக்குமாம். யாராவது அந்த நேரத்தில் எதிரில் தென்பட்டால் உடனே எரிந்துச் சாம்பலாக்கி விடுமாம்.?' என்று ஒருவன் கூறி முடிப்பதற்குள்......

'ஐயோ கடவுளே!' என்று வீர்ட்டலறியடி மற்ற இரு சிறுவர்களும் வந்த வழியே திரும்பி ஓட ஆரம்பித்து விட்டனர்: காரணம்! சுடலையின் மத்தியிலிருந்து ஒரு சரிய உருவம் சிறுவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. அந்த உருவத்தினுடைய வாயிலிருந்து நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.' 'ஐயோ...... அம்மா......!' என்று அலறி அடித்துக்கொண்டு மற்றயவர்களும் திரும்பி ஓடினர்.

மேல்மூச்சு கீழ்மூச்சுவாங்க ஓடிக்கொண்டிருந்த சிறுவர்கள், எதிரில் வந்துகொண்டிருந்த சில மனிதர்களைக் கண்டதும் அப்படியே நின்றனர். அந்த மனிதர்களும் சினிமா பார்த்துவிட்டுவந்துகொண்டிருந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். அம்மனிதர்களில் ஒருவர் தான் வைத்திருந்த மின்பொறி விளக்கு வெளிச்சத்தைச் சிறுவர்கள் மீது செலுத்தினார். சிறுவர்கள் மூவரும் பேந்தப் பேந்த விளித்தபடி நடுங்கிக் கொண்டிருந்தனர். அம்மனிதர்களின் வேண்டுகோட்படி தங்கள் நிலையையும், தாங்கள் சுடலையில் கண்ட கொள்ளிவாய்ப் பிசாசைப் பற்றியும் விபரித்துக் கூறினான் ஒரு சிறுவன்.

'கோயிற் திருவிழாவிற்குப் போவதாசப் பொய் சொல்லிவிட்டுச் சினிமாவுக்குப் போனதற்குத்தான் உங்களுக்கு இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. சரிவாருங்கள் நாங்களும் அந்தக்கொள்ளிவாய்ப் பிசாசைப் பார்க்கத்தான் வேண்டும்...' என்று கூறியபடி நடந்தார் அக்கூட்டத்தில் வயது முதிர்ந்த ஒருவர். எல்லோரும் அவரைத் தொடர்ந்தனர்.

சுடலையை அடைந்ததும்! 'அதோ அந்தப் பிசாசு!' என்று ஒரே நேரத்தில் கத்தினார்கள் மூன்றுசிறுவர்களும். உடனே அம்மனிதர்களெல்லாம் வெடிச் சிரிப்புச் சிரிக்க ஆரம்பித்து விட்டனர். சிறிது நேரத்தில் சுடலையில் தென்பட்ட அந்த உருவம் அவர்களை நோக்கி வந்து விடயத்தைக் கேட்டதும் எழுந்து, விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டது. அந்த உருவம் சுடலைக் காவற்காரன் என்பதையும், அவனுடைய வாயில் எரிந்த சுருட்டுத்தான் தங்கள் பயந்த கண்களுக்கு நெருப்புக் கொள்ளியாகத் தெரிந்தது என்பதையும் சிறுவர்கள் பின்புதான் உணர்ந்து கொண்டனர்.


சொல்

?

வேட்டைப்

?

போட்டி



பள்ளிக்கூடம் போன பையன் இன்னும் வரக் காணோமே என்று அவனைத் தேடி மூன்று பென்ஸ் கார்களை அனுப்பிவிட்டார் அவன் பணக்கார அப்பா. ஒரேயொரு கார்தான் அவன் இருக்கும் இடத்தைப் போய்ச் சேர முடியும். எங்கே அந்தக் காரைக் கண்டு பிடித்து வழியையும் கீறி விடுங்கள் பார்க்கலாம்.

(இதை வரைந்தனுப்பியவர் பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த செல்வி மேரி அகத்தா பெர்னாண்டோ.)

## பாரோர் போற்றும் பெரியார்கள் (2)

# சவகர்லால் நேரு

—அன்ரனி பெர்னாண்டோ—

மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாகப் பாரத மாதாவின் மகிமைக்குப் பாத்திரமானவர் சவகர்லால் நேரு தான். உலக சமாதானத்திற்காகத் தன் இறுதி மூச்சுவரை உழைத்த நேரு உலக மக்களின் உள்ளங்களிலே ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

1889-அம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் நாள் அலகாபாத் என்னுமிடத்தில் மோதிலால் நேருவுக்கும் சொரூபாராணி அம்மையாருக்கும் புத்திரனாகப் பிறந்த நேரு. செல்வந்தரின் மகனாகப் பிறந்ததால் சகல வசதிகளுடனும் செல்லப் பிள்ளையாக வளர்ந்து பள்ளி சென்று படித்துவந்தார். பின்னர் மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்று நியாயவாதியாகப் பட்டம் பெற்றுத் திரும்பினார்.

இருபத்திமூன்று வயது இளைஞனாக இருக்கும்போது நியாயவாதியாகத் தன் தொழிலை ஆரம்பித்த நேரு நாளடைவில் நாட்டின் விடுதலைக்குப் போராட வேண்டுமென்ற ஆசை மேலிட அரசியலில் இறங்கினார். மிக விரைவிலேயே இவருக்கு காந்தி மகானைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. காந்திமகானின் அறப்போராட்டத்திலே சேருவம் குதித்துப் பாரத நாட்டின் விடுதலைக்காக ஓயாது உழைத்தார்.

இருபத்தைந்தாம் வயதில் புதுடில்லியில் வைத்து கமலா அம்மையாரை மணம் செய்துகொண்ட நேரு இல்லற வாழ்க்கையில் அதிக நேரத்தைச் செலவிட முடியாதவராய்ப் போராட்டப் பணிகளிலே கண்ணுங் கருத்துமாய் ஈடுபடலானார் போராட்டங்களில் ஈடுபட்டதால் இவரடைந்த இன்னல்களுக்கு அளவே இல்லை. பொலிசாரின் முரட்டுத்தனமான தாக்குதல்களுக்கு அளாகிக் காயமடைந்து இரத்தம் சிந்த நேர்ந்தது. பல முறை சிறை செல்லவும் நேர்ந்தது. நேரு தன் வாழ்நாளிலே சுமார் பதினைந்து ஆண்டுகளைச் சிறையிலே கழித்திருக்கிறார். வசதியாகப் பஞ்சணையில் படுத்துறங்க வேண்டியவர் தன் தாய்நாட்டின் மேல் கொண்ட அளவற்ற பற்றுதல் காரணமாக இந்தத் துன்பங்களைத் துரும்பாக நினைத்துப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார்.

பாரதநாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நேரு அதன் முதலமைச்சராக இருந்தார். பாரத நாட்டின் முதல் பிரதமர் என்ற பெருமை அவரையே சாரும். பாரதப் பிரதமரான நேரு தன் சுதந்திரத் தாய் நாட்டை வளமாக்குவதற்காகத் தன் வாழ்வைத் தொடர்ந்து அர்ப்பணித்தார் இவரது சேவை தாய் நாட்டின் நலத்தில் மட்டும் நிலைத்துவிடவில்லை. உலகம் அழிவுப் பாதையில் செல்வதைக் கண்டு இவர் கலக்கமடைந்தார். உலகில் சமாதானம் நிலைச் செய்வதற்காக இவர் அரும்பாடுபட்டார். இவரது பிரயாசை வீண்போகவில்லை. உலகம் முழுவதும் இவர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்தது. பாரதப் பிரதமர் நேருவைச் சமாதானத் தூதுவரெனப் பாரோர் போற்றிப் புகழ்ந்தனர்.

குழந்தைகள் என்றால் நேருவுக்குக் கொள்ளை ஆசை, குழந்தைகளைக் கண்டவுடன் அள்ளி அணைத்துக் கொஞ்சுவதிலே இவர் அளவற்ற இன்பத்தைக் கண்டார். எனவே, இவர் பிறந்த தினம் பாரதநாடு முழுவதிலும் குழந்தைகள் தினமாக மிகச் சிறப்பான முறையிலே கொண்டாடப்படுகிறது.

பதினேழு ஆண்டுகள் நவபாரதத்தின் பிரதமராக பணிபுரிந்துவிட்டு 1964-ம் ஆண்டு மே மாதம் 27-ம் நாள் 74 வயதான நேரு மரணத் திரையுள் மறைந்தார்.

## அண்ணாவின் அறிவுரைகள்

### முரண்பாடு

'மமதை கொள்ள மாட்டோம்; மக்களை மதித்து நடப்போம்: சீற மாட்டோம், மக்களின் சித்தப்படி நடப்போம், ஊராளவந்த உறுமிக் கொண்டிருக்கிறோம், உமது உண்மை ஊழியராக இருப்போம், அடக்குமுறை வீசோம்; அன்பு நெறி கொள்வோம், என்று இன்மொழி பலபேசி ஆட்சி மன்றம் ஏறிய பின், புருவத்தை நெரிக்கவும் கையை விரிக்கவும், முடுக்காக நடக்கவும், மக்களின் உரிமையை நசுக்கவும் முனைந்தால் மக்கள் மன வேதனை அடைவர்.'

### கோழைத்தனம்

'கொள்கையின் மீது அதிகார பலத்தையும், ஆட் பலத்தையும், பணபலத்தையும் ஏவிவிட்டு மகிழ்ந்திருமாந்திருப்பதற்குப் பெயர் நீதியுமாகாது—நேர்மையுமாகாது —வீரமுமாகாது. கொள்கையில் ஏற்பட்ட கோழைத்தனம் என்றே கூறுவர் அறிவுடையோர்.'

### குற்றவாளி

'செல்லாக் காசு கொடுத்து ஏமாற்றுபவன் மட்டுமல்ல, அந்தக் காசை வாங்கித் தட்டிப் பார்த்து 'பரவாயில்லையே! சத்தம் நன்றாகத்தான் இருக்கிறது! செல்லும் காசுதான்' என்று கடைக்காரருக்குத் தந்திரமாகக் கூறுபவனும் கூடத்தான் குற்றவாளி என்று அறநெறி அறிந்தோர் கூறுவர்.'

### எழுச்சி முழக்கம்

'அமைப்பு முறை என்றவாள்! அன்பு என்ற கேடயம்! கண்ணியம் என்ற கவசம்! கட்டுப்பாடு என்ற முரசம்! கடமையாற்றுவோம் என்ற முழக்கம்.'

தொகுத்தவர்:
கி. சண்முகலிங்கம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக்கணக்கான மக்களை அனுதினமும் கவர்ந்து வரும்

# 6-வது வெற்றி வாரம்!

**பார்த்தவர் பாராட்டுகின்றனர்! பார்க்காதோர் பார்க்கத் துடிக்கின்றனர்!**

நீங்கள் இன்னும் பார்க்கவில்லையா? அப்படியானல்—இன்றே குடும்பத்துடன் சென்று பாருங்கள்!







தயாரிப்பு:
**ஏ. எல். எஸ்.**

டைரக்ஷன்:
**பீம்சிங்**

## சாந்தி

பாடல்கள்:
**கண்ணதாசன்**

இசை:
**இரட்டையர்**


**சென்ட்ரல்** (மருதானை) **லவீனியா** (நுகேகொட) **ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருமலை) **லிபேர்டி** (ஹட்டன்) **மீபுர** (நீர்கொழும்பு) **சீகிரி** (பண்டாரவளை)

**உணர்ச்சி மிக்க நடிப்பு! உன்னத டைரக்ஷன்! உள்ளமுருக்கும் ஓவியம்!**

---

- **நட்பின் உயர்ச்சியைக் காட்டும் கதை!**
- **நடிப்புக்கு இலக்கணமான காவியம்!**
- **பண்புக்கு உறைவிடமான படம்!**

**1964ம் ஆண்டின் சிறந்த படத்துக்கான**
**ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரம்**
**உங்களை மகிழ்விக்க வந்துள்ளது!**



ஸ்ரீ பொன்னி புரடக்ஷன்ஸ்

# கை கொடுத்த தெய்வம்

சிவாஜி கணேசன், சாவித்திரி, ராஜேந்திரன், கே. ஆர். விஜயா, புஷ்பலதா,
எம். ஆர். ராதா, ரங்கராவ், சகஸ்ரநாமம், நாகையா
முதலிய முன்னணி நட்சத்திரங்களின் உயர்ந்த நடிப்புக்கு எடுப்பாக இலங்கும் சித்திரம்!

**கிங்ஸ்லி பிளாஸா நவா**

**விஜயா** [மட்டக்களப்பு] **ஸ்ரீகிருஷ்ணு** [திருகோணமலை] **மொடேர்ன்** [பதுளை] **மொடேர்ன்** [பண்டாரவளை]

**லட்சுமி** [இரத்தினபுரி] **விஜிதா** [அட்டன்] **தீபொளி** [நுவரெலியா]

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **3வது வாரம்**

---

**செப்டம்பர்**

# 17ம் திகதி முதல்

**மகத்தான ஆரம்பம்!**

**செல்லமஹால்** (கொட்டாஞ்சேனை)

**வின்ஸர்** [யாழ்ப்பாணம்] **இம்பீரியல்** [மட்டக்களப்பு] **நெல்சன்** [திருகோணமலை]

**தாஜ்மஹால்** [மாத்தளை]

ஆகிய திரைகளில்!

**முத்துராமன், சந்திரகாந்தா,**
**சௌகார் ஜானகி, மனோரமா,**
**வி. கே. ராமசாமி, எஸ். ராமராவ்**
மற்றும் பலர் நடித்த

## நினைப்பதற்கு நேரமில்லை




**இன்பமூட்டும்**
**இறுதிவாரம்!**

**செல்லமஹால்**
[கொட்டாஞ்சேனை]

**கல்யாண்குமார்**
**சரோஜாதேவி**
**நாகையா**
**புஷ்பவல்லி**
**உதயகுமார்**
**கிரிஜா**

தோன்றும்

## சிற்பியின் செல்வன்

[ஈஸ்ட்மென் கலர்]

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1965-ம் வருடம் செப்டெம்பர் மாதம் [illegible]-ம் திகதி [illegible]கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org